# பகுதி III

# பகுதி III

## 2001 ஆம் ஆண்டில் நாணயச் சபையால் மேற் கொள்ளப்பட்ட முக்கிய நிருவாக வழிமுறைகள்

## தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களும், சுற்றறிக்கைகளும், பணிப்புரைகளும், அறிவித்தல்களும்

**வங்கித் தொழில் திணைக்களம்**


**பக்கம்**

1. வெளிநாட்டு நாணயங்களின் நாளாந்த தொழிற்பாட்டு நிலுவைகளின் மீதான வரையறை
   – எண்: 01/ 01/ 002/ 0035/ 001 — i
2. வெளிநாட்டு நாணயங்களின் நாளாந்தத் தொழிற்பாட்டு நிலுவைகள் மீதான வரையறை
   எண்: 01/ 01/ 002/ 0035/ 001 — iii
3. ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம்
   – எண்: 01/ 02/ 005/ 0018/ 017 — iv
4. முற்பணங்கள் மீதான மத்திய வங்கியின் வட்டிவீதம்
   – எண்: 4278 — v
5. பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு கொடுகடன் எண் 3014சீஈ – கல்வி அமைச்சு – பொதுக் கல்வலிச் செயற்றிட்டம் 2
   – எண்: 01/ 02/ 005/ 0018/ 018 — vi
6. ஆசிய அபிவிருத்தி வங்கிக் கடன் எண் 1575 சிறி (எஸ்எப்) 3ஆவது நீர் வழங்கல் மற்றும் ஆரோக்கியத்துறைச் செயற்றிட்டம் இறக்குமதிகளுக்கான நடவடிக்கைமுறை
   – எண்: 01/ 02/ 005/ 0018/ 019 — viii
7. குவைத் தினார் நாணயத்தாள்களின் கொள்வனவுக்கான செலாவணி வீதம்
   – எண்: 01/ 02/ 005/ 0018/ 020 — xi
8. ஒதுக்குத் தேவைப்பாடுகள்
   – எண்: 01/ 02/ 005/ 0018/ 021 — xii
9. ஐரோப்பிய ஒற்றை நாணயத்தின் அறிமுகப்படுத்தல் "யூரோ"
   – எண் : 01/ 02/ 005/ 0018/ 022 — xiii
10. ஆசிய அபிவிருத்தி வங்கிக்கடன் எண் 1707 சிறி (எஸ்எப்) தேர்ச்சி அபிவிருத்திச் செயற்றிட்டம் இறக்குமதிகளுக்கான நடவடிக்கைமுறை
    – எண்: 01/ 02/ 005/ 0018/ 023 — xiv
11. முற்பணங்கள் மீதான மத்திய வங்கியின் வட்டிவீதம்
    – எண் : 4786 — xvii
12. வர்த்தக வங்கிகளிடமிருந்து வெளிநாட்டு நாணயத் தாள்களின் கொள்வனவிற்கான மத்திய வங்கியின் வீதங்கள் — xviii

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்


13. வர்த்தகப் பத்திரங்கள் ஏனைய வடிவங்களிலமைந்த வாக்குறுதிச் சான்றிதழ்களையும் வழங்குவதற்காக வழங்கப்பட்ட வசதிகள் மீதான வழிகாட்டல்கள்
எண் : 02/ 04/ 004/0005/001 xix

14. ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களை மீளப்பெறுதல்
எண் : 01/ 01/ 002/ 0034/ 001 xxiv

15. ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களை மீளப்பெறல்
எண் : 02/ 05/ 009/ 0100/ 001 xxvi

16. வெளிநாட்டுச் செலாவணியின் முன் விற்பனைகள் மற்றும் கொள்வனவுகள் xxvii

17. இறக்குமதி உண்டியல்களின் முற்கொடுப்பனவு xxx

18. 1988இன் எண் 30 கொண்ட வங்கித் தொழில் சட்டத்தின் 86ஆம் பிரிவின் கீழ் திரவச் சொத்துக்களின் வரைவிலக்கணம்
எண் : 02/ 04/ 002/ 0005/ 002 xxxi

19. வெளிநாட்டுச செலாவணி முன் விற்பனைகளும் கொள்வனவுகளும்
எண் : 02-/ 04/ 004/ 0009/ 001 xxxii

20. ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களை மீளப் பெறல்
எண் : 02/ 05/ 009/ 0100/ 001 xxxiv

21. வெளிநாட்டுச் செலாவணி முன் விற்பனைகள் மற்றும் கொள்வனவுகள்
எண் : 02/ 04/ 004/ 0009/ 001 xxxvii

22. ஆண்டறிக்கையில் மூலதனப் போதுமை பற்றிய அறிக்கையை வெளியிடுதல்
எண் : 02/ 04/ 002/ 0105/ 001
எண் : 02/ 04/ 002/ 0151/ 001 xxxviii

23. ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களை மீளப்பெறல்
எண் : 02/ 05/ 009/ 0100/ 001 xxxix

24. வெளிநாட்டுச் செலாவணி முன் விற்பனைகள் மற்றும் கொள்வனவுகள்
எண் : 02/ 04/ 004/ 0009/ 001 xli

25. பத்திரிகைகளில் நிதியியல் கூற்றுக்களை வெளியிடுவதன் மூலமான பொது வெளிப்படுத்துகை
எண் : 02/ 04/ 004/ 0007/ 001 xlii

26. இறக்குமதி உண்டியல்களின் முற்கொடுப்பனவு
எண் : 02/ 04/ 004/ 009/ 001 xlvii

27. ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களை மீளப்பெறல்
எண் : 02/ 05/ 009/ 0100/ 001 xlviii

28. பத்திரிகைகளில் வங்கிக் கணக்குகளை வெளியிடுவதன்
மூலமான பொது வெளிப்படுத்துகை
எண் : பீஎஸ்/ 62/ 97 xlix

29. வாடிக்கையாளரைப் பூரணமாகப் புரிந்துகொள்ளல்
"உங்கள் வாடிக்கையாளரைப் புரிந்து கொள்ளல்" நடைமுறைகள் l

30. வாடிக்கையாளரைப் பூரணமாகப் புரிந்துகொள்ளல்
"உங்கள் வாடிக்கையாளரைப் புரிந்து கொள்ளல்" நடைமுறைகள் மீதான வழிகாட்டல்கள்
எண் : 02/ 04/ 004/ 0012/ 001 li

31. 1995இன் 33ஆம் இலக்க வங்கித் தொழில் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான
1998இன் 30ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டம் - பணிப்புரை liv

32 1995இன் 33ஆம் இலக்க வங்கித் தொழில் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான
1998இன் 30ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டம் -அறிவித்தல் lv

**செலாவணிக் கட்டுப்பாட்டுத்திணைக்களம்**

33. பொருட்களின் கப்பலேற்றல் மற்றும் உள்நாட்டு வான்வழிக் கட்டணம்/
உள்நாட்டு ஏற்றுமதி முறிகள் / பொருட்களைக் கப்பலேற்றுபவர்களின்
பற்றுச்சீட்டுக்களின் வழங்கல்
எண் : 06/ 07/ 01/ 2001 lvi

34. சலுகை தீர்வையற்ற அடிப்படையில் வாகனங்களின் இறக்குமதி
எண் : 06/ 04/ 057/ 001/ 003 lvii

35. மீள் காப்புறுதி தொடர்பான பண அனுப்பல்களுக்கு அதிகாரம் வழங்குதல்
எண் : 06/ 02/ 02/ 2001 lviii

36. வதிவற்ற ரூபாக் கணக்குகளுக்காக வட்டிக் கொடுப்பனவுகள்
எண் : 06/ 04/ 04/ 2001 lix

37. பொருட்களின் கப்பலேற்றல் மற்றும் உள்நாட்டு வான் வழிப்பட்டியல்/
உள்நாட்டு ஏற்றுமதி முறிகள்/ கப்பலேற்றுவோரின் சரக்குப் பற்றுச்சீட்டுக்கள்
என்பனவற்றின் வழங்கல்
எண் : 06/ 07/ 03/ 2001 lx

38. வதிவற்ற இலங்கை முதலீட்டுக்கான ரூபாக் கணக்குகள் திட்டம் (ரன்சி)
எண் : 06/ 04/ 05/ 2001 lxi

39. செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் - 30.5.2001 நாளிடப்பட்ட எண் 1186/ 18
அறிவித்தலின்படி பிரிவுகள் 5. 21. மற்றும் 22 என்பனவற்றின் நியதிகளில்
தேவைப்படுத்தப்பட்ட அனுமதி lxiii

40. பண்டகசாலை களஞ்சிய வர்த்தகம்
எண் : 06/ 05/ 06/ 2001 lxv

41. வதிவற்ற இலங்கையர் முதலீட்டுக்கான ரூபா கணக்குகள் திட்டம் (ரன்சி)
எண் : 06/ 04/ 07/ 2001 lxvix

42. பொருட்களின் கப்பலேற்றலும் உள்நாட்டு வான் வழிப்பட்டியல்0/ உள்நாட்டு
ஏற்று முறிகள்/ கப்பலேற்றுவோரின் சரக்குப் பற்றுச்சீட்டுக்களின் வழங்கலும்.
எண் : 06/ 07/ 08/ 2001 lxx

43. பொருட்களின் கப்பலேற்றலும் உள்நாட்டு வான் வழிப்பட்டியல்0/ உள்நாட்டு
ஏற்று முறிகள்/ கப்பலேற்றுவோரின் சரக்குப் பற்றுச்சீட்டுக்களின் வழங்கலும்.
எண் : 06/ 07/ 10/ 2001 lxxi

44. இலங்கை அபிவிருத்தி முறிகள்
எண் : 06/ 04/ 11/ 2001 lxxii

45. செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் - 01.11.2001 நாளிடப்பட்ட எண் 1208/ 14
அறிவித்தலின்படி பிரிவுகள் 5. 7. 8. 11 மற்றும் 22 இன் உபபிரிவு (1) இன்
கீழான அனுமதி lxxv

46. பங்கு முதலீட்டு வெளிநாட்டு ரூபாக்கணக்கு
எண் : 06/ 02/ 12/ 2001 lxxvi

## வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்

47. நிதிக் கம்பனிகள் (வைப்புக்கள்) (திருத்தப்) பணிப்பு 2001ஆம் ஆண்டின் 1ஆம் இலக்கம் lxxviii
48. நிதிக் கம்பனிகள் (கடன்வழங்கல்) (திருத்தப்) பணிப்பு 2001ஆம் ஆண்டின் 2ஆம் இலக்கம் lxxix
49. நிதிக் கம்பனிகள் (முதலீடுகள்) (திருத்தப்) பணிப்பு 2001ஆம் ஆண்டின் 3ஆம் இலக்கம் lxxx
50. நிதிக் கம்பனிகள் (திரவச் சொத்துக்கள்) (திருத்தப்) பணிப்பு 2001ஆம் ஆண்டின் 4ஆம் இலக்கம் lxxxi
51. நிதிக் கம்பனிகள் (ஊக்குவிப்புத் திட்டங்கள்) பணிப்பு 2001ஆம் ஆண்டின் 5ஆம் இலக்கம் lxxxii
52. 2001ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (விளம்பரப்படுத்தல்) விதி lxxxiii
53. நிதி குத்தகைக்கு விடுதல் (கட்டண) ஒழுங்கு விதிகள் 2001ஆம் ஆண்டின் 1ஆம் இலக்கம் lxxxv
54. நிதிக் கம்பனிகள் (வட்டி) 2001ஆம்ஆண்டின் 6ஆம் இலக்கம் lxxxvii

**அந்தரங்கமானது**

தொடர்பு எண் :01/01/002/0035/001

வங்கித் தொழில் திணைக்களம்

2001 சனவரி 22

............................................................

............................................................

............................................................

அன்புள்ள ஐயா,

## <u>வெளிநாட்டு நாணயங்களின் நாளாந்த தொழிற்பாட்டு நிலுவைகளின் மீதான வரையறை</u>

2001 சனவரி 23ஆம் நாளிலிருந்து செயற்படும் வகையில் ஒவ்வொரு வேலைநாளிலும் உங்களது வங்கியின் அனைத்து வெளிநாட்டு நாணயங்களினதும் ஆகக்கூடிய தொழிற்பாட்டு நிலுவையாக ஐ.அ. டொலர் ...........மில்லியனுக்கு சமமான (ஐ.அ.டொலர் ............. மில்லியன் மட்டும்) தொகையொன்றினை மட்டுமே வைத்திருக்க வேண்டுமென நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 77இன் நியதிகளுக்கு இணங்க நாணயச்சபை தீர்மானித்துள்ளது என்பதை இத்தால் உங்களுக்கு அறியத்தரப்படுகின்றது. ஒவ்வொரு வேலைநாளிலும் இறுதியில் இந்த வரையறைக்கு ஏதேனும் தொகைகள் காணப்படின் அவற்றினை மத்திய வங்கிக்கு விற்பனை செய்யலாம்.

2. இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஒவ்வொரு வேலை நாளின் இறுதியிலும் உங்களது வங்கியின் வெளிநாட்டு நாணய நிலைமை தொடர்பாக தொடர்ந்து அறிவிக்கவும். அத்தகைய அறிக்கைகளின் சரியான தன்மையினை இந்த நோக்கத்துக்காக அங்கீகாரம் வழங்கப்பட்ட உங்களது வங்கியின் மூத்த அலுவலர் ஒருவர் அத்தாட்சிப்படுத்தல் வேண்டும்.

உங்கள் உண்மையுள்ள

வை. எம். டபிள்யூ. பீ. வீரசேகர

முதன்மைக் கணக்காளர்

**இணைப்பு**

## நாளாந்த வெளிநாட்டுச் செலாவணி நிலைமை தொடர்பான அறிக்கை

வங்கியின் பெயர்: ................................................................ திகதி : ..............................

| | | | ரூபா | ரூபா |
|---|---|---|---|---|
| 1. | நாளின் தொடக்கத்தில் தேறிய நிலைமை | | | |
| | (i) | வெளிநாட்டு நாணயச் சொத்துக்கள் | .............................. | |
| | (ii) | வெளிநாட்டு நாணயப் பொறுப்புக்கள் | .............................. | |
| | (iii) | வெளிநாட்டு நாணயச் சொத்துக்கள்/ பொறுப்புக்களின் தேறிய நிலைமை. (i) - (ii) | .............................. | |
| | (iv) | தேறிய முன்னோக்கிய நிலைமை | .............................. | |
| | (v) | பொதுவான நிலைமை 1 (iii) + (iv) | .............................. | .............................. |
| 2. | நாளின் உடன்/ நாணய காசு கொடுக்கல் வாங்கல்கள் | | | |
| | (i) | இலங்கை மத்திய வங்கிக்கான விற்பனைகள் | .............................. | |
| | (ii) | இலங்கை மத்திய வங்கியிலிருந்தான கொள்வனவு | .............................. | |
| | (iii) | இலங்கை மத்திய வங்கியுடனான தேறிய நிலைமை | .............................. | |
| | (iv) | ஏனைய வங்கிகளுக்கான விற்பனைகள் | .............................. | |
| | (v) | ஏனைய வங்கிகளுக்கான கொள்வனவுகள் | .............................. | |
| | (vi) | ஏனைய வங்கிகளுடனான தேறிய நிலைமை | .............................. | |
| | (vii) | வாடிக்கையாளர்களுக்கான விற்பனைகள் | | |
| | | (அ) இறக்குமதிகளுக்கு எதிராக | .............................. | |
| | | (ஆ) ஏனைய | .............................. | |
| | (viii) | வாடிக்கையாளரிடமிருந்தான கொள்வனவுகள் | | |
| | | (அ) ஏற்றுமதிகளுக்கு எதிராக | .............................. | |
| | | (ஆ) ஏனைய | .............................. | |
| | (ix) | வாடிக்கையாளர்களுடனான தேறிய நிலைமை | .............................. | |
| | (x) | மொத்தக் கொடுக்கல் வாங்கல்கள் - உடன் / நாணய காசு நாளின் (தேறிய) 2. (iii)+ (iv) + (ix) | | .............................. |
| 3. | நாளின் முன்னோக்கிய கொடுக்கல் வாங்கல் | | | |
| | (i) | இலங்கை மத்திய வங்கிக்கான விற்பனைகள் | .............................. | |
| | (ii) | ஏனைய வங்கிகளுக்கான விற்பனைகள் | .............................. | |
| | (iii) | ஏனைய வங்கிகளிலிருந்தான கொள்வனவுகள் | .............................. | |
| | (iv) | ஏனைய வங்கிகளுடனான தேறிய முன்னோக்கிய | .............................. | |
| | (v) | வாடிக்கையாளர்களுக்கான விற்பனைகள் | .............................. | |
| | (vi) | வாடிக்கையாளரிடமிருந்தான கொள்வனவுகள் | .............................. | |
| | (vii) | வாடிக்கையாளர்களுடனான தேறிய முன்னோக்கிய | .............................. | |
| | (viii) | நாளின் மொத்தக் கொடுக்கல் வாங்கல்கள் (தேறிய) - 3. (i)+ (iv) + (vii) | .............................. | |
| 4. | நாளின் இறுதியில் தேறிய நிலைமை 1.(v)+ 2 (x) +3 (viii) | | | .............................. |

மேலே குறிப்பிடப்பட்ட தகவல்கள் சரியானவை என அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

திகதி: அங்கீகரிக்கப்பட்ட கையொப்பம்

ஒவ்வொரு வேலை நாளின் முடிவிலும் தயவு செய்து மேலே குறிப்பிடப்பட்ட வடிவத்தை உரியமுறையில் பூர்த்தி செய்து முதன்மைக் கணக்காளர் இலங்கை மத்திய வங்கி 30 சனாதிபதி மாவத்தை கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும். தொலை நகல் 346282, 346284.

**இரகசியமானது**

தொடர்பு எண் : 01/01/002/0035/001

வங்கித் தொழில் திணைக்களம்
01 பெப்புருவரி 2001

..................................................................
..................................................................
..................................................................
..................................................................

அன்புள்ள ஐயா

**<u>வெளிநாட்டு நாணயங்களின் நாளாந்தத் தொழிற்பாட்டு நிலுவைகள் மீதான வரையறை</u>**

மேலே குறிப்பிடப்பட்ட விடயம் தொடர்பாக உங்களுக்கு அனுப்பப்பட்ட 01/ 01/ 002/ 0035/ 01 . 2001 சனவரி 22 நாளிடப்பட்ட மற்றும் 2001 சனவரி 26ஆம் நாளிடப்பட்ட எனது கடிதங்களுக்கு மேலதிகமாக

2001 சனவரி 26ஆம் நாள் நடைபெற்ற மத்திய வங்கியுடனான தமது கூட்டத்தில் இலங்கை வெளிநாட்டுச் செலாவணி வணிகர்கள் சங்கம் கேட்டுக் கொண்டதற்கமைய தமது நேர்கணிய வெளிப்பாட்டு நிலைமையினை தற்போதுள்ளதுபோலவே மாற்றமின்றி வைத்திருக்கின்ற வேளையில் வர்த்தக வங்கிகளுக்கு பாரிய தேறிய எதிர்கணிய வெளிப்பாட்டு வரையறைகளை அனுமதிப்பதற்கு இலங்கை மத்திய வங்கி தீர்மானித்துள்ளது என்பதை உங்களுக்கு அறியத்தர விரும்புகின்றேன். அதன்படி 2001 பெப்புருவரி 02ஆம் நாளிலிருந்து செயற்படும் வகையில் உங்களது தேறிய எதிர்கணிய வெளிப்பாட்டு வரையறை ஐ.அ.டொலர் .............. மில்லியனுக்கு சமமான தொகையொன்றுக்கு (ஐ.அ.டொலர் .............. ) மட்டுமே நிலைப்படுத்தப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிடப்பட்ட 2001 சனவரி 22ஆம் நாளிடப்பட்ட எனது கடிதத்தின் இணைப்பில் குறிப்பிடப்பட்டவாறு தயவு செய்து நாளாந்த தேறிய வெளிநாட்டுச் செலாவணி நிலைமையினை தொடர்ந்து அறிவிக்கவும். அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை என்பதை இந்த நோக்கத்துக்காக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள உங்களது மூத்த அலுவலர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

உங்கள் உண்மையுள்ள

வை. எம். பீ. ஏ. வீரசேகர

முதன்மைக் கணக்காளர்

தொடர்பு அறிவுறுத்தல்கள் எண் 01/ 02/ 005/ 0018/017

வங்கித் தொழில் திணைக்களம்

01 மார்ச்சு 2001

அனைத்து வர்த்தக வங்கிகளுக்கும்

## ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம்

1995 திசெம்பர் 14ஆம் நாளிடப்பட்ட எண் பீடீ/09/95 கொண்ட எமது தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு மேலதிகமாக, ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் பணிப்பாளர் சபையினால் மேற் கொள்ளப்பட்ட தீர்மானமொன்றின் நியதிகளின்படி ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய உறுப்புரிமை கொண்ட அனைத்து மத்திய வங்கிகளும் நொஸ்ரோ கணக்குகளுக்கு நிதியிடுவதற்காக உடன் அடிப்படையிலான கொடுக்கல் வாங்கல்களுக்கு மேலதிகமாக நாளைய அடிப்படையிலான கொடுக்கல் வாங்கல்களை நடைமுறைப்படுத்துவதற்கு இணங்கியுள்ளன என அறியத்தர விரும்புகின்றேன்.

இதன்படி, 2001 மாச்சு 01ஆம் நாளிலிருந்து செயற்படும் வகையில் மேலே குறிப்பிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் பந்தி 3. vi பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளது என அனைத்து வர்த்தக வங்கிகளுக்கும் இத்தால் அறியத்தரப்படுகின்றது.

பந்தி 3. vi இனை அகற்றி பின்வரும் பந்தியை பதிலீடு செய்யவும் "3. vi இந்த சுற்றறிக்கையின் நோக்கங்களுக்கான பெறுமதித் திகதி உடன் பெறுமதித் திகதி அல்லது நாளைய பெறுமதித் திகதியாகும் "

கே. ஆர். எம். சிறிவர்த்தன

மேலதிக முதன்மைக் கணக்காளர்

சுற்றறிக்கை எண்: 4278

வங்கித் தொழில் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
8ஆம் மாடி
அ.பெ. 590
30 சனாதிபதி மாவத்தை
கொழும்பு 1

2001 யூலை 02

உரிமம் பெற்ற அனைத்து வர்த்தக வங்கிகளுக்கும்

## முற்பணங்கள் மீதான மத்திய வங்கியின் வட்டி வீதங்கள்

பின்வருவனவற்றைப் பிணையாக வைத்து இலங்கை மத்திய வங்கியிலிருந்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் பெற்றுக் கொண்ட முற்பணங்களுக்கான வட்டி வீதம் 2001 யூலை 02ஆம் நாளிலிருந்து செயற்படும் வகையில் ஆண்டொன்றுக்கு இருபத்து மூன்று (23) சதவீதமாக அமையும்.

அ) அரசாங்க மற்றும் அரசாங்க உத்தரவாதமளிக்கப்பட்டுள்ள பிணையங்கள்

ஆ) வர்த்தகப் பத்திரங்கள் மற்றும் உற்பத்திக் கடன்கள் தொடர்பான சலுகைக்காலம் வழங்கப்பட்ட உத்தரவாதப் பத்திரங்கள்.

வை. எம். பீ. ஏ. வீரசேகர
முதன்மைக் கணக்காளர்

ஏ. எஸ். ஜயவர்த்தன
ஆளுநர்

தொழிற்பாட்டு அறிவுறுத்தல் எண் : 01/ 02/ 005/0018/018

வெளிநாட்டு நிதிப் பிரிவு
வங்கித் தொழில் திணைக்களம்
2001 யூலை 03

முகாமையாளர்
இலங்கை வங்கி
சருவதேச பிரிவு
நுகேகொட

அன்புள்ள ஐயா,

## பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு கொடுகடன் எண் 3014சீஈ – கல்வி அமைச்சு – பொதுக் கல்விச் செயற்றிட்டம் 2

உலக வங்கியின் பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட தலைப்பிடப்பட்ட கடனின் கீழான இறக்குமதிகள் தொடர்பாக பின்வரும் நடவடிக்கை முறைகள் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும்.

1. செயற்றிட்டப் பணிப்பாளர் பொதுக்கல்லி செயற்றிட்டம் 2 கல்வி அமைச்சு "இசுருபாய" பத்தரமுல்ல இனது சார்பில் தங்களது வங்கியினால் நிறுவப்பட்ட உறுதிப்படுத்தப்பட்டதும் கைமீட்புச் செய்ய இயலாததும் துணை நாடாததுமான நாணயக் கடிதங்களுக்கெதிராக இறக்குமதிகளை மேற்கொள்ளலாம்.

2. நாணயக் கடிதங்களைத் திறப்பதற்கு தங்களுடைய வங்கிக்குரிய மேலாண்மையானது "ப.அ. அமைப்பு கொடுகடன் 3014 சீஈ - பொதுக்கல்வி செயற்றிட்டம் 2" என்ற தலைப்பின் கீழ் வெளிநாட்டு மூலவளங்களின் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கடிதங்களேயாகும்.

3. தங்களது வங்கியினால் திறக்கப்பட்ட ஒவ்வொரு நாணயக் கடிதமும், என்னால் வேறு வகையில் மதியுரை வழங்கப்பட்டாலன்றி, கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் வங்கிக்கு பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பினால் செலவீடு மேற்கொள்ளப்படுமென்பதனைக் குறிப்பிடுவதோடு, பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பானது கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடும் வங்கியின் சார்பில் தனது சிறப்புக் கடப்பாட்டினை வழங்கும்போதே நாணயக் கடிதம் தொழிற்படத் தொடங்கும் என்பதனையும் கவனித்தல் வேண்டும்.

4. உங்கள் வாடிக்கையாளர்களினால் படிவம் 1931இல் (பிரிவெடை இணைக்கப்பட்டுள்ளது) பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பிற்குச் செய்யப்படும் சிறப்புக் கடன்பாடுகளுக்கான விண்ணப்பங்கள் பின்வரும் ஆவணங்களையும் சான்றுகளாக கொண்டிருத்தல் வேண்டும்.

(அ) மேற் கொள்ளப்பட வேண்டிய கொடுப்பனவு தொடர்பான ஒப்பந்தத்தின் அல்லது கொள்வனவுக் கட்டளையின் பிரதி ஒன்று

(ஆ) தங்களது வங்கி வழங்க உத்தேசித்துள்ள நாணயக் கடிதங்களின் இரண்டு பிரதிகள்

5. கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடும் வங்கியானது ஒவ்வொரு நாணயக் கடிதத்திலும் மேற் கொள்ளப்பட்ட அனைத்துத் திருத்தங்களினதும் பிரதிகளை பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பிற்கு வழங்க வேண்டுமென ஆலோசனை வழங்கப்பட வேண்டும். பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பானது பின்வரும் திருத்தங்கள் தொடர்பில் தனது எழுத்து மூலமான ஒப்புதலை வழங்கும்.

(அ) நாணயக்கடிதத்தின் பெறுமதி

(ஆ) பொருட்களின் விபரம் அல்லது அளவு

(இ) நன்மை பெறுநர் : அல்லது

(ஈ) நாணயக் கடிதத்தின் செல்லுபடியாகும் திகதியை அதன் மூலத் திகதிக்கு அப்பால் ஆறு மாதங்களுக்கு மேலாக அல்லது பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பினால் வழங்கப்பட்ட சிறப்புக் கடப்பாட்டில் குறிப்பிடப்பட்ட திகதிக்கு அப்பாலோ நீடித்தல்

ஏனைய் எந்தத் திருத்தங்களும் பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பின் முன் ஒப்புதல் தேவையில்லை.

6. தலைப்பிடப்பட்ட தொடர் கடனானது சிறப்பு எடுப்பனவு உரிமையில் வகைப்படுத்தப்பட்டமையால். வேறொரு நாணயத்தில் வெளிப்படுத்தப்பட்ட நாணயக் கடிதங்களைப் பொறுத்தவரையில். பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பானது கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடும் வங்கிக்கான தனது சிறப்புக் கடப்பாட்டுப் பத்திரங்களில் சிஎஉ கடப்பாடு பற்றி. தனிப்படக் குறிப்பிடும். தனது கடப்பாட்டினை இவ்வாறு மட்டுப்படுத்துவதன் காரணமாக பன்னாட்டு அபிவிருத்தியமைப்பானது நாணயக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டவாறு வெளிநாட்டிலுள்ள தங்களது பேராளருக்கு வெளிநாட்டு நாணயத்தின் முழுத் தொகையும் வழங்காதுவிட்டால் செலாவணிக் கட்டுப்பாட்டாளரினால் இது தொடர்பில் தங்களுக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கிணங்க கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடும் வங்கிக்குரிய நிலுவையை தாங்கள் செலுத்தலாம்.

7. இக் கொடுகடனின் கீழ் இறக்குமதிகளை மேற்கொள்ளும் இறக்குமதியாளர்கள் அரசாங்கத்தின் இணைக்கிணை நிதியக் கணக்கில் உட்படுத்தப்பட்டுள்ள கப்பற்படுத்தல் ஆவணங்களின் ரூபாப் பெறுமதியினைச் செலுத்த வேண்டியதில்லை. எனவே அத்தகைய ஆவணங்கள் பெறப்பட்டவுடனேயே உங்களுக்கு அல்லது கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் வங்கிக்குச் சேரவேண்டிய தரகுகள். கட்டணங்கள் ஏதேனும் இருப்பின் அவற்றை அறவிட்ட பின்னர் அத்தகைய ஆவணங்களை உங்களது வாடிக்கையாளர்களுக்கு நீங்கள் விடுவிக்கலாம்.

8. ஏதேனும் திருத்தங்கள் இருப்பின் அவற்றுடன் நாணயக் கடிதங்களின் பிரதிகள் கொழும்பு, இலங்கை மத்திய வங்கியின் முதன்மைக் கணக்காளருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

9. இது தொடர்பான செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் தேவைப்பாடுகள் உங்களுக்குக் தனியாக அறிவுறுத்தப்படும்.

உங்களின் உண்மையுள்ள

வை. எம். டபிள்யூ.பி. வீரசேகர

முதன்மைக் கணக்காளர்

1. பிரதிகள்

1. செலாவணிக் கட்டுப்பாட்டாளர்
2. செயற்றிட்டப் பணிப்பாளர்
   பொதுக் கல்விச் செயற்றிட்டம் 2
   கல்வி அமைச்சு
   "இசுருபாய"
   பத்தரமுல்ல
3. முகாமையாளர்
   இலங்கை வங்கி இறக்குமதித் திணைக்களம்
   மெட்ரோபொலிட்டன் கிளை
   யோர்க் வீதி, கொழும்பு.

தொழிற்பாட்டு அறிவுறுத்தல் எண்: 01/ 02/ 005/ 0018/ 019

வங்கித் தொழில் திணைக்களம்

05 செத்தெம்பர் 2001

முகாமையாளர்

இலங்கை வங்கி

மாநகரப் பிரிவு

கொழும்பு 1

அன்புள்ள ஐயா

**ஆசிய அபிவிருத்தி வங்கிக் கடன் எண் 1575 சிறி (எஸ்எப்) 3 ஆவது நீர் வழங்கல் மற்றும் ஆரோக்கியத்துறைச் செயற்றிட்டம் இறக்குமதிகளுக்கான நடவடிக்கைமுறை**

3ஆவது நீர்வழங்கல் ஆரோக்கியத்துறை செயற்றிட்டத்திற்காக சிஎஉ 54937000 இற்குச் சமமான தொகையொன்றினை ஐம்பத்து நான்கு மில்லியன் தொளாயிரத்து முப்பத்தேழாயிரம் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுக்குக் கடனாக வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி (இதன் பின்னர் ஆஅவ எனக் குறிப்பிடப்படும்) இணங்கியுள்ளது. இச் செயற்றிட்டம் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் (இதன் பின்னர் தே.நீ.அ.வ.ச) எனக் குறிப்பிடப்படும்) செயற்படுத்தப்படுவதுடன், செயற்றிட்டத்திற்கான உபகரணங்களின் இறக்குமதிக்காக இக் கொடுகடனின் ஒரு பகுதியைப் பயன்படுத்தும். இச் செயற்றிட்டத்தின் கீழான இறக்குமதிகளைக் கையாளும்போது பின்வரும் நடவடிக்கை முறையினைப் பின்பற்றுமாறு நீங்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

2. இணைப்பு 1இல் காட்டப்பட்டபடி தகைமைபெற்ற மூல நாடுகளிலிருந்தான அனைத்து இறக்குமதிகளும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் விண்ணப்பத்தின் மீது உங்களது வங்கியினால் நிறுவப்பட்ட உறுதிப்படுத்தப்பட்ட கைமீட்புச் செய்ய இயலாத துணைநாடாத நாணயக் கடிதங்களுக்கு எதிராகவே மேற்கொள்ளப்படல் வேண்டும். ஒவ்வொரு நாணயக் கடிதமும் பின்வரும் உறுப்புரையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

> "இந்த நாணயக் கடிதம் ஆசிய அபிவிருத்தி வங்கிக் கடன் எண் 1575 சிறி (எஸ்எப்) இன் கீழ் நிறுவப்பட்டுள்ளதோடு ஆசிய அபிவிருத்தி வங்கியினால் அறிவிக்கும்/ உறுதிப்படுத்தும் வங்கிக்கு கடப்பாட்டுக் கடிதம் வழங்கப்படும்போது மட்டுமே பயனுறுவதாக அமையும். கொடுப்பனவுக்காக கடப்பாட்டுக் கடிதத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்"

நாணயக் கடிதத்தில் மேலே குறிப்பிடப்பட்ட வாசகம் உள்ளடக்கப்பட்டிராவிட்டாலும்கூட கொடுக்கல் வாங்கலுக்கு நிதியிடுவதற்கான உங்களது கடன்பாட்டின் உறுதியின்மீது உடனடியாக செயற்படக் கூடியதாக இருக்கும். எனினும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடப்பாடு வழங்கப்படும்போது நிதியிடல் கடப்பாடு ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு நகர்த்தப்படும். இந்த விடயத்தில் நாணயக் கடிதம் பின்வரும் வாசகத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

> "இந்த நாணயக் கடிதத்திற்கான நிதியிடல், இலங்கை, கொழும்பு, இலங்கை வங்கியின் கூட்டுக் கிளையினால் மேற் கொள்ளப்படும். எனினும், இது ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் எண் 1575 சிறி (எஸ்எப்) இன்கீழ் நிறுவப்பட்டுள்ளதுடன் அறிவுறுத்தும்/ உறுதிப்படுத்தும் வங்கிக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி அதனது கடப்பாட்டுக் கடிதத்தினை வழங்கும்போது, பின்னையது கடப்பாட்டுக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்ற வேண்டியதுடன் கொடுப்பனவினை/செலவீட்டை ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து கோரவேண்டும்."

உங்களது நாணயக் கடிதத்தின் இரண்டு பிரதிகள் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு

அனுப்பி வைக்கப்பட வேண்டியதோடு இச்சபை ஆசிய அபிவிருத்தி வங்கியினால் உங்களது பேராளருக்கு முறைசார்ந்த கடப்பாட்டுக் கடிதத்தினை வழங்குவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளும். தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் வேண்டுகோளுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி இணங்குமாயின் இந்தக் கடிதத்தின் இணைப்பு 2இல் காட்டப்பட்டுள்ளவாறான படிவத்தில் பெயர் குறிப்பிடப்பட்ட வர்த்தக வங்கிக்கு, ஆசிய அபிவிருத்தி வங்கி அதனது முறைசார்ந்த கடப்பாட்டுக் கடிதமொன்றினை வழங்கும்.

3. (ii) நாணயக் கடிதத்தில் பின்வருவனவற்றை உட்படுத்தும் திருத்தங்களுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் எழுத்து மூலமான ஒப்புதல் தேவைப்படும்.

(அ) நாணயம் மற்றும் நாணயக் கடிதத்தின் தொகை என்பனவற்றை உள்ளடக்கிய கொடுப்பனவு நியதிகள்.

(ஆ) விளக்கக் குறிப்பு அல்லது பொருட்களின் தொகை

(இ) நன்மை பெறுநர்

(ஈ) மூலநாடு; மற்றும்

(உ) இறுதி நாளுக்கு அப்பால் அதாவது கடன் கணக்கிலிருந்து எடுப்பனவுக்கான இறுதி நாளாகிய 2005 யூன் 30ஆம் நாளுக்கு அப்பால் நாணயக் கடிதத்தில் காலாவதித் திகதியின் நீடிப்பு

மேலே (அ) இலிருந்து (உ) வரையிலானவற்றில் உள்ளடக்கப்படாத திருத்தங்களுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஒப்புதல் தேவைப்படமாட்டாது. மேலே குறிப்பிடப்பட்ட திருத்தங்களின் ஒப்புதலுக்கான கோரிக்கைகள் இந்தக் கடிதத்தின் இணைப்பு 3இல் காட்டப்பட்ட படிவத்தில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் உங்களினால் கைச்சாத்திடப்பட்ட திருத்தத்தின் பிரதியும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அத்தகைய விடயங்களில் நாணயக் கடிதத்திற்கான திருத்தமானது பின்வரும் ஏற்பாட்டினை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

"இந்தத் திருத்தமானது ஆசிய அபிவிருத்தி வங்கியினால்ஒப்புதல் வழங்கப்படும்போது பயனுறுவதாக அமையும்"

ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஒப்புதல் வழங்கப்பட்டால் இக்கடிதத்தின் இணைப்பு 4இல் காட்டப்பட்டுள்ள படிவத்தில் உங்கள் வங்கியினது பேராளருக்கும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கும் தெரியப்படுத்தப்படும்.

(ii) ஆசிய அபிவிருத்தி வங்கியின் முன் ஒப்புதல் இன்றி கடன் கணக்கிலிருந்து எடுப்பனவுக்கான கடைசித் திகதிவரை காலாவதியாகும் தினமும் கப்பலேற்றும் தினமும் நீடிக்கப்படலாம். அத்தகைய நீடிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்குமிடத்து வங்கியின் மேலாண்மை பெற்ற அலுவலகரொருவரினால் பொருத்தமான முறையில் கைச்சாத்திடப்பட்ட நீடிப்பின் பிரதியொன்று இணைக்கப்பட்டதும், இக்கடிதத்தின் இணைப்பு 3இல் காட்டப்பட்டுள்ளதுமான படிவத்தில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும். ஆசிய அபிவிருத்தி வங்கியின் முன் ஒப்புதலுக்கு உட்படுத்தப்பட்டாலும் உட்படுத்தப்படாவிட்டாலும் ஒவ்வொரு திருத்தத்தினதும் இரண்டு பிரதிகள் உங்களது வங்கியினால் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டியதோடு தேவையானவிடத்து ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஒப்புதல் வழங்கலுக்காக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை ஒழுங்குகளை மேற்கொள்ளும்.

4. ஆசிய அபிவிருத்தி வங்கியினால் கடப்பாட்டுக் கடிதம் வழங்கப்பட்டுள்ள நாணயக் கடிதத்தின் நியதிகளின்படி நன்மை பெறுநருக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்ளும்போது, உங்களது வங்கியின் பேராளர், சம்பந்தப்பட்ட ஆவணங்களை உங்களுடைய வங்கிக்கு அனுப்பி வைக்க வேண்டியதோடு, இக்கடிதத்தின் இணைப்பு 5இல் காட்டப்பட்டுள்ள படிவத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து செலவீட்டைக் கோரவேண்டும். செலவீட்டுக்கான கோரிக்கையின் பிரதியொன்றினையும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு உங்களது வங்கியின் பேராளர் அனுப்பி வைத்தல் வேண்டும். உடனடியான பகிர்ந்தளிப்புக்கு வசதி செய்து கொடுப்பதற்காக இந்தக் கடிதத்தின் இணைப்பு 6இல் காட்டப்பட்டுள்ள படிவத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு உங்களது வங்கியின் பேராளர் உறுதிப்படுத்தப்பட்ட சுவிப்ட், ரெலெக்ஸ் அல்லது கேபிள் மூலமான கோரிக்கையொன்றினை அனுப்பி வைக்கலாம். உங்களது வங்கியின் பேராளருக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி செலவீட்டை மேற் கொண்டுள்ளதா என்பதை அதிகூடிய விரைவில் உங்களுக்கு அறிவிப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட வேண்டியதோடு, ஆசிய அபிவிருத்தி வங்கியினால் உங்களது பேராளருக்கு செலவீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது என நீங்கள்

திருப்திப்படும்வரை கப்பலேற்றல் ஆவணங்களை நீங்கள் வைத்திருத்தல் வேண்டும். ஆவணங்களை விடுவிக்கும் நேரத்தில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையிலிருந்து எத்தகைய இணைக்கிணை நிதியமும் சேகரிக்கப்படலாகாது.

5. கப்பலேற்றும் ஆவணங்களுக்கும், நாணயக் கடிதங்களின் நியதிகளுக்குமிடையில் ஏதேனும் வேறுபாடுகள் காணப்படின், கொடுப்பனவுக்கான கோரிக்கையினை ஏற்றுக் கொள்ளுவதற்கோ அல்லது (கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும்) வர்த்தக வங்கியினால் வழங்கப்பட்ட அல்லது புறக்குறிப்பீடு செய்யப்பட்ட இழப்பீட்டுக் கடிதத்தினை ஏற்றுக் கொள்ளுவதற்கோ ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு இயலாது காணப்படும். அத்தகைய சந்தர்ப்பத்தில், கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் வர்த்தக வங்கி, அத்தகைய வேறுபாடுகளின் மத்தியிலும் கொடுப்பனவினை மேற் கொள்ளுவதற்காக உங்கள் வங்கியின் மூலமாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் அங்கீகாரத்தினைக் கோரலாம்.

உங்களது வங்கியுடன் கலந்தாலோசித்து தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை கொடுப்பனவுக்கான அங்கீகாரத்தினை வழங்கிய பின்னர் அத்தகைய வேறுபாடு சம்பந்தமாகவும், கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் வங்கிக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டமை தொடர்பாகவும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு கேபிள் மூலம் அறிவித்தல் வேண்டும்.

6. ஆசிய அபிவிருத்தி வங்கியினால் ஐக்கிய அமெரிக்க டொலர் அல்லாத நாணயமொன்றினால் கடப்பாடு வழங்கப்பட்டிருக்கும் வேளையில், அத்தகைய கடப்பாட்டின்கீழ், கொடுப்பனவுக்காக ஐக்கிய அமெரிக்க டொலர் அல்லாத நாணயம் கிடைக்கத்தக்கதாக இருக்குமென ஆசியஅபிவிருத்தி வங்கி எதிர்பார்க்கும் செலாவணி வீதத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்ட ஐக்கிய அமெரிக்க டொலருக்குச் சமமான தொகையினை கடப்பாட்டுக் கடிதம் குறித்துரைக்கும். உங்களது வங்கியின் பேராளர்களில் எவரேனும் ஐக்கிய அமெரிக்க டொலர் அல்லாத நாணயத்தில் கோரிய ஏதேனும் குறிப்பிட்ட உரிமை கோரல் விடயத்தில், ஐக்கிய அமெரிக்க டொலருக்குச் சமமான தொகை ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடப்பாட்டின்கீழ் கிடைக்கத்தக்கதாகவுள்ள தொகையினை விஞ்சுமேயானால் ஆசிய அபிவிருத்தி வங்கியானது கிடைக்கத்தக்கதாகவுள்ள ஐக்கிய அமெரிக்க டொலரின் அளவுக்கு ஐக்கிய அமெரிக்க டொலர் அல்லாத நாணயங்களின் செலவீட்டை மட்டுப்படுத்தும். இதன் காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணத்தினால் உங்களது நாணயக் கடிதத்தின் நியதிகளுக்கு இணங்க மேற் கொள்ளப்பட்ட உரிமை கோரல் சம்பந்தமாக உங்களது வங்கியின் பேராளருக்கான முழுமையான செலவீட்டை அல்லது பகுதியொன்றினைச் செலுத்துவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி மறுப்புத் தெரிவிக்குமேயானால் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் அனுமதிக்கப்படாத தொகையினை உங்கள் வங்கியின் பேராளருக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம். இந்த நோக்கத்திற்காக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையுடன் நீங்கள் தேவையான ஒழுங்குகளை மேற் கொள்ளலாம்.

7. இது தொடர்பான செலாவணிக் கட்டுப்பாட்டுத் தேவைப்பாடுகள் தொடர்பாக செலாவணிக் கட்டுப்பாட்டாளர் உங்களுக்கு அறிவிப்பார்.

8. உங்களது வங்கியின் அனைத்துக் கட்டணங்களும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் கணக்கிற்காக இருத்தல் வேண்டும்.

உங்களின் உண்மையுள்ள

வை.எம். டபிள்யூ. வீரசேகர

முதன்மைக் கணக்காளர்

பிரதி: 1. செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

2. செயற்றிட்டப் பணிப்பாளர்

3ஆவது நீர் வழங்கல் ஆரோக்கியத்துறைச் செயற்றிட்டம்

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை

காலி வீதி, இரத்மலானை.

தொடர்பு அறிவுறுத்தல்கள் எண் 01/ 02/ 005/ 0018/020

வங்கித் தொழில் திணைக்களம்
05 ஒத்தோபர் 2001

அனைத்து வர்த்தக வங்கிகளுக்கும்

## குவைத் தினார் நாணயத்தாள்களின் கொள்வனவுக்கான செலாவணி வீதம்

மேலே குறிப்பிடப்பட்ட விடயம் தொடர்பாக 1990 ஒத்தோபர் 16ஆம் நாளிடப்பட்ட எண் 2657, 2658, 1990 ஒத்தோபர் 25ஆம் நாளிடப்பட்ட எண் 2666, 1991 மாச்சு 25ஆம் நாளிடப்பட்ட எண் 2771, 1991 மாச்சு 26ஆம் நாளிடப்பட்ட எண் 2773, 1991 ஏப்பிறல் 19ஆம் நாளிடப்பட்ட எண் 2789, 1991 யூன் 4ஆம் நாளிடப்பட்ட எண் 2822, 1991 ஒத்தோபர் எண் 2932 கொண்ட எமது சுற்றறிக்கைகள் சம்பந்தமாக

2. ஐக்கிய நாடுகள் இழப்பீட்டு ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட உரிமைகோரல் ஒன்றினைத் தொடர்ந்து ஐக்கிய நாடுகள் இழப்பீட்டு ஆணைக்குழுவினால் ஒப்புதல் வழங்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட குவைத்தினார் நாணயத்தாள்களின் பெறுமதிகளின் பாகமொன்றினை இலங்கை மத்திய வங்கி இப்பொழுது பெற்றுள்ளது என்பதை வர்த்தக வங்கிகளுக்கு இத்தால் அறியத்தரப்படுகின்றது.

3. இதன்படி, மேலே குறிப்பிடப்பட்ட எமது சுற்றறிக்கைகளின் நியதிகளின்படி வர்த்தக வங்கிகளினால் கொள்வனவு செய்யப்பட்டு காசாக்குவதற்காக மத்திய வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட பழைய குவைத் தினார் நாணயத் தாள்களுக்காக ஒரு சீரான செலாவணி வீதமொன்றினை இலங்கை மத்திய வங்கி தயாரித்துள்ளது. இந்த வீதமானது மத்திய வங்கிக்கு ஏற்பட்ட செலவுகளைக் கழித்தபின்னர் பெறப்பட்டதாகும்.

4. மேலே குறிப்பிடப்பட்ட அடிப்படையில் குவைத்தினார் ஒன்றுக்கான செலாவணி வீதம் ரூபா 184.32ஆகும். இதன்படி, அவற்றினால் இலங்கை மத்திய வங்கியில் வைப்புச் செய்யப்பட்டு இழப்பீட்டுக்கான ஐக்கிய நாடுகள் இழப்பீட்டு ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட குவைத் தினார் நாணயத்தாள்கள் மீது செலுத்தப்படவுள்ள தொகையினை சம்பந்தப்பட்ட வர்த்தக வங்கிகளின் கணக்குகளில் இலங்கை மத்திய வங்கி வரவு வைக்கும்.

5. பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வர்த்தக வங்கிகள் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

i. தம்முடன் பழைய குவைத்தினார் நாணயத் தாள்களை வைப்புச் செய்துள்ள ஏற்கனவே பகுதியளவிவ் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டு பழைய குவைத் நாணயத் தாள்களுக்கு எதிராக காசாக்கப்பட்ட முழுமையான பெறுமதியினை பெற்றிராத வாடிக்கையாளர்களுக்கு இந்த தகவலை அறிவித்தலும், நிலுவையிலுள்ள காசினை உடனடியாக விடுவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதலும், அனைத்துக் கொடுப்பனவுகளும் 2001 ஒத்தோபர் 30ஆம் நாள் முற்றுப்பெறல் வேண்டும்.

ii. வைப்புச் செய்தவரின் பெயர், கடவுச் சீட்டு இலக்கம், குவைத்தினாரில் வைப்புச் செய்த தொகை, ரூபாவில் செலுத்தப்பட்ட தொகை, கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட திகதி என்பனவற்றைக் குறிப்பிட்டு சம்பந்தப்பட்ட வர்த்தக வங்கியினால் குவைத் தினார்களை வைப்புச் செய்தவர்களுக்கு மேற் கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பாக 2001ஆம் ஆண்டின் நவெம்பர் முதல் வாரத்தில் வங்கித் தொழில் திணைக்களத்தின் முதன்மைக் கணக்காளருக்கு கூற்று ஒன்றினை சமர்ப்பித்தல்.

iii. உரிமை கோரப்படாத நிதியங்களை அவர்களுக்கு அனுப்பி வைக்குமாறு ஐக்கிய நாடுகள் இழப்பீட்டு ஆணைக்குழு இலங்கை மத்திய வங்கியை கேட்டுக் கொண்டுள்ளதால் உரிமை கோராமைக்கான காரணங்களுடன் உரிமை கோராதோரின் பட்டியல் ஒன்றையும் ஏதேனும் செலுத்தப்படாத தொகையினையும் இலங்கை மத்திய வங்கிக்கு திருப்பி அனுப்ப வேண்டும். உரிமை கோரப்படாத நிதியங்களை இலங்கை மத்திய வங்கிக்கு திருப்பி அனுப்ப வேண்டிய நாள் 2001நவெம்பர் 9ஆம் நாளாகும்.

வை. எம். டபிள்யு. பீ. வீரசேகர

முதன்மைக் கணக்காளர்

தொழிற்பாட்டு அறிவுறுத்தல் எண்: 01/ 02/ 005/ 0018/ 021

வங்கித் தொழில் திணைக்களம்

இலங்கை மத்திய வங்கி

சனாதிபதி மாவத்தை

கொழும்பு 1

17 ஒத்தோபர் 2001

உரிமம் பெற்ற அனைத்து வர்த்தக வங்கிகளுக்கும்

## ஒதுக்குத் தேவைப்பாடுகள்

நாணய விதிச் சட்டத்தின் (இலங்கைச் சட்டவாக்கத்தின் அத்தியாயம் 422) பிரிவுகள் 10 (இ), 93, 94, 96 மற்றும் 97 இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் செய்யப்பட்டதும், இலங்கை சனநாய்க சோசலிசக் குடியரசின் 2001 ஒத்தோபர் 17ஆம் நாள் எண் 1206/ 18 கொண்ட அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான அறிவித்தல் தொடர்பாகத் தங்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

2. மேற் கொள்ளப்பட்ட அறிவித்தலுக்கிணங்க உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் இலங்கை நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட வைப்புப் பொறுப்புக்களுக்கெதிராக அத்தகைய மொத்த வைப்புப் பொறுப்புக்களில் பத்து சதவீதத்திற்குச் (10%) சமமான தொகையை ஒதுக்காகப் பேண வேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றன)

3. மேற்குறிப்பிட்ட திருத்தங்கள் 2001ஆம் ஆண்டு ஒத்தோபர் 19ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும். 1997 சனவரி 16ஆம் நாளிடப்பட்டதும் பீடி/ 01/ 97/ எண் கொண்டதும் 2000ஆம் ஆண்டு ஓகத்து 1ஆம் நாளிடப்பட்டதும் எண் 01/ 02/ 005/ 0018/ 014 கொண்டதுமான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களினால் திருத்தப்பட்டவாறான 1994 பெப்புருவரி 11ஆம் நாளிடப்பட்டதும் பீடீ 03/ 94 எண் கொண்டதுமான எமது தொழிற்பாட்டு அறிவுறுத்தலில் காணப்படும் இலங்கை ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட வைப்புப் பொறுப்புக்கள் தொடர்பான மற்றைய அனைத்து அறிவுறுத்தல்களும் தொடர்ந்தும் பொருந்துவனவாக இருக்கும்.

வை. எம். டபிள்யூ. பி. வீரசேகர

முதன்மைக் கணக்காளர்

தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் எண் 01/ 02/ 005/ 0018/22
தொடர்பு எண் : 06/04/15/2001

செலாவணிக்கட்டுப்பாட்டுத் திணைக்களம்

தொடர்பு எண்: 01/04/011/0013/001

வங்கித் தொழில் திணைக்களம்

2001 நவெம்பர் 28

அனைத்து வங்கிகளுக்கும்

**ஐரோப்பிய ஒற்றை நாணயத்தின் அறிமுகப்படுத்தல் " யூரோ"**

1. மேலே குறிப்பிடப்பட்ட விடயம் தொடர்பாக எண் பீடீ/ 03/ 98 மற்றும் ஈசீ/ 03/ 98 (டீ) கொண்ட 1998.11.12ஆம் நாளிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு மேலதிகமாக

2. 01.01.1999இல் அறிமுகப்படுத்தப்பட்ட யூரோ நாணயம், வங்கித் தாள்களாகவும் நாணயக் குத்திகளாகவும் 01.01.2002 இலிருந்து சுற்றோட்டத்துக்கு விடப்படும் என அனைத்து வர்த்தக வங்கிகளும் இத்தால் அறிவிக்கப்படுகின்றன. யூரோ வலயத்தில் பயன்படுத்தப்பட்ட யூரோ பிரதேச தேசிய நாணயத்தாள்கள் 01.01.2002 – 30.06.2002 காலப்பகுதியில் சுற்றோட்ட முறையிலிருந்து புறக்கீடு செய்யப்படும். இரட்டைச் சுற்றோட்டக் காலப்பகுதி 30.06.2002 வரையில் காணப்படும். சுற்றோட்டத்திலுள்ள யூரோ பிரதேச தேசிய நாணயத்தாள்களும் நாணயக் குத்திகளும் 01.07.2002இல் சுற்றோட்ட முறையிலிருந்து முழுமையாக புறக்கீடு செய்யப்பட்டு இனிமேலும் சட்டரீதியாக வழங்கக்கூடிய நாணயமாக கருதப்படமாட்டாது என்பதை தயவு செய்து கவனிக்கவும்.

3. 01.10.2002இல் யூரோ பிரதேச தேசிய நாணயத் தாள்கள் ஏட்டுப் பதிவுகளில் முடிவுக்குக் கொண்டுவரப்படுவதுடன் அந்த நாளிலிருந்து அனைத்துக் கணக்குகளும் எதிர்கால ஒப்பந்தங்களும் தன்னியக்கமாகவே யூரோக்களுக்கு மாற்றப்படும் என்பதையும் தயவு செய்து கவனிக்கவும்.

4. எனவே அவற்றினது யூரோ பிரதேச நாணயத் தாள்களினதும் நாணயக் குத்திகளினதும் கையிருப்பை யூரோக்களுக்கு மாற்றுவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்குமாறும் தமது சம்பந்தப்பட்ட முகவர்களினூடாக புதிய நாணயத்தாள்களினதும் நாணயக் குத்திகளினதும் தேவைப்பாடுகளுக்கான கட்டளைகளை மேற் கொள்ளுமாறும் வர்த்தக வங்கிகள் அறிவுறுத்தப்படுகின்றன. அத்துடன் யூரோ பிரதேச தேசிய நாணயத்தாள்களையும் நாணயக் குத்திகளையும் வைத்திருக்கும் தமது வாடிக்கையாளர்களுக்கு 30.06.2002இற்கு முன்பதாக தமது பழைய நாணயத் தாள்களையும் நாணயக் குத்திகளையும் புதிய யூரோ நாணயத் தாள்களுக்கு மாற்றிக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் வர்த்தக வங்கிகள் அறிவுறுத்தல் வேண்டும்.

5. 01.01.2002 தொடக்கம் ஏட்டுப்பதிவுகளிலிருந்துகூட யூரோ பிரதேச தேசிய நாணயத்தாள்கள் நீக்கப்படுகின்றமையினால் அந்த நாளிலிருந்து செயற்படும் வகையில் பலதரப்பட்ட வெளிநாட்டு நாணய வைப்புத் திட்டங்களுக்கான குறித்துரைக்கப்பட்ட நாணயங்களின் பட்டியலிருந்து அத்தகைய அனைத்து நாணயங்களும் புறக்கீடு செய்யப்படும். வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவு கணக்குகள், வதிவற்றோர் வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவு கணக்குகள், வதிவற்றோர் வெளிநாட்டு நாணய கணக்குகள், ஏற்றுமதியாளர்களின் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் போன்ற அனைத்து வெளிநாட்டு நாணயக் கணக்குகளும் அனுமதிக்கப்பட்ட ஏனைய ஏதேனும் வெளிநாட்டு நாணயக் கணக்குகளும் யூரோக்களில் அல்லது குறித்துரைக்கப்பட்ட நாணயங்களின் பட்டியலிருந்து புறக்கீடு செய்யப்படவுள்ள யூரோ பிரதேச தேசிய நாணயங்கள் தவிர்ந்த குறித்துரைக்கப்பட்ட வேறு ஏதேனும் நாணயத்தில் பேணப்படல் வேண்டும்.

எச். ஏ. ஜீ. எட்டியாரச்சி
செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

வை. எம். டபிள்யூ. பீ. வீரசேகர
முதன்மைக் கணக்காளர்

தொழிற்பாட்டு அறிவுறுத்தல் எண்: 01/02/005/0018/023

வங்கித் தொழில் திணைக்களம்

26 ' திசெம்பர் 2001

முகாமையாளர்

இலங்கை வங்கி

மாநகர இறக்குமதிப் பிரிவு

கொழும்பு 1

அன்புள்ள ஐயா

## ஆசிய அபிவிருத்தி வங்கிக் கடன் எண் 1707 சிறி (எஸ்எப்) தேர்ச்சி அபிவிருத்திச் செயற்றிட்டம் இறக்குமதிகளுக்கான நடவடிக்கைமுறை

தேர்ச்சி அபிவிருத்தி செயற்றிட்டத்திற்காக சிஎஉ 13,724,000 இற்குச் சமமான தொகையொன்றினை (பதின்மூன்று மில்லியன் எழுநூற்றி இருபத்து நான்காயிரம்) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுக்குக் கடனாக வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி (இதன் பின்னர் ஆஅவ எனக் குறிப்பிடப்படும்) இணங்கியுள்ளது. தொழிற் பயிற்சி மற்றும் கிராமியக் கைத்தொழில்கள் அமைச்சினால் செயற்படுத்தப்படும். (இதன் பின்னர் தொ.ப.கி.கை எனக் குறிப்பிடப்படும்.) செயற்றிட்டத்திற்கான உபகரணங்களின் இறக்குமதிக்காக இக் கொடுகடனின் ஒரு பகுதியைப் பயன்படுத்தும். இச் செயற்றிட்டத்தின் கீழான இறக்குமதிகளைக் கையாளும்போது பின்வரும் நடவடிக்கை முறையினைப் பின்பற்றுமாறு நீங்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

2. இணைப்பு 1இல் காட்டப்பட்டபடி தொழிற் பயிற்சி மற்றும் கிராமியக் கைத்தொழில்கள் அமைச்சினால் விண்ணப்பம் மேற்கொள்ளப்படுமிடத்து தகைமைபெற்ற மூல நாடுகளிலிருந்தான அனைத்து இறக்குமதிகளும் உங்களால் நிறுவப்பட்ட துணைநாடாத கைமீட்புச் செய்ய இயலாத உறுதி செய்யப்பட்ட நாணயக் கடிதங்களுக்கு எதிராகவே மேற்கொள்ளப்படல் வேண்டும். ஒவ்வொரு நாணயக் கடிதமும் பின்வரும் வாசகத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

> "இந்த நாணயக் கடிதம் ஆசிய அபிவிருத்தி வங்கிக் கடன் எண் 1707 சிறி (எஸ்எப்) இன் கீழ் நிறுவப்பட்டுள்ளதோடு ஆசிய அபிவிருத்தி வங்கியினால் அறிவிக்கும்/ உறுதிப்படுத்தும் வங்கிக்கு கடப்பாட்டுக் கடிதம் வழங்கப்படும்போது மட்டுமே பயனுறுவதாக அமையும். கொடுப்பனவுக்காக கடப்பாட்டுக் கடிதத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்"

நாணயக் கடிதத்தில் மேலே குறிப்பிடப்பட்ட வாசகம் உள்ளடக்கப்பட்டிராவிட்டாலும்கூட கொடுக்கல் வாங்கலுக்கு நிதியிடுவதற்கான உங்களது கடன்பாட்டின் உறுதியின்மீது உடனடியாக செயற்படக் கூடியதாக இருக்கும். எனினும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடப்பாடு வழங்கப்படும்போது நிதியிடல் கடப்பாடு ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு நகர்த்தப்படும். இந்த விடயத்தில் நாணயக் கடிதம் பின்வரும் வாசகத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

> "இந்த நாணயக் கடிதத்திற்கான நிதியிடல், இலங்கை, கொழும்பு, மாநகர இறக்குமதித் திணைக்களம் இலங்கை வங்கியின் கூட்டுக் கிளையினால் மேற் கொள்ளப்படும். எனினும், இது ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் எண் 1507 சிறி (எஸ்எப்) இன்கீழ் நிறுவப்பட்டுள்ளதுடன் அறிவுறுத்தும்/ உறுதிப்படுத்தும் வங்கிக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி அதனது கடப்பாட்டுக் கடிதத்தினை வழங்கும்போது, பின்னையது கடப்பாட்டுக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்ற வேண்டியதுடன் கொடுப்பனவினை/ செலவீட்டை ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து கோரவேண்டும்."

உங்களது நாணயக் கடிதத்தின் இரண்டு பிரதிகள் தொழிற் பயிற்சி மற்றும் கிராமியக் கைத்தொழில்

அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டியதோடு இது ஆசிய அபிவிருத்தி வங்கியினால் உங்களது பேராளருக்கு முறைசார்ந்த கடப்பாட்டுக் கடிதத்தினை வழங்குவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளும். தொழிற் பயிற்சி மற்றும் கிராமியக் கைத்தொழில்கள் அமைச்சின் வேண்டுகோளுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி இணங்குமாயின் இந்தக் கடிதத்தின் இணைப்பு 2இல் காட்டப்பட்டுள்ளவாறான படிவத்தில் பெயர் குறிப்பிடப்பட்ட வர்த்தக வங்கிக்கு. ஆசிய அபிவிருத்தி வங்கி அதனது முறைசார்ந்த கடப்பாட்டுக் கடிதமொன்றினை வழங்கும்.

3. (i) நாணயக் கடிதத்தில் பின்வருவனவற்றை உட்படுத்தும் திருத்தங்களுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் எழுத்து மூலமான ஒப்புதல் தேவைப்படும்.

(அ) நாணயம் மற்றும் நாணயக் கடிதத்தின் தொகை என்பனவற்றை உள்ளடக்கிய கொடுப்பனவு நியதிகள்.

(ஆ) விளக்கக் குறிப்பு அல்லது பொருட்களின் தொகை

(இ) நன்மை பெறுநர்

(ஈ) மூலநாடு; மற்றும்

(உ) இறுதி நாளுக்கு அப்பால் அதாவது கடன் கணக்கிலிருந்து எடுப்பனவுக்கான இறுதி நாளாகிய 2006 ஒத்தோபர் 31ஆம் நாளுக்கு அப்பால் நாணயக் கடிதத்தில் காலாவதித் திகதியின் நீடிப்பு

மேலே (அ) இலிருந்து (உ) வரையிலானவற்றில் உள்ளடக்கப்படாத திருத்தங்களுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஒப்புதல் தேவைப்படமாட்டாது. மேலே குறிப்பிடப்பட்ட திருத்தங்களின் ஒப்புதலுக்கான கோரிக்கைகள் இந்தக் கடிதத்தின் இணைப்பு 3இல் காட்டப்பட்ட படிவத்தில் தொழிற் பயிற்சி மற்றும் கிராமியக் கைத்தொழில்கள் அமைச்சினால் தாமதமின்றி மேற்கொள்ள வேண்டியதுடன் உங்களினால் கைச்சாத்திடப்பட்ட திருத்தத்தின் பிரதியும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அத்தகைய விடயங்களில் நாணயக் கடிதத்திற்கான திருத்தமானது பின்வரும் ஏற்பாட்டினை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

"இந்தத் திருத்தமானது ஆசிய அபிவிருத்தி வங்கியினால் ஒப்புதல் வழங்கப்படும்போது பயனுறுவதாக அமையும்"

ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஒப்புதல் வழங்கப்பட்டால் இக்கடித்ததின் இணைப்பு 4இல் காட்டப்பட்டுள்ள படிவத்தில் உங்கள் வங்கியினது பேராளருக்கும் தொழிற் பயிற்சி மற்றும் கிராமியக் கைத்தொழில்கள் அமைச்சிற்கும் தெரியப்படுத்தப்படும்.

(ii) ஆசிய அபிவிருத்தி வங்கியின் முன் ஒப்புதல் அன்றி கடன் கணக்கிலிருந்து எடுப்பனவுக்கான கடைசித் திகதிவரை காலாவதியாகும் தினமும் கப்பலேற்றும் தினமும் நீடிக்கப்படலாம். அத்தகைய நீடிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்குமிடத்து வங்கியின் மேலாண்மை பெற்ற அலுவலகரொருவரினால் பொருத்தமான முறையில் கைச்சாத்திடப்பட்ட நீடிப்பின் பிரதியொன்று இணைக்கப்பட்டதும், இக்கடிதத்தின் இணைப்பு 3இல் காட்டப்பட்டுள்ளதுமான படிவத்தில்தொழிற் பயிற்சி மற்றும் கிராமியக் கைத்தொழில்கள் அமைச்சு ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும். ஆசிய அபிவிருத்தி வங்கியின் முன் ஒப்புதலுக்கு உட்படுத்தப்பட்டாலும் உட்படுத்தப்படாவிட்டாலும் ஒவ்வொரு திருத்தத்தினதும் இரண்டு பிரதிகள் உங்களது வங்கியினால் தொழிற் பயிற்சி மற்றும் கிராமியக் கைத்தொழில்கள் அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டியதோடு தேவையானவிடத்து ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஒப்புதல் வழங்கலுக்காக தொழிற் பயிற்சி மற்றும் கிராமியக் கைத்தொழில்கள் அமைச்சு ஒழுங்குகளை மேற்கொள்ளும்.

4. ஆசிய அபிவிருத்தி வங்கியினால் கடப்பாட்டுக் கடிதம் வழங்கப்பட்டுள்ள நாணயக் கடிதத்தின் நியதிகளின்படி நன்மை பெறுநருக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்ளும்போது, உங்களது வங்கியின் பேராளர், சம்பந்தப்பட்ட ஆவணங்களை உங்களுடைய வங்கிக்கு அனுப்பி வைக்க வேண்டியதோடு, இக்கடிதத்தின் இணைப்பு 5இல் காட்டப்பட்டுள்ள படிவத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து செலவீட்டைக் கோரவேண்டும். செலவீட்டுக்கான கோரிக்கையின் பிரதியொன்றினையும் தொழிற் பயிற்சி மற்றும் கிராமியக் கைத்தொழில்கள் அமைச்சுக்கு உங்களது வங்கியின் பேராளர் அனுப்பி வைத்தல் வேண்டும். உடனடியான பகிர்ந்தளிப்புக்கு வசதி செய்து கொடுப்பதற்காக இந்தக் கடிதத்தின் இணைப்பு 6இல் காட்டப்பட்டுள்ள படிவத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு உங்களது வங்கியின் பேராளர் உறுதிப்படுத்தப்பட்ட சுவிப்ட், ரெலெக்ஸ் அல்லது கேபிள் மூலமான கோரிக்கையொன்றினை அனுப்பி வைக்கலாம். உங்களது வங்கியின் பேராளருக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி செலவீட்டை மேற்கொண்டுள்ளதா என்பதை அதிகூடிய விரைவில் உங்களுக்கு அறிவிப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட வேண்டியதோடு,

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் உங்களது பேராளருக்கு செலவீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது என நீங்கள் திருப்திப்படும்வரை கப்பலேற்றல் ஆவணங்களை நீங்கள் வைத்திருத்தல் வேண்டும். ஆவணங்களை விடுவிக்கும் நேரத்தில் தொழிற் பயிற்சி மற்றும் கிராமியக் கைத்தொழில்கள் அமைச்சிலிருந்து எத்தகைய இணைக்கிணை நிதியமும் சேகரிக்கப்படலாகாது.

5. கப்பலேற்றும் ஆவணங்களுக்கும், நாணயக் கடிதங்களின் நியதிகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடுகள் காணப்படின், கொடுப்பனவுக்கான கோரிக்கையினை ஏற்றுக் கொள்ளுவதற்கோ அல்லது (கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும்) வர்த்தக வங்கியினால் வழங்கப்பட்ட அல்லது புறக்குறிப்பீடு செய்யப்பட்ட இழப்பீட்டுக் கடிதத்தினை ஏற்றுக் கொள்வதற்கோ ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு இயலாது காணப்படும். அத்தகைய சந்தர்ப்பத்தில், கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் வர்த்தக வங்கி, அத்தகைய வேறுபாடுகளின் மத்தியிலும் கொடுப்பனவினை மேற் கொள்ளுவதற்காக உங்கள் வங்கியின் மூலமாக தொழிற் பயிற்சி மற்றும் கிராமியக் கைத்தொழில்கள் அமைச்சின் அங்கீகாரத்தினைக் கோரலாம்.

உங்களது வங்கியுடன் கலந்தாலோசித்து தேசிய தொழிற் பயிற்சி மற்றும் கிராமியக் கைத்தொழில்கள் அமைச்சு கொடுப்பனவுக்கான அங்கீகாரத்தினை வழங்கிய பின்னர் அத்தகைய வேறுபாடு சம்பந்தமாகவும், கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் வங்கிக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டமை தொடர்பாகவும் தொழிற் பயிற்சி மற்றும் கிராமியக் கைத்தொழில்கள் அமைச்சு ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு கேபிள் மூலம் அறிவித்தல் வேண்டும்.

6. ஆசிய அபிவிருத்தி வங்கியினால் ஐக்கிய அமெரிக்க டொலர் அல்லாத நாணயமொன்றினால் கடப்பாடு வழங்கப்பட்டிருக்கும் வேளையில், அத்தகைய கடப்பாட்டின்கீழ், கொடுப்பனவுக்காக ஐக்கிய அமெரிக்க டொலர் அல்லாத நாணயம் கிடைக்கத்தக்கதாக இருக்குமென ஆசியஅபிவிருத்தி வங்கி எதிர்பார்க்கும் செலாவணி வீதத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்ட ஐக்கிய அமெரிக்க டொலருக்குச் சமமான தொகையினை கடப்பாட்டுக் கடிதம் குறித்துரைக்கும். உங்களது வங்கியின் பேராளர்களில் எவரேனும் ஐக்கிய அமெரிக்க டொலர் அல்லாத நாணயத்தில் கோரிய ஏதேனும் குறிப்பிட்ட உரிமை கோரல் விடயத்தில், ஐக்கிய அமெரிக்க டொலருக்குச் சமமான தொகை ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடப்பாட்டின்கீழ் கிடைக்கத்தக்கதாகவுள்ள தொகையினை விஞ்சுமேயானால் ஆசிய அபிவிருத்தி வங்கியானது கிடைக்கத்தக்கதாகவுள்ள ஐக்கிய அமெரிக்க டொலரின் அளவுக்கு ஐக்கிய அமெரிக்க டொலர் அல்லா நாணயங்களின் செலவீட்டை மட்டுப்படுத்தும். இதன் காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணத்தினால் உங்களது நாணயக் கடிதத்தின் நியதிகளுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட உரிமை கோரல் சம்பந்தமாக உங்களது வங்கியின் பேராளருக்கான முழுமையான செலவீட்டை அல்லது பகுதியொன்றினைச் செலுத்துவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி மறுப்புத் தெரிவிக்குமேயானால் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் அனுமதிக்கப்படாத தொகையினை உங்கள் வங்கியின் பேராளருக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம். இந்த நோக்கத்திற்காக தேசிய தொழிற் பயிற்சி மற்றும் கிராமியக் கைத்தொழில்கள் அமைச்சுடன் நீங்கள் தேவையான ஒழுங்குகளை மேற் கொள்ளலாம்.

7. இது தொடர்பான செலாவணிக் கட்டுப்பாட்டுத் தேவைப்பாடுகள் தொடர்பாக செலாவணிக் கட்டுப்பாட்டாளர் உங்களுக்கு அறிவிப்பார்.

8. உங்களது வங்கியின் அனைத்துக் கட்டணங்களும் தொழிற் பயிற்சி மற்றும் கிராமியக் கைத்தொழில்கள் அமைச்சின் கணக்கிற்காக இருத்தல் வேண்டும்.

உங்களின் உண்மையுள்ள
வை.எம். டபிள்யூ. வீரசேகர
முதன்மைக் கணக்காளர்

பிரதி: 1. செலாவணிக் கட்டுப்பாட்டாளர்
2. செயற்றிட்டப் பணிப்பாளர்
தேர்ச்சி அபிவிருத்திச் செயற்றிட்டம்
தொழில்நுட்பக் கல்வி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சு
282 நாவல வீதி, இராஜகிரிய
3. பணிப்பாளர் நாயகம்
வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களம்
செயலகம், 3ஆம் மாடி, கொழும்பு

சுற்றறிக்கை எண்: 4786

வங்கித் தொழில் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
8ஆம் மாடி
அ.பெ. 590
30 சனாதிபதி மாவத்தை
கொழும்பு 1
2001 திசெம்பர் 27

உரிமம் பெற்ற அனைத்து வர்த்தக வங்கிகளுக்கும்

## முற்பணங்கள் மீதான மத்திய வங்கியின் வட்டி வீதங்கள்

2001 திசெம்பர் 27ஆம் நாளிலிருந்து செயற்படும் வகையில் பின்வருவனவற்றைப் பிணையாக வைத்து இலங்கை மத்திய வங்கியிலிருந்து வர்த்தக வங்கிகளுக்கான முற்பணங்கள் மீதான வட்டிவீதம் ஆண்டொன்றுக்கு பதினெட்டு (18) சதவீதமாக இருக்கும்.

அ) அரசாங்க மற்றும் அரசாங்க உத்தரவாதமளிக்கப்பட்டுள்ள பிணையங்கள்

ஆ) வர்த்தக மற்றும் உற்பத்திக் கடன்கள் தொடர்பான காலம் வழங்கப்பட்ட வாக்குறுதிப் பத்திரங்கள்.

வை. எம். டபிள்யு. பீ. வீரசேகர
முதன்மைக் கணக்காளர்

ஏ. எஸ். ஜயவர்த்தன
ஆளுநர்

# வர்த்தக வங்கிகளிடமிருந்து வெளிநாட்டு நாணயத் தாள்களின் கொள்வனவிற்கான மத்திய வங்கியின் வீதங்கள்– 2001

( இலங்கை ரூபாய்களில் )

| | சுற்றறிக்கை இல. | அவுஸ்திரேலிய டொலர் (இறுதி) | ஒஸ்திரிய சிலிங் (10 இறுதி) | பஹ்ரேன் தினார் (இறுதி) | பெல்ஜியம் பிராங்கு (10 இறுதி) | கனடிய டொலர் (1 இறுதி) | டென்மார்க் குரோனர் (10 இறுதி) | ஜேர்மன் மார்க் (இறுதி) | பின்லாந்து மார்க்கா (10 இறுதி) | பிரான்சிய பிராங்கு (10 இறுதி) | ஹொங்கொங் டொலர் (10 இறுதி) | இத்தாலிய லீரா (1000 இறுதி) | ஜப்பானிய யென் (100 இறுதி) | குவைத் தினார் (1 இறுதி) | நெதர்லாந்து கில்டர் (இறுதி) | நோர்வே குரோனர் (10 இறுதி) | ஓமானிய றியால் (1 இறுதி) | சவூதி அரேபிய றியால் (1 இறுதி) | சிங்கப்பூர் டொலர் (இறுதி) | சுவீடன் குரோனர் (10 இறுதி) | சுவிற்சர்லாந்து பிராங்கு (1 இறுதி) | ஐ. அரபு இராச்சிய திர்ஹம் (இறுதி) | ஐ. இராச்சிய பவுண் (1 இறுதி) | ஐ. அமெரிக்க டொலர் (1 இறுதி) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 02.01.01 | 4681 | 43.25 | 52.90 | 205.10 | 18.05 | 51.60 | 94.80 | 37.25 | 119.20 | 111.00 | 99.15 | 37.60 | 67.55 | 245.45 | 33.05 | 86.35 | 195.45 | 20.60 | 44.65 | 82.15 | 48.00 | 21.05 | 115.45 | 78.05 |
| 09.01.01 | 4683 | 44.30 | 53.85 | 205.35 | 18.35 | 51.65 | 99.40 | 37.90 | 121.30 | 113.00 | 99.25 | 38.30 | 66.45 | 245.75 | 33.65 | 89.55 | 195.70 | 20.65 | 44.75 | 83.25 | 48.40 | 21.10 | 116.40 | 78.15 |
| 17.01.01 | 4685 | 43.50 | 53.60 | 207.95 | 18.30 | 52.15 | 98.95 | 37.70 | 120.75 | 112.50 | 100.50 | 38.10 | 66.20 | 249.35 | 33.50 | 89.95 | 198.15 | 20.90 | 45.15 | 83.15 | 47.90 | 21.35 | 115.75 | 79.10 |
| 23.01.01 | 4687 | 43.50 | 53.25 | 208.25 | 18.15 | 51.95 | 98.15 | 37.45 | 119.95 | 111.75 | 100.65 | 37.85 | 67.30 | 249.65 | 33.25 | 89.25 | 198.45 | 20.95 | 45.25 | 82.70 | 47.95 | 21.40 | 114.95 | 79.25 |
| 30.01.01 | 4689 | 48.80 | 60.20 | 238.25 | 20.55 | 59.70 | 111.10 | 42.35 | 135.60 | 126.30 | 115.15 | 42.80 | 76.35 | 285.60 | 37.60 | 100.95 | 227.05 | 23.95 | 51.35 | 93.40 | 54.25 | 24.45 | 131.10 | 90.65 |
| 31.01.01 | 4690 | 45.00 | 55.20 | 219.95 | 18.85 | 55.20 | 102.60 | 38.85 | 127.80 | 115.85 | 106.30 | 39.25 | 71.15 | 270.95 | 34.50 | 93.20 | 215.40 | 22.10 | 47.45 | 86.00 | 50.00 | 22.60 | 120.85 | 83.80 |
| 08.02.01 | 4692 | 46.00 | 57.00 | 222.15 | 19.45 | 55.60 | 105.25 | 40.10 | 131.95 | 119.60 | 107.35 | 40.50 | 72.80 | 273.90 | 35.60 | 95.80 | 217.60 | 22.35 | 48.10 | 88.15 | 51.05 | 22.80 | 123.30 | 84.60 |
| 13.02.01 | 4694 | 44.30 | 55.50 | 218.75 | 18.95 | 54.55 | 102.35 | 39.05 | 128.45 | 116.40 | 105.70 | 39.45 | 70.10 | 269.30 | 34.65 | 93.10 | 214.25 | 22.00 | 47.20 | 85.35 | 49.75 | 22.45 | 119.35 | 83.30 |
| 20.01.01 | 4696 | 43.40 | 54.45 | 217.65 | 18.55 | 53.35 | 100.40 | 38.30 | 126.00 | 114.20 | 105.20 | 38.70 | 70.70 | 267.85 | 34.00 | 82.45 | 213.20 | 21.90 | 47.20 | 83.45 | 48.85 | 22.35 | 118.80 | 82.90 |
| 27.02.01 | 4698 | 43.25 | 54.65 | 217.70 | 18.65 | 53.40 | 99.75 | 38.45 | 126.55 | 114.70 | 105.20 | 38.85 | 70.80 | 267.75 | 34.15 | 90.50 | 213.20 | 21.90 | 47.10 | 83.10 | 49.00 | 22.35 | 119.20 | 82.90 |
| 06.03.01 | 4700 | 43.25 | 55.80 | 217.90 | 19.05 | 53.10 | 102.85 | 39.25 | 129.15 | 117.05 | 105.30 | 39.65 | 68.80 | 268.00 | 34.85 | 93.35 | 213.35 | 21.90 | 46.85 | 84.75 | 49.90 | 22.40 | 120.60 | 83.00 |
| 13.03.01 | 4702 | 41.50 | 55.30 | 216.65 | 18.85 | 52.80 | 101.90 | 38.90 | 127.95 | 115.95 | 104.70 | 39.30 | 68.05 | 266.45 | 34.50 | 92.75 | 212.15 | 21.80 | 46.45 | 83.70 | 49.35 | 22.25 | 119.90 | 82.50 |
| 20.03.01 | 4704 | 40.75 | 53.30 | 216.80 | 18.20 | 52.10 | 98.25 | 37.50 | 123.30 | 111.80 | 104.80 | 37.85 | 66.30 | 266.60 | 33.25 | 90.00 | 212.30 | 21.80 | 46.10 | 80.25 | 47.80 | 22.25 | 116.90 | 82.55 |
| 27.03.01 | 4706 | 40.35 | 52.90 | 216.80 | 18.05 | 52.20 | 97.50 | 37.20 | 122.40 | 110.95 | 104.80 | 37.60 | 66.20 | 265.25 | 33.05 | 90.00 | 212.30 | 21.80 | 45.65 | 79.45 | 47.50 | 22.25 | 116.65 | 82.60 |
| 03.04.01 | 4708 | 40.45 | 52.90 | 219.80 | 18.05 | 52.50 | 97.60 | 37.25 | 122.50 | 111.00 | 106.25 | 37.60 | 65.80 | 268.90 | 33.05 | 90.45 | 215.20 | 22.10 | 45.85 | 79.75 | 47.65 | 22.55 | 117.55 | 83.70 |
| 10.04.01 | 4710 | 41.55 | 54.95 | 222.10 | 18.75 | 53.55 | 101.25 | 38.65 | 127.15 | 115.25 | 107.35 | 39.05 | 67.15 | 272.60 | 34.30 | 93.00 | 217.50 | 22.30 | 46.15 | 83.15 | 49.40 | 22.80 | 120.45 | 84.60 |
| 17.04.01 | 4712 | 42.40 | 54.05 | 221.80 | 18.45 | 53.55 | 99.65 | 38.00 | 125.05 | 113.35 | 107.20 | 38.40 | 67.05 | 271.90 | 33.75 | 91.55 | 217.20 | 22.30 | 46.25 | 82.30 | 48.85 | 22.80 | 120.15 | 84.50 |
| 24.04.01 | 4714 | 43.55 | 55.30 | 222.75 | 18.85 | 54.35 | 102.00 | 38.90 | 128.00 | 116.00 | 107.65 | 39.30 | 68.80 | 273.10 | 34.55 | 93.40 | 218.15 | 22.40 | 46.35 | 83.75 | 49.75 | 22.90 | 121.45 | 84.85 |
| 02.05.01 | 4716 | 43.65 | 55.55 | 227.35 | 18.95 | 55.55 | 102.45 | 39.10 | 128.55 | 116.55 | 109.90 | 39.50 | 69.15 | 278.75 | 34.70 | 94.30 | 222.65 | 22.85 | 47.10 | 84.15 | 49.70 | 23.35 | 122.90 | 86.60 |
| 10.05.01 | 4718 | 44.55 | 55.10 | 227.40 | 18.80 | 55.50 | 101.55 | 38.75 | 127.50 | 115.55 | 109.90 | 39.15 | 70.50 | 279.05 | 34.40 | 94.30 | 222.65 | 22.85 | 47.00 | 83.15 | 49.15 | 23.35 | 122.25 | 86.60 |
| 15.05.01 | 4720 | 44.55 | 54.40 | 227.05 | 18.55 | 55.20 | 100.35 | 38.30 | 125.95 | 114.15 | 109.75 | 38.65 | 69.85 | 278.65 | 34.00 | 93.40 | 222.30 | 22.80 | 47.10 | 83.50 | 48.85 | 23.30 | 121.35 | 86.50 |
| 22.05.01 | 4722 | 45.80 | 55.25 | 228.85 | 18.85 | 56.30 | 101.95 | 38.90 | 127.90 | 115.90 | 110.60 | 39.25 | 69.85 | 280.15 | 34.50 | 95.65 | 224.05 | 23.00 | 47.60 | 84.60 | 49.55 | 23.50 | 124.30 | 87.15 |
| 29.05.01 | 4724 | 45.04 | 54.10 | 229.85 | 18.45 | 56.05 | 99.85 | 38.05 | 125.20 | 113.50 | 111.10 | 38.45 | 71.90 | 281.50 | 33.80 | 94.55 | 225.10 | 23.10 | 47.90 | 82.30 | 48.75 | 23.60 | 123.25 | 87.55 |
| 06.06.01 | 4726 | 44.25 | 53.65 | 231.00 | 18.30 | 56.70 | 99.15 | 37.75 | 124.20 | 112.55 | 111.65 | 38.15 | 73.15 | 282.75 | 33.50 | 92.30 | 226.20 | 23.20 | 48.05 | 80.25 | 48.60 | 23.70 | 123.65 | 88.00 |
| 13.06.01 | 4728 | 45.01 | 53.10 | 227.95 | 18.10 | 56.55 | 98.05 | 37.35 | 122.90 | 111.40 | 110.15 | 37.75 | 70.95 | 278.80 | 33.15 | 91.90 | 223.20 | 22.90 | 47.50 | 78.55 | 47.95 | 23.40 | 119.20 | 86.80 |
| 19.06.01 | 4730 | 45.30 | 54.10 | 228.85 | 18.45 | 56.60 | 99.90 | 38.05 | 125.25 | 113.50 | 110.60 | 38.45 | 70.20 | 279.95 | 33.80 | 93.40 | 224.10 | 23.00 | 47.50 | 81.40 | 48.60 | 23.50 | 121.10 | 87.15 |
| 26.06.01 | 4732 | 44.70 | 53.80 | 229.15 | 18.35 | 56.75 | 99.30 | 37.85 | 124.50 | 112.85 | 110.75 | 38.25 | 69.45 | 280.45 | 33.60 | 93.90 | 224.35 | 23.05 | 47.45 | 81.00 | 48.70 | 23.50 | 122.10 | 87.25 |
| 03.07.01 | 4734 | 44.30 | 53.45 | 229.95 | 18.25 | 57.20 | 98.85 | 37.60 | 123.75 | 112.15 | 111.15 | 38.00 | 69.35 | 281.65 | 33.40 | 93.10 | 225.15 | 23.10 | 47.55 | 79.80 | 48.30 | 23.60 | 122.75 | 87.60 |
| 10.07.01 | 4736 | 43.80 | 53.10 | 228.70 | 18.10 | 56.65 | 98.10 | 37.35 | 122.85 | 111.35 | 110.55 | 37.70 | 68.55 | 279.60 | 33.15 | 92.00 | 223.95 | 23.00 | 47.20 | 78.75 | 48.05 | 23.45 | 121.55 | 87.10 |
| 17.07.01 | 4738 | 43.85 | 53.50 | 228.65 | 18.25 | 56.00 | 98.95 | 37.65 | 123.85 | 112.25 | 110.50 | 38.05 | 69.00 | 280.20 | 33.40 | 92.50 | 223.90 | 23.00 | 46.90 | 79.80 | 48.65 | 23.45 | 120.80 | 87.10 |
| 24.07.01 | 4740 | 43.75 | 54.55 | 228.60 | 18.60 | 55.75 | 100.75 | 38.35 | 126.25 | 114.40 | 110.50 | 38.75 | 69.75 | 280.70 | 34.05 | 93.65 | 223.85 | 23.00 | 47.20 | 80.80 | 49.90 | 23.45 | 122.75 | 87.05 |
| 31.07.01 | 4742 | 43.60 | 54.65 | 227.95 | 18.65 | 56.10 | 101.00 | 38.45 | 126.50 | 114.65 | 110.15 | 38.85 | 69.30 | 279.90 | 34.10 | 94.00 | 223.20 | 22.90 | 47.80 | 81.15 | 49.85 | 23.40 | 122.30 | 86.80 |
| 07.08.01 | 4744 | 44.40 | 55.05 | 228.30 | 18.80 | 56.25 | 101.75 | 38.75 | 127.40 | 115.50 | 110.35 | 39.15 | 69.40 | 280.45 | 34.40 | 94.95 | 223.55 | 22.95 | 48.30 | 82.65 | 50.35 | 23.45 | 122.75 | 86.95 |
| 14.08.01 | 4746 | 44.25 | 55.70 | 227.90 | 19.00 | 55.80 | 103.05 | 39.20 | 128.95 | 116.90 | 110.15 | 39.60 | 70.15 | 280.05 | 34.80 | 95.30 | 223.20 | 22.90 | 48.65 | 83.60 | 50.70 | 23.40 | 122.25 | 86.80 |
| 21.08.01 | 4748 | 46.05 | 57.25 | 228.00 | 19.55 | 55.70 | 105.90 | 40.30 | 132.55 | 120.15 | 110.20 | 40.70 | 71.40 | 281.60 | 35.75 | 96.95 | 223.25 | 22.90 | 49.00 | 84.10 | 51.90 | 23.40 | 124.25 | 86.85 |
| 28.08.01 | 4750 | 45.75 | 57.00 | 228.15 | 19.45 | 55.85 | 105.30 | 40.10 | 131.90 | 119.55 | 110.25 | 40.50 | 71.55 | 281.70 | 35.60 | 96.85 | 223.40 | 22.95 | 49.20 | 83.60 | 51.55 | 23.40 | 124.05 | 86.90 |
| 04.09.01 | 4752 | 45.60 | 57.05 | 229.15 | 19.45 | 55.70 | 105.40 | 40.15 | 132.00 | 119.65 | 110.75 | 40.55 | 72.50 | 283.10 | 35.60 | 97.40 | 224.35 | 23.05 | 49.60 | 82.75 | 51.75 | 23.50 | 125.40 | 87.25 |
| 11.09.01 | 4754 | 44.85 | 56.85 | 228.95 | 19.40 | 55.10 | 103.70 | 40.00 | 131.55 | 119.25 | 110.65 | 40.40 | 71.85 | 282.85 | 35.50 | 96.80 | 224.20 | 23.00 | 49.45 | 81.20 | 51.60 | 23.50 | 126.25 | 87.20 |
| 18.09.01 | 4756 | 44.25 | 57.90 | 228.60 | 19.75 | 55.00 | 107.00 | 40.75 | 133.95 | 121.45 | 110.45 | 41.15 | 73.50 | 282.05 | 36.15 | 99.50 | 223.85 | 22.95 | 49.70 | 82.85 | 53.15 | 23.45 | 126.90 | 87.05 |
| 25.09.01 | 4758 | 41.80 | 57.25 | 228.70 | 19.50 | 55.00 | 106.90 | 40.25 | 132.45 | 120.05 | 110.55 | 40.65 | 73.95 | 282.85 | 35.75 | 99.95 | 223.95 | 23.00 | 49.30 | 79.60 | 54.55 | 23.45 | 125.45 | 87.10 |
| 02.10.01 | 4760 | 42.30 | 56.85 | 228.55 | 19.40 | 54.60 | 105.20 | 40.00 | 131.55 | 119.25 | 110.45 | 40.40 | 71.90 | 282.80 | 35.50 | 96.95 | 223.80 | 22.95 | 48.75 | 80.45 | 52.80 | 23.45 | 126.75 | 87.05 |
| 09.10.01 | 4762 | 43.65 | 57.65 | 229.00 | 19.65 | 55.25 | 106.70 | 40.55 | 133.40 | 120.95 | 110.65 | 40.95 | 72.05 | 283.20 | 36.00 | 98.60 | 224.20 | 23.00 | 48.25 | 81.70 | 53.55 | 23.50 | 127.95 | 87.20 |
| 16.10.01 | 4764 | 44.40 | 57.45 | 229.65 | 19.60 | 55.45 | 106.30 | 40.45 | 133.00 | 120.55 | 111.00 | 40.85 | 71.50 | 283.75 | 35.90 | 99.25 | 224.90 | 23.10 | 47.55 | 83.15 | 53.40 | 23.55 | 125.85 | 87.50 |
| 23.10.01 | 4766 | 44.40 | 57.00 | 231.45 | 19.45 | 55.40 | 105.50 | 40.10 | 131.95 | 119.60 | 111.90 | 40.50 | 71.90 | 285.45 | 35.60 | 98.40 | 226.65 | 23.25 | 47.75 | 82.80 | 53.10 | 23.75 | 125.20 | 88.15 |
| 30.10.01 | 4768 | 43.90 | 56.85 | 232.45 | 19.40 | 55.60 | 105.25 | 40.00 | 131.60 | 119.30 | 112.35 | 40.40 | 71.55 | 286.45 | 35.50 | 98.50 | 227.60 | 23.35 | 47.95 | 82.75 | 53.05 | 23.85 | 126.00 | 88.55 |
| 06.11.01 | 4770 | 44.65 | 57.45 | 233.50 | 19.60 | 55.30 | 106.20 | 40.45 | 133.00 | 120.55 | 112.85 | 40.85 | 72.30 | 288.20 | 35.90 | 99.35 | 228.65 | 23.50 | 48.50 | 83.05 | 53.75 | 23.95 | 128.35 | 88.95 |
| 13.11.01 | 4772 | 45.65 | 57.25 | 233.75 | 19.55 | 55.00 | 105.70 | 40.30 | 132.50 | 120.10 | 113.00 | 40.70 | 73.20 | 288.45 | 35.75 | 100.15 | 228.95 | 23.50 | 48.35 | 83.80 | 53.70 | 24.00 | 128.40 | 89.05 |
| 20.11.01 | 4774 | 46.10 | 56.70 | 234.35 | 19.35 | 55.65 | 104.80 | 39.90 | 131.20 | 118.90 | 113.30 | 40.30 | 71.90 | 288.40 | 35.40 | 98.55 | 229.50 | 23.55 | 48.15 | 83.30 | 53.20 | 24.05 | 126.00 | 89.30 |
| 27.11.01 | 4776 | 46.05 | 56.85 | 236.10 | 19.40 | 55.65 | 105.10 | 40.00 | 131.55 | 119.25 | 114.15 | 40.40 | 71.70 | 290.05 | 35.50 | 98.65 | 231.20 | 23.75 | 48.60 | 83.60 | 53.50 | 24.25 | 125.75 | 89.95 |
| 04.12.01 | 4778 | 46.45 | 58.00 | 236.20 | 19.80 | 56.55 | 107.20 | 40.80 | 134.20 | 121.65 | 114.15 | 41.20 | 72.20 | 291.00 | 36.20 | 99.80 | 231.30 | 23.75 | 48.60 | 83.60 | 54.25 | 24.25 | 126.75 | 90.00 |
| 11.12.01 | 4780 | 45.85 | 57.55 | 236.30 | 19.65 | 56.55 | 106.40 | 40.50 | 133.25 | 120.75 | 114.20 | 40.90 | 70.90 | 290.40 | 35.95 | 99.40 | 231.35 | 23.75 | 48.60 | 85.00 | 53.65 | 24.25 | 127.55 | 90.00 |
| 18.12.01 | 4782 | 46.05 | 57.70 | 235.85 | 19.70 | 56.65 | 106.65 | 40.60 | 133.60 | 121.10 | 114.00 | 41.00 | 70.35 | 290.10 | 36.05 | 99.05 | 230.95 | 23.70 | 48.55 | 84.70 | 53.80 | 24.20 | 128.05 | 89.85 |
| 25.12.01 | 4784 | 45.30 | 57.45 | 236.00 | 19.60 | 56.10 | 106.00 | 40.40 | 132.95 | 120.50 | 114.10 | 40.85 | 68.70 | 289.75 | 35.85 | 99.15 | 289.75 | 23.70 | 48.40 | 83.45 | 53.90 | 24.20 | 127.90 | 89.90 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

தொடர்பு இலக்கம்: 02/04/004/0005/001

இலங்கை மத்திய வங்கி
வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
05 சனவரி 2001

அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்
உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கும்

## வர்த்தகப் பத்திரங்கள் மற்றும் ஏனைய வடிவங்களிலமைந்த வாக்குறுதிச் சான்றிதழ்களை வழங்குவதற்காக வழங்கப்பட்ட வசதிகள் மீதான வழிகாட்டல்கள்

ஏற்றுக் கொள்ளுதல், புறக்குறிப்பீடு செய்தல், உத்தரவாதங்களை வழங்குதல், கீழ்வரைதல் அல்லது அத்தகைய வர்த்தகப் பத்திரங்களை/வாக்குறுதிச் சான்றிதழ்களை கொள்வனவு செய்தல் மூலம் வர்த்தகப் பத்திரங்களையும் ஏனைய வடிவங்களிலமைந்த வாக்குறுதிச் சான்றிதழ்களையும் தமது கூட்டு வாடிக்கையாளர்கள் வழங்குவதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும்போது அல்லது வழங்கும்/செலுத்தும் முகவராக, வணிகராக தொழிற்படும்போது அல்லது வழங்குனர்களின் கையொப்பத்தினை உறுதிப்படுத்துவதன் மூலம் அத்தகைய கருவிகளின் வழங்கலுக்கு ஆதரவு வழங்கும்போது பின்வரும் வழிகாட்டல்களைப் பின்பற்றுமாறு அனைத்து உரிமம் பெற்ற வர்ததக வங்கிகளும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கிகளும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

1. வர்த்தகப் பத்திரங்கள்/வாக்குறுதிச் சான்றிதழ்களின் வடிவம்- வர்த்தகப் பத்திரங்கள் /காலம் வழங்கப்பட்ட வாக்குறுதிச் சான்றிதழ்கள் மாற்று உண்டியல்கள் கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி வழங்கல் அல்லது புறக்குறிப்பீடு செய்து வழங்கல் என்பனவற்றின் மூலம் கைமாற்றத்தக்க வடிவத்தில் அமைந்திருக்கும்.

2. தகமைப் பிரமாணம் - மேலே குறிப்பிடப்பட்ட வர்த்தகப் பத்திரங்கள்/ வாக்குறுதிச் சான்றிதழ்கள் என்பனவற்றிக்கு ஆதரவளிக்கும்போது உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கிகளும் பின்வரும் பிரமாணங்களை பின்பற்றவேண்டும்.

2.1 வழங்குகின்ற கூட்டு வாடிக்கையாளர்கள் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளாக, உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கிகளாக அல்லது நிதிக் கூட்டு நிலையங்களாக இருக்கக்கூடாது.

2.2 வழங்குகின்ற கம்பனியும் எந்த ஒரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கி/ உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியுடன் அனுபவித்துவரும் தற்போதுள்ள அனைத்து கொடுகடன் வசதிகளும் வங்கித் தொழில்சட்டத்தின் பிரிவு 46 அ மற்றும் பிரிவு 76 (ஒ) என்பனவற்றின் கீழ் முறையே உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கும் வழங்கப்பட்ட செயற்படா முற்பணங்கள் மீதான மத்திய வங்கியின் பணிப்புரையின் நியதிகளின்படி "நடைமுறை" ஆனதாக இருத்தல் வேண்டும்.

2.3 வசதிகளை வழங்குகின்ற விடயத்தைப் பொறுத்தவரை, வழங்குகின்ற கம்பனி, வழங்கலை ஆதரிக்கின்ற உரிமம் பெற்ற வர்த்தக வங்கி/உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கி என்பனவற்றிடமிருந்து முழுமையான மீட்புப் பெறுமதிக்கு ஒப்புதலளிக்கப்பட்ட துணைநில் தொடர் கொடுகடனைப் பெற்றிருக்க வேண்டும். இது அத்தகைய வர்த்தகப் பத்திரங்கள்/ வாக்குறுதிச் சான்றிதழ் என்பனவற்றின் முதிர்ச்சிக் காலத்தினைவிட நீண்ட காலத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

அல்லது

இலங்கை மத்திய வங்கியினால் ஒப்புதலளிக்கப்பட்ட தரமிடல் முகவரின் முதலீட்டுத் தரமிடல் ஒன்று.

முழுமையான மீட்பு பெறுமதி என்பது அத்தகைய வர்த்தகப் பத்திரம்/ வாக்குறுதிச் சான்றிதழ் என்பனவற்றின் மீட்பின்போது செலுத்தத்தக்க முதல் தொகை, வட்டி மற்றும் ஏனைய கட்டணங்கள் என்பனவற்றைக் குறிக்கிறது.

3. நடவடிக்கை முறைகள் : வர்த்தகப் பத்திரம்/ வாக்குறுதிச் சான்றிதழ் என்பனவற்றின் வழங்கலுக்கான உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்/ உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கிகளின் ஆதரவு இலங்கை மத்திய வங்கியின் முன் ஒப்புதல் பெற்றிருக்க வேண்டுமெனக் கோரப்படவில்லை. எனினும் இக் கருவிகளின் வழங்கலுக்கான ஆதரவினை வழங்குகையில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்/ உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கிகள் பின்வருவனவற்றை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

3.1 எண்ணியுள்ள கம்பனி அத்தகைய வர்த்தகப் பத்திரம்/ வாக்குறுதிச் சான்றிதழ்களை உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு/ உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கிகளுக்கு வழங்க பின்வருவனவற்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) வர்த்தகப் பத்திரம்/ வாக்குறுதிச் சான்றிதழ் ஒவ்வொன்றினதும் வழங்கல் தொடர்பாக விண்ணப்பிக்கப்பட்ட ஆதரவின் தன்மையைக் குறிக்கின்ற எழுத்து மூலமான வேண்டுகோளொன்று.

(ஆ) கம்பனியின் தோற்றப்பாடு மற்றும் எறிவு செய்யப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்றுக்கள் உள்ளடங்கிய நிதியியல் தரவு என்பனவற்றை உள்ளடக்கிய அனைத்தையுமுள்ளடக்கிய நிதியியல் தகவல்கள்

(இ) ஏற்கனவே வழங்கப்பட்டு வெளிநிற்கின்ற வர்த்தகப் பத்திரம்/ வாக்குறுதிச் சான்றிதழின் பெறுமதி

(ஈ) வர்த்தகப் பத்திரம்/ வாக்குறுதி சான்றிதழின் வழங்கல் தொடர்பான சபையின் தீர்மானம்.

3.2 முதலீட்டாளர்கள் கேட்குமிடத்து வழங்குவதற்கு ஆயத்தமான நிலையில் கம்பனியின் தோற்றப்பாடுகள் மற்றும் நிதியியல் தரவுகள் இருப்பதனையும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்/ உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் உறுதிப்படுத்த வேண்டும்.

3.3 வழங்குநரின் நிதி நிலைமைகள் போதுமானளவிற்கு மதிப்பீடு செய்யப்பட்டு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்/ உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் ஆதரவினை வழங்குவதற்கு முன்னர் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட வேண்டும். இந் நோக்கத்திற்காக உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் / உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மற்றைய விடயங்களுடன் கொடுகடன் தகவல் பணியத்திலிருந்தான அறிக்கையையும் பெற்றுக் கொள்ளவேண்டும்.

3.4 வர்த்தகப் பத்திரம்/வாக்குறுதிச் சான்றிதழ்கள் போதுமான பாதுகாப்புப் பண்புகளை உள்ளடக்கிய விதத்தில் நல்ல தரமான பாதுகாப்பான தாள்களில் அச்சிடப்பட வேண்டியதுடன், அங்கீகரிக்கப்படாத ஆட்களிடம் இது சென்றடைவதனைத் தடுக்கும் விதத்தில் ஆவணங்கள் தேவையான முன்னெச்சரிக்கையுடன் பாதுகாப்பில் வைத்திருக்கப்படல் வேண்டும்.

3.5 வர்த்தகப் பத்திரம்/ வாக்குறுதிச் சான்றிதழ்களின் வழங்கல், வழங்கல் நாளிலிருந்து 14 கலண்டர் நாட்களைக் கொண்ட காலப்பகுதிக்குள் முற்றுப் பெறுகிறது. 14 நாட்களின் பின்னர் ஏதாவது விற்கப்படாத பங்கு இருப்பின் அதனை வழங்கமுடியாது.

3.6 வர்த்தகப் பத்திரம் /வாக்குறுதிச் சான்றிதழ்களின் எந்தவொரு தனி வழங்கலும் அதே முதிர்ச்சி நாளையே கொண்டிருக்கும்.

3.7 வழங்குகின்ற கம்பனி, வர்த்தகப் பத்திரம்/ வாக்குறுதிச் சான்றிதழ் தொடர்பான கடப்பாடுகளை முதிர்ச்சி நாளன்று நிறைவேற்றல் வேண்டும். இது தொடர்பாக சலுகைக்காலம் எதுவும் வழங்கப்படமாட்டாது.

3.8 வர்த்தகப் பத்திரம்/ வாக்குறுதிச் சான்றிதழ் பின்வரும் ஆகக் குறைந்த தகவல்களை/ பண்புகளைக் கொண்டிருக்கும்.

(அ) படுகடன் கருவி தொடர்பான விபரங்கள் அதன் மீது தெளிவாக அச்சிடப்பட்டிருக்க வேண்டும்.

(ஆ) வழங்குகின்ற கம்பனியின் பெயர்

(இ) தொடர் இலக்கம்

(ஈ) கொடுப்பனவு செய்யுமிடம் (வட்டியும் முதலும்)

(உ) வழங்கும் நாள்

(ஊ) தொகை ( எழுத்திலும் எண்ணிலும் )

(எ) முதிர்ச்சி நாள்

(ஏ) வழங்குகின்ற கொடுப்பனவு செய்கின்ற முகவரின் பெயர்

(ஐ) முதல் தொகையின் மீள் கொடுப்பனவு மற்றும் வட்டியின் கொடுப்பனவு என்பன உத்தரவாதப்பட்டிருந்தால், உத்தரவாதப்படுத்தியவரின் பெயர்.

(ஒ) வழங்கும் கம்பனியின் கையொப்பமிட அதிகாரமளிக்கப்பட்டவர்களின் கையொப்பங்கள்

(ஓ) உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்/ உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள். வர்த்தகப் பத்திரங்கள் / வாக்குறுதிச் சான்றிதழ்கள் மீதான கொடுப்பனவுகளுக்காக எந்தவொரு கடப்பாட்டினையும் ஏற்றுக் கொள்ளாதவிடத்து, அது கையொப்பத்தினை மட்டும் உறுதிப்படுத்துவதாக இருப்பின். அத்தகைய உண்மையை வர்த்தகப் பத்திரம்/ வாக்குறுதிச் சான்றிதழின் மீது தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

(ஔ) வர்த்தகப் பத்திரம்/ வாக்குறுதிச் சான்றிதழின் அலுவலக அடி இதழும் (அ) இலிருந்து (ஓ) வரையான தகவல்களைக் கொண்டிருத்தல் வேண்டும். (ஓ) இனைப் பொறுத்தவரை தொடர்பான கையொப்பமிடுவோரின் கையொப்பம்/ முதலெழுத்து

க. வர்த்தகப் பத்திரங்கள்/ வாக்குறுதிச் சான்றிதழ்களின் பின்புறம் புறக்குறிப்பீடு செய்யக் கூடியளவிற்கு போதுமான இடத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3.9 (அ) உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் / உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கிகளின் வர்த்தகப் பத்திரம் /வாக்குறுதிச் சான்றிதழ் தொடர்பான கணக்குகள் பொருந்தத்தக்க /ஏற்றுக் கொள்ளத்தக்க கணக்கீட்டு நடைமுறைகளுடன் இணங்குவதாக இருக்க வேண்டும். அத்துடன் வர்த்தகப் பத்திரம்/ வாக்குறுதிச்சான்றிதழ்களுக்கான நிதியல்லா அடிப்படை ஆதரவு பதிவு செய்யப்பட்டு ஐந்தொகைக்கு வெளியேயான விடயங்களை அறிவிக்கப்பட வேண்டும்.

(ஆ) உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்/ உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கிகளின் வர்த்தகப் பத்திரம்/வாக்குறுதிச் சான்றிதழ் மீதான கடப்பாடுகளை/பொறுப்புக்களை இலங்கை மத்திய வங்கிக்குச் சமர்ப்பிக்கும் நியதிக் கூற்றுக்களில் குறிப்பிடலாம்.

(இ) மாதாந்தம் வெளிநின்ற வர்த்தகப் பத்திரங்கள்/வாக்குறுதிச் சான்றிதழ்களின் வழங்கலுக்கான உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்/ உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் ஆதரவு தொடர்பான விபரங்கள் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் உள்ளவாறு மாதாந்த கூற்றுக்களில் அறிவிக்கலாம். அடுத்துவரும் மாதத்தில் 15ஆம் நாளன்று சமர்ப்பிக்கப்படுகின்ற இவ்வறிக்கை பொதுப் பேரேட்டில் பதிவு செய்யப்பட்டவாறு வழங்கலின் பல்வேறுபட்ட வகைகளின் கீழ் உள்ள உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்/ உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கிகளின் கடப்பாடுகளை சரியாக உறுதிப்படுத்தி அறிக்கையில் சரியாக பிரதிபலிக்கப்படல் வேண்டும். வெளிநின்ற நிலுவைகள் எதுவுமில்லையாயின் "இல்லை" அறிக்கையொன்றை அனுப்ப வேண்டும்.

3.10 வர்த்தகப் பத்திரம்/ வாக்குறுதிச் சான்றிதழ்களின் வழங்கலுக்கு ஆதரவளிக்கும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் / உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கிகள் அனைத்து சட்ட ரீதியான தேவைப்பாடுகளையும் உறுதிப்படுத்த வேண்டும்.

3.11 வர்த்தகப் பத்திரம்/வாக்குறுதிச் சான்றிதழை மீண்டும் வழங்குவது புதிய வழங்கலாகவே கருதப்பட வேண்டும்.

4. மத்திய வங்கியின் முன் மதியுடைய தேவைப்பாடுகள்

4.1 வர்த்தகப் பத்திரம்/ வாக்குறுதிச் சான்றிதழின் வழங்கல் தொடர்பான உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால்/ உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கிகளினால் வழங்கப்பட்ட அனைத்துக் கொடுகடன் வசதிகளும் செய்யப்பட்ட கடப்பாடுகளும் வழங்குகின்ற கம்பனிக்கு வழங்கப்பட்ட கடனாகவே கருதப்படுவதுடன் வங்கித் தொழில் சட்டத்தின் கீழ் காலத்திற்குக் காலம் வழங்கப்படும் பணிப்புரைகளுக்கும் மத்திய வங்கியினால் வழங்கப்படும் அனைத்து முன்மதியுடைய வழிகாட்டல்களுக்கும் உட்பட்டதாகும்.

5. இவ்வழிகாட்டல்கள் 2001 சனவரி 05ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும்

6. வர்த்தகப் பத்திரங்களின் வழங்கலுக்காக வழங்கப்பட்ட வசதிகள் தொடர்பாக இலங்கையில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு 1995.06.05ஆம் நாளன்று வழங்கப்பட்ட வழிகாட்டல்கள் இத்தால் நீக்கப்படுகின்றது.

7. இவ்வழிகாட்டல்கள் தொடர்பான எந்தவொரு விளக்கமும்/ விசாரணைகளும் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு முகவரியிடப்பட வேண்டும்.

பீ. ரி. சிறிசேன

வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்

**வர்த்தகப் பத்திரங்கள்/ வாக்குறுதிச் சான்றிதழ்களின் மாதாந்த அறிக்கை**

**2001 சனவரி 5ஆம் நாளிற்குரிய வழிகாட்டல்களின் நியதிகளுக்கிணங்க.................................அன்று உள்ளவாறு**

| வழங்கும் கம்பனியின் பெயர் (1) | வழங்கும் கம்பனியின் சட்ட அந்தஸ்து (2) | வழங்கப்பட்ட வாக்குறுதிச் சான்றிதழ்களின் வகை (3) | வழங்கல்களின் தொகை (முகப்புப் பெறுமதி) (4) | உதவப்பட்ட தொகை (5) | வழங்கப்பட்ட திகதி வ/மா/தி (6) | முதிர்ச்சித் திகதி (ஆ/மா/தி) (7) | வட்டிவீதம் (8) | ஆதரவின் தன்மை (9) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |

அறிவுறுத்தல்கள்

*நிரல் (2)
பின்வரும் குறியீடுகள் பயன்படுத்தப்படுவதனை தயவு செய்து குறிப்பிடவும்

| | |
|---|---|
| தனியார் கம்பனி | த.க |
| விலைக்குறிப்பிடா பொதுக்கம்பனிகள் | வி.கு |
| விலை குறிப்பிடா பொதுக்கம்பனிகள் | |
| மக்கள் கம்பனி | |

*நிரல் (3) வர்த்தகப் பத்திரங்கள் அல்லது (வ.ப) வாக்குறுதிச் சான்றிதழ்கள் (வா.சா) அல்லது வேறு ஏதாவது வடிவமா (தயவு செய்து குறிப்பிடவும்) என்பதனை எடுத்துக்காட்டவும்.

*இவ்வறிக்கை, வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கவேண்டும்.

*வெளிநின்ற தொகை இல்லையாயின் இல்லை என்ற அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

நிரல் (9)
பின்வரும் குறியீடுகள் பயன்படுத்தப்படுவதனைக் குறிப்பிடவும்

| ஆதரவின் தன்மை | குறியீடு |
|---|---|
| ஏற்றுக் கொள்ளல் | ஏ.கொ |
| புறக்குறிப்பீடிடல் | பு.கு |
| உத்தரவாதப்படுத்தல் | உ.ப |
| கீழ்வரைதல் | கீ.வ |
| கொள்வனவு | கொ.வ |
| வழங்கல் முகவர் | வ.மு |
| கொடுக்கும் முகவர் | கொ.மு |
| வணிகர் | வணி. |
| உறுதிப்படுத்துனர் | உ.ப |

இவ்வறிக்கை வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட ஆதரவின் பெறுமதியினைப் பிரதிபலிப்பதாயும் அறிக்கையின் ஐந்தொகை மாதத்தின் இறுதியில் உள்ள பொதுப் பேரேட்டில் நிலுவைகளுடன் ஒத்திருப்பதனையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றோம்.

திகதி: வங்கியின் பெயர்: அங்கீகாரம் பெற்ற அலுவலர்

தொழிற்பாட்டு அறிவுறுத்தல் எண்: 01/01/002/0034/001

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்,
வங்கித் தொழில் திணைக்களம்
22 சனவரி 2001

உரிமம் பெற்ற அனைத்து வர்த்தக வங்கிகளுக்கும்

## ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களை மீளப் பெறுதல்

2000ஆம் ஆண்டு திசெம்பர் 22இலும், 2001ஆம் ஆண்டு சனவரி 18இலும் நடைபெற்ற வங்கி முகாமையாளர்களின் கூட்டங்களிலும், 2000ஆம் ஆண்டு நவெம்பர் 24இல் நடைபெற்ற இலங்கை வெளிநாட்டுச் செலாவணி வணிகர் சங்கத்தின் கூட்டத்திலும் கலந்துரையாடப்பட்டவாறு, ஏற்றுமதிக் கட்டளைகளின் நிதியிடலுக்காக உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களின் தீர்ப்பனவிலேற்பட்ட தாமதங்கள், வங்கிகளின் மதிநுட்பமான முகாமைக்குப் பிரச்சனைகளை ஏற்படுத்தக் கூடுமென்பதிலும், இது விடயத்தில் சீரான நடைமுறையொன்றைக் கைக்கொள்ள வேண்டிய தேவை உண்டென்பதிலும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

2. எனவே ஏற்றுமதிக் கட்டளைகளின் அடிப்படையில் ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்பட்ட நிதியியல் கடன்களை நேரத்தோடு தீர்ப்பனவு செய்வதை உறுதிப்படுத்தும் நோக்கில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் 2001ஆம் ஆண்டு சனவரி 23இலிருந்து பின்வரும் நடைமுறைகளைக் கைக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றன.

(அ) உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் அவற்றினூடாக மேற் கொள்ளப்பட்ட ஏற்றுமதிக் கட்டளைக்கெதிரான ஏற்றுமதிப் பெறுகைகளின் மீளவனுப்பல்களை உரிய நேரத்தில் மேற்கொள்வதை உறுதிப்படுத்தும் முகமாக அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

(ஆ) அவ்வாறு செய்யுமிடத்து, உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், ஏற்றுமதிக் கட்டளைகளின் நிதியிடலுக்காக வழங்கப்பட்ட கடனை எப்பொருட்களுக்காக கடன் வழங்கப்பட்டதோ அவை கப்பலேற்றப்பட்ட நாளிலிருந்து 90 நாட்கள் கொண்ட காலப்பகுதிக்குள் கடன்பாட்டாளர்கள் முழுவதுமாகத் தீர்ப்பனவு செய்வதை உறுதிப்படுத்த வேண்டும்.

(இ) மேலே கூறப்பட்ட நோக்கங்களை அடைவதற்காக, ஏற்றுமதிப் பெறுகைகளை உரிய நேரத்தில் கடன்பாட்டாளர் மீளச் செலுத்தாதவிடத்து, அத்தகைய கடன்கள் மீது பிரயோகிக்கக்கூடிய வட்டி வீதமானது பின்வருமாறு உயர்த்தப்படலாம்.

(i) கப்பலேற்றப்படும் நாளிலிருந்து 90 நாட்களுக்குப் பின்னர், 30 நாட்களுக்கு மேற்படாத தாமதமொன்று காணப்படுகையில் ஆண்டுக்கு 1000 அடிப்படைப் புள்ளிகள் மற்றும்,

(ii) அதற்குப் பின்பான ஒவ்வொரு 30 நாட்கள் தாமதத்துக்கும் ஆண்டுக்கு 200 மேலதிக அடிப்படைப் புள்ளிகள்

3. குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் தீர்க்கப்படாத அத்தகைய கடன்களின் விபரங்கள் பற்றிய மாதாந்த அறிக்கைகளை பின்னிணைப்பில் கொடுக்கப்பட்ட மாதிரியில் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்குச் சமர்ப்பிக்குமாறு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் இத்தால் வேண்டப்படுகின்றன.

4. ஒவ்வொரு மாதாந்த அறிக்கையும், தொடர்ந்துவரும் மாதத்தின் இரண்டாவது வாரத்தின் முடிவில் அல்லது அதற்கு முன்பாக வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இதன்படி, 2001ஆம் ஆண்டு சனவரிக்கான மேலே கூறப்பட்ட விபரங்களை வழங்கும் முதலாவது அறிக்கை, 2001 ஆம் ஆண்டு பெப்புருவரி 16ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்பாக வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரைச் சென்றடைய வேண்டும்.

முதன்மைக் கணக்காளர்

வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்

**இணைப்பு**

## ............மாதத்திற்கான ஏற்றுமதி காலம்பிந்திய கொடுகடன் வசதிகளின்மீது விதிக்கப்பட்ட வட்டி

வங்கியின் பெயர் :

(தொகை இலங்கை ரூபாவில்)

| வாடிக்கையாளாரின் பெயர் | ஏற்றுமதி உண்டியல்கள் நிதி (கழிவிடப்பட்டது/ கைமாற்றப்பட்டது) | | | | | | | | ஏனைய ஏற்றுமதிக் கொடுகடன் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கொடுகடன் தீர்ப்பனவுக் காலம் | வழங்கப் பட்ட திகதி | வழங்கப் பட்ட தொகை | வட்டி வீதம் (%) | காலப் பகுதி | காலம்பிந்திய தொகை | பிந்திய நாட்களின் எண்ணிக்கை | விதிக்கப்பட்ட அதிகரிக்கப் பட்ட வட்டித் தொகை | வெளிநின்ற தொகை | அவவிடப் பட்ட அதிகரித்த வட்டி" |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |

**குறிப்பு:**

* * உள்நாட்டு வங்கித் தொழில் பிரிவுகளினாலும் வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகளினாலும் ரூபாவிலும் வெளிநாட்டு நாணயங்களிலும் வழங்கப்பட்ட ஏற்றுமதிக் கொடுகடன்களையும் உள்ளடக்கும்

**** ஏற்றுமதி வியாபாரத்திற்கு நிதியிடுவதற்காக வழங்கப்பட்ட குறுங்காலக் கடன்கள் மற்றும் மேலதிகப் பற்றுக்கள் போன்ற நிதியிடுகின்ற உண்டியல்கள் தவிர்ந்த அனைத்து ஏற்றுமதிக் கடன்களும் ஏற்றுமதி உண்டியல்கள் / கட்டளைகளுடன் பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ தனித்தனியாக அடையாளம் காணப்பட்டன.

**பூரணமாக பூர்த்தி செய்து வங்கி மேற்பார்வைத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கிக்கு தயவுசெய்து அனுப்பி வைக்கவும் - தொலை நகல் 477711**

..............................

அங்கீகாரம் பெற்ற அலுவலரின் கையொப்பம்

திகதி :..............................

வங்கியின் பெயரும் அடையாள முத்திரையும்

தொழிற்பாட்டு அறிவுறுத்தல் எண்: 02/05/009/0100/001

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்,
8ஆம் மாடி, ரேணுகா கட்டடம்
41 சனாதிபதி மாவத்தை
கொழும்பு.1
29 சனவரி 2001

உரிமம் பெற்ற அனைத்து வர்த்தக வங்கிகளுக்கும்

## ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களை மீளப் பெறுதல்

26 சனவரி 2001இல் நடைபெற்ற வங்கி முகாமையாளர்களின் கூட்டத்தில் மேலே கூறப்பட்டுள்ள விடயம் சம்பந்தமாக 22 சனவரி 2001இன் எண் 01/01/002/0034/001 கொண்ட சுற்றறிக்கையின் உள்ளடக்கம் தொடர்பில் வங்கி முகாமையாளர்கள் விளக்கங்களைக் கோரியிருந்தனர். கூட்டத்தில் அடையப்பட்ட உடன்பாடுகள் கீழே தரப்பட்டுள்ளன.

**(அ) ஏற்றுமதிப் பெறுகைகளினால் ஏற்றுமதிக் கொடுகடன் தீர்ப்பனவு செய்தல்**

வங்கி முகாமையாளர்கள், பொருத்தமான ஏற்றுமதிகளின் பெறுகைகளினாலேயே அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் ஏற்றுமதிக் கொடுகடன் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டுமா என்பதுபற்றி கேள்வி எழுப்பினார்கள். ஏற்றுமதிப் பெறுகைகளினாலேயே மீள் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்ற அடிப்படையில் ஏற்றுமதிக் கொடுகடன் (ஏற்றுமதி நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட மேலதிகப் பற்றை உள்ளடக்கி) வழங்கப்பட வேண்டுமென்பதில் இணக்கம் காணப்பட்டதுடன் அதனால் ஏற்றுமதிக் கட்டளையின் கீழ் பொருட்கள் கப்பலேற்றப்பட்ட 90 நாட்களுக்குள், ஏற்றுமதிப் பெறுகைகளிலிருந்து ஏற்றுமதிக் கொடுகடனைத் தீர்க்கத் தவறுமிடத்து சுற்றறிக்கையில் குறிப்பிட்டுக் கூறப்பட்டுள்ள அதிகரிக்கப்பட்ட வட்டி வீதங்கள் பொருத்தமானதாக அமையும்.

**(ஆ) கரைகடந்த வங்கித் தொழில் பிரிவுகளுக்கு இச்சுற்றறிக்கையின் பொருத்தப்பாடு**

இச்சுற்றறிக்கையின் தேவைப்பாடுகள் கரைகடந்த வங்கித் தொழில் பிரிவுகளுக்கும் பொருந்துமா என்பது பற்றியும் வங்கி முகாமையாளர்கள் கேள்வி எழுப்பினர். தனி உரிமம் வழங்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றின் பகுதியாகவுள்ள வங்கிகளின் உள்நாட்டுப் பிரிவுகள் மற்றும் கரைகடந்த பிரிவுகளினால் வழங்கப்பட்ட கொடுகடனுக்கு இச்சுற்றறிக்கையின் தேவைப்பாடுகளின் கீழுள்ள அடிப்படைக் கோட்பாடுகள் சரிசமமாகப் பொருந்துமென்றும் உடன்பாடு காணப்பட்டது. எனவே அதன் தேவைப்பாடுகள் அத்தகைய இரு பிரிவுகளினாலும் வழங்கப்பட்ட ஏற்றுமதிக் கொடுகடனின் தீர்ப்பனவுகளுக்கும் பொருந்தும்.

**(இ) மேலதிகப்பற்றுக்களுக்கு இச் சுற்றறிக்கையின் பொருத்தப்பாடு**

வங்கி முகாமையாளர்கள், ஏற்றுமதிப் பெறுகைகளிலிருந்து மேலதிகப் பற்றுக்களைத் தீர்ப்பனவு செய்வதுபற்றிக் கேள்வி எழுப்பியிருந்தனர். ஏற்றுமதி நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட மேலதிகப் பற்று வசதிகள் பொருட்கள் கப்பலேற்றப்பட்டு 90 நாட்களுக்குள் ஏற்றுமதிப் பெறுகைகளிலிருந்து தீர்ப்பனவு செய்யப்பட வேண்டியதுடன், அவ்வாறு செய்யத் தவறுதல் சுற்றறிக்கையில் குறிப்பிட்டுக் கூறப்பட்டுள்ள அதிகரிக்கப்பட்ட வட்டி வீதங்களைக் கவருவதாகவே அமையும்.

உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், வங்கி முகாமையாளர்களின் கூட்டத்தில் அடையப்பெற்ற உடன்பாடுகளுக்குக் கட்டுப்படுமாறு வேண்டப்படுகின்றனர்.

**வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

29 சனவரி 2001

வெளிநாட்டுச் செலாவணியில் அங்கீகாரம்பெற்ற வணிகர்களாக

நியமிக்கப்பட்டுள்ள உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான அறிவுறுத்தல்கள்

அன்புள்ள ஐயா,

## வெளிநாட்டுச் செலாவணியின் முன்னோக்கிய விற்பனைகள் மற்றும் கொள்வனவுகள்

இலங்கையில் வெளிநாட்டுச் செலாவணியினது முன்னோக்கிய சந்தையின் வலுவற்ற தன்மையைப் பொறுத்தவரையில், செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் அங்கீகாரமளிக்கப்பட்ட வணிகர்களான உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்பற்றவையும், அத்தகைய வங்கிகளின் வைப்பாளர்களின் நலனுக்கும், பொருளாதாரத்துக்கும் தீங்கு விளைவிக்கக் கூடியவையுமான வெளிநாட்டுச் செலாவணியிலான முன் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம் பாரிய இடர் நேர்வுகளைப் பொறுப்பேற்க நேரிடுமென்பதை மத்திய வங்கி கவனத்திற் கொண்டுள்ளது. எனவே வைப்பாளர்களின் நலனுக்காகவும், வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையை வலுப்படுத்துவதற்காகவும், செயற்றிறன் வாய்ந்த முன்னோக்கிய சந்தையொன்றின் அபிவிருத்தி மேற்கொள்ளப்படும்வரை, வெளிநாட்டுச் செலாவணியில் முன்னோக்கிய சந்தைத் தொழிற்பாடுகளை நெறிப்படுத்த வேண்டியது அவசியமாகக் கருதப்படுகின்றது. இதனால், மதிநுட்பமான நிலைப்பாடு மற்றும் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் உறுதிப்பாட்டோடு தொடர்புடைய முக்கிய விடயங்கள் ஆகிய இரண்டிலிருந்தும் நோக்குகையில் வங்கிகள் தமது வாடிக்கையாளர்களுடனான வெளிநாட்டுச் செலாவணி கொடுப்பனவுகள் மற்றும் பெறுகைகள் சம்பந்தமான கொடுக்கல் வாங்கல்களைப் பொறுத்தவரையிலும், தற்காலிகமாக, வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களின் தேவைகளை ஈடு செய்வதற்கு நியாயமான அளவில் போதிய காலப்பகுதிக்கும் மேற்கொள்வது விரும்பத்தக்கதாகும்.

2. முன் கூறப்பட்டவற்றின் அடிப்படையில் நோக்குகையில் செலாவணிக் கட்டுப்பாட்டாளரினால் வழங்கப்பட்ட 1993.03.29ஆம் நாளின் எண் ஈசீ/ 41/ 93 (பீ) கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் பீ (ii) (அ) பந்தியின் நோக்கங்களைக் கணக்கிலெடுக்காது 360 நாட்கள் வரையான காலப்பகுதியில் வெளிநாட்டுச் செலாவணி விற்பனை அத்துடன்/அல்லது கொள்வனவுக்கான முன்னோக்கிய் ஒப்பந்தங்களில் ஈடுபடுவதற்காக வழங்கப்பட்ட அதிகாரங்கள் இத்தால் உடனடியாக நீக்கப்படுகிறதென்பது அங்கீகாரம் பெற்ற வணிகர்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

3. ஆகவே, செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் 1994.03.18ஆம் நாளின் எண் ஈசீ/ 06/ 94 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களினால் அனைத்து (மூலதனமற்ற) பன்னாட்டு நடைமுறைக் கொடுக்கல் வாங்கல்களுக்குமான வெளிநாட்டுச் செலாவணி வழங்கலுக்காக அங்கீகாரம் பெற்ற வணிகர்களுக்கு வழங்கப்பட்ட அனுமதியைப் பாதிக்காத விதத்திலும், இலங்கையில் வெளிநாட்டுச் செலாவணியின் திறன்வாய்ந்த முன்னோக்கிய சந்தையொன்றின் அபிவிருத்தியை எதிர்பார்த்த நிலையிலும், அங்கீகாரம் பெற்ற வணிகர்கள், வெளிநாட்டுச் செலாவணியில் தமது வாடிக்கையாளர்களுடன் முன்னோக்கிய் ஒப்பந்தங்களில் நடைமுறையிலுள்ள ஒப்பந்தங்களைப் புதுப்பிப்பது உட்பட ஈடுபடும்போது மேலுமொரு அறிவித்தல் வரும்வரை உடனடியாகவே பின்வரும் நிபந்தனைகளுககு இணங்கி நடக்க வேண்டும்.

(i) வெளிநாட்டுச் செலாவணியினது விற்பனை அத்துடன்/ அல்லது கொள்வனவுக்கான முன் ஒப்பந்தங்கள், 180 நாட்கள் வரையிலான காலப்பகுதிக்கு மட்டுமாகவும். பொருட்கள் மற்றும் பணிகள் தொடர்பிலான வெளிநாட்டுச் செலாவணிக் கொடுப்பனவுகள் மற்றும் பெறுகைகள் ஆகிய நோக்கங்களுக்காகவுமே இருக்க வேண்டும்.

(ii) வெளிநாட்டுச் செலாவணி முன்னோக்கிய் ஒப்பந்தமொன்றில் ஈடுபடும் அங்கீகாரம் பெற்ற வணிகரொருவர் இந்நடவடிக்கையானது பொருட்கள் மற்றும் பணிகளின் வர்த்தகத்தை உள்ளடக்கிய இயல்பான வர்த்தக ஒப்பந்தமொன்று தொடர்பிலான கொடுக்கல் வாங்கலென்ற விடயத்தில் தன்னைத் திருப்திப்படுத்திக் கொள்ள வேண்டும்.

(iii) வாடிக்கையாளரொருவருடன் வெளிநாட்டுச் செலாவணி விற்பனைக்கான முன்னோக்கிய ஒப்பந்தமொன்றில் ஈடுபடும் அங்கீகாரமளிக்கப்பட்ட வணிகரொருவர் அத்தகைய ஒப்பந்தமொன்றில் ஈடுபடும்போது, ஒப்பந்தத்தின் பெறுமதியில் 50 சதவீதத்திற்குக் குறைவான வைப்பொன்றை இலங்கை ரூபாவில் பெற்றுக்கொள்வதோடு, ஒப்பந்தம் செயற்படும் நாள்வரையில் அதனை வைத்திருக்கவும் வேண்டும்.

(iv) வெளிநாட்டுச் செலாவணி முன் ஒப்பந்தமொன்று செயற்படும் நாள், முன் செலாவணி ஒப்பந்தத்தின் கீழான பொருத்தமான வர்த்தக ஒப்பந்தத்தின் நியதிகளில் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுப்பனவு அல்லது பெறுகை எதுவாயிருப்பினும் மேற்கொள்ளப்படும் திகதிக்கு பின்பாக இருக்கக் கூடாது.

(v) தற்போது உள்ளதைப் போல, வாடிக்கையாளரினால் வெளிநாட்டுச் செலாவணி முன்னோக்கிய ஒப்பந்தமொன்று இரத்துச் செய்யப்படும்போது தண்டத்துக்குட்பட வேண்டியிருப்பதுடன் அங்கீகாரம் பெற்ற வணிகருக்கு அதனாலேற்படும் இழப்பினை முற்றாக ஈடு செய்யக்கூடிய அளவிலும் இது அமைந்திருக்க வேண்டும்.

(4) எந்த நாளிலாவது மேற் கொள்ளப்படும் வெளிநாட்டுச் செலாவணியின் முன்னோக்கிய கொடுக்கல் வாங்கலோடு தொடர்புடைய விபரங்கள் அதே நாளின் இறுதியில் பிற்பகல் 6.00 மணிக்குப் பிந்தாமல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு தொலை நகல் எண் 325824இல் அறிவிக்கப்பட வேண்டும். ஏதாவது தெளிவுபடுத்தப்பட வேண்டியிருப்பின் தயவுசெய்து வங்கி மேற்பார்வைத் திணைக்கள துணைப் பணிப்பாளர் திரு.பி. சமரசிறியுடன் தொலைபேசி எண் 344838 இல் தொடர்பு கொள்ளவும்.

தங்கள் உண்மையுள்ள

செலாவணிக் கட்டுப்பாட்டாளர் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்

# வெளிநாட்டு நாணயத்திலான முன் கொடுக்கல் வாங்கல்

அதிகாரம் பெற்ற வணிகரின் பெயர் : .................................................................................. திகதி :..............................

| | நாளின் ஆரம்பத்தில் வெளிநின்ற நிலுவைகள் (ஐ.அ. டொலருக்குச் சமமாக பில்லியன்) | நாளின் மொத்தக் கொடுக்கல் வாங்கல்கள் (ஐ.அ.டொலருக்குச் சமமாக பில்லியன்) | ஏற்றுக்கொள்ளப் பட்ட மொத்த விளிம்பு வைப்பு (இலங்கை ரூபா மில்லியன்) | நாளின் இறுதியில் வெளி நின்ற நிலைமை (ஐ.அ. டொலருக்குச் சமமாக பில்லியன்) |
|---|---|---|---|---|
| அ. மொத்த முன்னோக்கிய விற்பனைகள் | | | | |
| ஆ. மொத்த முன்னோக்கிய கொள்வனவுகள் | | | பொருந்தாது | |

மேலே கூறப்பட்ட விபரம் சரியானதென்பதை நான் உறுதிப்படுத்துகிறேன்.

..................................................................................

அதிகாரம் பெற்ற வணிகரின் கையொப்பம்

திகதி : ..........................

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்,
8ஆம் மாடி, ரேணுகா கட்டடம்
41 சனாதிபதி மாவத்தை
கொழும்பு.1
29 சனவரி 2001

அங்கீகாரம் பெற்ற வணிகர்களாகவுள்ள

அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்

அன்புள்ள ஐயா

## இறக்குமதி உண்டியல்களின் முற்கொடுப்பனவு

இறக்குமதி உண்டியல்களின் முற்கொடுப்பனவு தொடர்பாக 2001ஆம் ஆண்டு சனவரி 26இல் நடைபெற்ற வங்கி முகாமையாளர்களின் கூட்டத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலை தாங்கள் நினைவுபடுத்திக் கொள்ளலாம். குறிப்பாக வங்கி முகாமையாளர்கள் பிற்போடப்பட்ட கொடுப்பனவு நியதிகளில் பொருட்களை இறக்குமதி செய்த இறக்குமதியாளர்கள். அண்மையில் அவற்றுடன் தொடர்பான இறக்குமதி உண்டியல்களை, அவ்வுண்டியல்களின் உரிய கொடுப்பனவுத் திகதிக்கு முன்பாகத் தீர்ப்பனவு செய்யும் நடைமுறையை பின்பற்றினரென்பதைக் குறிப்பிட்டார். இந்நடைமுறை வங்கிகளுக்கு இடர்களை ஏற்படுத்துவதுடன், வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் உறுதியற்ற தன்மையை விளைவிக்குமென்பதும் உடன்பட்டுக் கொள்ளப்பட்டது. ஆகவே இறக்குமதி உண்டியல்களின் முற் கொடுப்பனவு வங்கிகளினால் கையேற்றுக் கொள்ளப்படக்கூடாதென்று தீர்மானிக்கப்பட்டது.

எனவே, அங்கீகாரம் பெற்ற வணிகர்களான உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் இறக்குமதி உண்டியல்களின் முற் கொடுப்பனவை மேற்கொள்ளக் கூடாதென்றும் இறக்குமதிக் கட்டளையை வழங்கும் நேரத்தில் வழங்குனருடன் மேற் கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் உடன்பட்டுக் கொண்டவாறு அத்தகைய உண்டியல்கள் முதிர்ச்சித் தினத்திலன்றே பணம் செலுத்தப்பட வேண்டுமென்றும் அறிவிக்கப்பட்டன.

தங்கள் உண்மையுள்ள

செலாவணிக்கட்டுப்பாட்டாளர் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்

தொழிற்பாட்டு அறிவுறுத்தல் எண் : 02/04/002/0005/002

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்,
8ஆம் மாடி, ரேணுகா கட்டடம்
41 சனாதிபதி மாவத்தை
கொழும்பு.1
31 சனவரி 2001

உரிமம் பெற்ற அனைத்து வர்த்தக வங்கிகளுக்கும்

அன்புள்ள ஐயா/ அம்மணி

## 1988 இன் எண் 30கொண்ட வங்கித் தொழில் சட்டத்தின் 86ஆம் பிரிவின் கீழ் திரவச் சொத்துக்களின் வரைவிலக்கணம்

1988இன் எண் 30 கொண்ட வங்கித்தொழில் சட்டத்தின் 86ஆம் பிரிவில் "திரவச் சொத்துக்களின்" வரைவிலக்கணத்தின் விடயம் "எ" யினால் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பிரயோகிக்கும் விடயத்தில், நாணயச்சபையானது, வர்த்தகப் பத்திரம்/ வாக்குறுதிச் சான்றிதழ்களிலான முதலீடுகளின் 50 சதவீதமானவை, முழுமையான மீட்புப் பெறுமதிக்கான வழங்கலுக்கு ஆதரவளிக்கும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கி/ உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கியிலிருந்தான ஒப்புதலளிக்கப்பட்ட துணைநில் கொடுகடன் தொடரினால் உதவியளிக்கப்பட்டிருக்குமிடத்து அல்லது, இலங்கை மத்திய வங்கியினால் ஒப்புதலளிக்கப்பட்ட தரமிடல் முகவர் நிலையத்தினால் மேற் கொள்ளப்பட்ட முதலீட்டு வகைத் தரமிடல் மற்றும் ஓராண்டுக்குக் குறைவான எஞ்சிய முதிர்ச்சிக் காலப்பகுதியைக் கொண்டிருப்பவை திரவச் சொத்துக்களாகக் கருதப்படுமெனத் தீர்மானித்துள்ளது.

தயவு செய்து இக்கடிதம் கிடைத்தமைபற்றி அறிவிக்கவும்.

தங்கள் உண்மையுள்ள

பி. ரி. சிறிசேன

வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்

தொழிற்பாட்டு அறிவுறுத்தல் எண் :02/04/004/0009/001

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்,
8ஆம் மாடி, ரேணுகா கட்டடம்
41 சனாதிபதி மாவத்தை
கொழும்பு.1
14 பெப்புருவரி 2001

வெளிநாட்டுச் செலாவணியில் அங்கீகாரம் பெற்ற வணிகர்களாக
நியமிக்கப்பட்டஉரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான
தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்

அன்புள்ள ஐயா.

## வெளிநாட்டுச் செலாவணி முன்னோக்கிய விற்பனைகளும் கொள்வனவுகளும்

மேலே கூறப்பட்ட விடயம் தொடர்பாக 2001 சனவரி 29ஆம் நாளிடப்பட்ட எமது தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் உள்ளடக்கம் மீது விளக்கம் கோரி வங்கிகளிடமிருந்தான விசாரணைகள் எமக்குக் கிடைத்துள்ளன. இதன்படி, பின்வரும் விளக்கங்கள் தங்களுடைய தகவலுக்காக வழங்கப்பட்டுள்ளன.

1. தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் பின்வருவனவற்றுக்குப் பிரயோகிக்கப்படமாட்டாது.

   (i) வங்கிகளுக்கிடையிலான முன்னோக்கிய ஒப்பந்தங்கள் (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு)

   (ii) வெளிநாட்டு நாணயமொன்று மற்றொரு வெளிநாட்டு நாணயத்தினால் கொள்வனவு செய்யப்படும் போதான முன் ஒப்பந்தங்கள்.

   (iii) செலாவணிக் கட்டுப்பாட்டாளரினால் வழங்கப்பட்டதும், 28.07.1992 நாளிடப்பட்டதுமான எண் ஈசீ/74/92 (சீ/எப்) கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் விடயம் 3இல் குறிப்பிட்டுக் கூறப்பட்டுள்ள பங்கு வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பிலான வெளிநாட்டுச் செலாவணிக் கொள்வனவுகள்.

2. மேலே கூறப்பட்ட விடயம் 1 (iii) க்கு உட்பட்டு, வாடிக்கையாளர்களுடனான முன்னோக்கிய ஒப்பந்தங்கள் பொருட்கள் மற்றும் பணிகள் தொடர்பான விடயங்களுக்கு மட்டுமே அனுமதிக்கப்பட வேண்டும். மூலதனக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக முன்னோக்கிய ஒப்பந்தங்கள் அனுமதிக்கப்படலாகாது.

3. ஒப்பந்தமொன்றைப் புதுப்பித்தல் அல்லது நீடித்தல் பற்றிய விடயத்தில், முன்னோக்கிய ஒப்பந்தத்துக்கான ஆகக் கூடிய காலப்பகுதியானது, முன்பே கழிந்த காலப்பகுதியையும் உள்ளடக்கி 180 நாட்களாக இருத்தல் வேண்டும். இக்காலப்பகுதியான 180 நாட்களையும் விஞ்சுகின்ற விடயங்களைப் பொறுத்தவரையில் புதிதாக ஒப்பந்தமொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். இவ்வொப்பந்தம் வெளிநாட்டுச் செலாவணி விற்பனைக்கான முன்னோக்கிய ஒப்பந்தத்தின் விடயத்தில் வைப்புக்களின் 50 சதவீதத்தை வேண்டி நிற்கும்.

4. இறக்குமதியாளரொருவரைப் பொறுத்த வரையில், நாணயக் கடிதத்தின் விடயத்தில் ஏற்கனவே பெறப்பட்ட உச்ச எல்லையானது அவ்வாறு ஏதும் இருப்பின் அது, வெளிநாட்டுச் செலாவணியின் விற்பனைக்காக மேற் கொள்ளப்பட்ட முன்னோக்கிய ஒப்பந்தத்துக்குத் தேவைப்பட்ட வைப்பாகக் கருதப்படக் கூடாதென்பதுடன் அதனால் இலங்கை ரூபாக்களில் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 50 சதவீதமான புதிய வைப்பொன்று முன்னோக்கிய ஒப்பந்தத்துக்காகத் தேவைப்படுத்தப்படும்.

5. வைப்பாக வைக்கப்பட்டுள்ள 50 சதவீத விளிம்புக்கு வங்கிகள் வட்டி செலுத்தலாம்.

6. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவம் முன்னோக்கிய கொடுக்கல் வாங்கல்களின் நாளாந்த நிலைமை தொடர்பான விபரங்களை எதிர்காலத்தில் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்துக்கு அறிவிப்பதற்காகப் பயன்படுத்தப்படலாம்.

தங்கள் உண்மையுள்ள

செலாவணிக் கட்டுப்பாட்டாளர் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்

இணைப்பு

# வெளிநாட்டு நாணயத்திலான முன்னோக்கிய கொடுக்கல் வாங்கல்கள்

அதிகாரம் பெற்ற வணிகரின் பெயர் : ........................................................................................ திகதி :..............................

| | நாளின் ஆரம்பத்தில் வெளிநின்ற நிலுவைகள் (ரூ. மில்லியன்) | நாளில் மேற் கொள்ளப்பட்ட புதிய ஒப்பந்தங்கள் (ரூ. மில்லியன்) | ஏற்றுக் கொள்ளப்பட்ட மொத்த விளிப்பு வைப்புக்கள் ( ரூபா மில்லியன்) | அந் நாளில் முதிர்ச்சியடைந்த மொத்த ஒப்பந்தங்கள் ( ரூபா மில்லியன்) | நாளின் இறுதியில் வெளி நின்ற நிலைமை ( ரூபா மில்லியன்) |
|---|---|---|---|---|---|
| மொத்த முன்னோக்கிய விற்பனைகள் | | | | | |
| மொத்த முன்னோக்கிய கொள்வனவுகள் | | | பொருந்தாது | | |

மேலே கூறப்பட்ட விபரம் சரியானதென்பதை நான் உறுதிப்படுத்துகிறேன்.

........................................................................................

அதிகாரம் பெற்ற வணிகரின் கையொப்பம்

திகதி : ..........................

தொழிபாட்டு அறிவுறுத்தல் எண்: 02/05/009/0100/001

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்,
8ஆம் மாடி, ரேணுகா கட்டடம்
41 சனாதிபதி மாவத்தை
கொழும்பு.1
16 பெப்புருவரி 2001

உரிமம் பெற்ற அனைத்து வர்த்தக வங்கிகளுக்கும்

## ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களை மீளப் பெறல்

மேலே கூறப்பட்ட விடயம் தொடர்பில் இணக்கம் காணப்பட்ட நடைமுறைகள் சம்பந்தமாக எம்மால் அறிவிக்கப்பட்ட 2001 சனவரி 29ஆம் நாளிடப்பட்டதும் எண் 01/ 05/ 009/ 0100/ 001 கொண்டதும், 2001 சனவரி 22ஆம் நாளிடப்பட்டதும் எண் 01/ 01/ 002/ 0034/ 001 கொண்டதுமான சுற்றறிக்கைகள் தொடர்பானதாகும். அதிலிருந்து, சில வங்கிகளும், ஏற்றுமதியாளர்களும் ஏற்றுமதிப் பெறுகைகளிலிருந்து ஏற்றுமதிக் கொடுப்பனவைத் தீர்ப்பனவு செய்வதற்காக , சில குறிப்பிட்ட ஏற்றுமதியாளர்களுக்கு 120 நாட்கள் பிற்போடப்பட்ட கொடுப்பனவு நியதிகள் வழங்கப்படுவது வழமையாகக் காணப்படுவதன் அடிப்படையில் உயர்த்தப்பட்ட வட்டிவீதங்களுக்குட்படுத்தாமல், கப்பலேற்றப்பட்ட நாளிலிருந்து வழங்கப்பட்ட 90 நாட்கள் கொண்ட ஆகக் கூடிய காலப்பகுதியை நீடிக்குமாறு வேண்டுகோள் விடுத்தனர். சாதாரண வர்த்தகக் காலப்பகுதியில் ருசியாவுக்கான தேயிலை ஏற்றுமதிகளுக்கான ஏற்றுமதிக் கொடுகடன் தீர்ப்பனவுக்கு 90 நாட்களை விஞ்சிய காலப்பகுதி அவசியமாகக் காணப்படுவதனை இதற்கு உதாரணமாகக் குறிப்பிட்டிருந்தனர்.

2. இத்தகைய விளக்கவுரைகளைக் கவனத்திற் கொண்டு, வாங்குனர்களுக்கு 120 நாட்களுக்குப் பிற்போடப்பட்ட கொடுப்பனவு நியதிகளை வழங்குவது வழக்கமாகக் காணப்படுவதன் அடிப்படையில் ஏற்றுமதிப் பெறுகைகளிலிருந்து ஏற்றுமதிக் கொடுகடனைத் தீர்ப்பனவு செய்வதற்கான காலப்பகுதியை கப்பலேற்றப்பட்ட நாளிலிருந்து 120 நாட்கள் வரையில் உயர்த்துவதற்கு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் தமது தீர்மானத்தையும், தன்மதிப்பையும் பயன்படுத்தலாம். இதன்படி, அத்தகைய ஏற்றுமதிகளுக்காகப் பெறப்பட்ட கடன்களுக்குப் பொருந்தத்கூடிய அதிகரிக்கப்பட்ட வட்டி வீதங்கள் பின்வருமாறு காணப்படும்.

(i) கப்பலேற்றப்பட்ட நாளிலிருந்து வங்கிகளால் தீர்மானிக்கப்பட்ட 120 நாட்களுக்கு அல்லது அதற்குக் குறைந்த காலப்பகுதிக்கு அப்பால் 30 நாட்களுக்கு மேற்படாத தாமதம் காணப்படுமிடத்து ஆண்டுக்கு 1000 அடிப்படைப் புள்ளிகள்

(i) அதற்குப் பின்பான ஒவ்வொரு 30 நாட்கள் கொண்ட தாமதத்துக்கும் ஆண்டுக்கு 200 மேலதிக அடிப்படைப் புள்ளிகள்

இது, 2001 பெப்புருவரி 19ஆந் திகதி திங்கட்கிழமையிலிருந்து நடைமுறைக்கு வரும்.

3. மேலே கூறப்பட்ட இரு சுற்றறிக்கைகளின் உள்ளடக்கம் தொடர்பான பின்வரும் விளங்கங்களும் தங்களுடைய தகவல்களுக்காகத் தரப்படுகின்றன.

(i) கடனோடு தொடர்புடைய ஏற்றுமதி உண்டியல்/ கட்டளையின் உடன்பட்டுக் கொள்ளப்பட்ட கொடுப்பனவுக் காலப்பகுதியானது, மேலே கூறப்பட்ட 2ஆம் பந்தியின் கீழ் வங்கியினால் தீர்மானிக்கப்பட்ட 90 நாட்கள் கொண்ட காலப்பகுதியை விஞ்சுமிடத்து, கப்பலேற்றப்பட்ட நாளிலிருந்து 90 நாட்களுக்கு மேலாகவோ அல்லது வங்கியினால் தீர்மானிக்கப்பட்ட காலப்பகுதியாகவோ எதுவாயினும் உயர்த்தப்பட்ட வட்டிவீதங்கள் அவற்றுக்குப் பொருந்துவனவாகக் காணப்படும்.

(ii) ஏற்றுமதிக் கொடுகடன்கள் 90 நாட்களுக்குள் அல்லது மேலேயுள்ள 2ஆம் பந்தியின் கீழ் வங்கியினால்

தீர்மானிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் மீளப் பெறப்படாவிட்டால் அத்தகைய ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்பட்ட உண்டியல்களின் கொள்வனவு/ கழிவிடல், கப்பலேற்றலுக்கு முன்பான கொடுகடன்/ கப்பலேற்றலுக்குப் பின்பான கொடுகடன் ஆகியவற்றின் வாயிலாக வழங்கப்பட்ட கடன்கள், ஏனைய கடன்கள் மற்றும் மேலதிகப் பற்றுக்கள் ஆகிய அனைத்துக் கடன்களுக்கும் உயர்த்தப்பட்ட வட்டி வீதங்கள் பொருந்துவனவாகக் காணப்படும். மேலதிகப் பற்றுக்கள் போன்ற கொடுகடன் வசதிகள்/ ஏற்றுமதி உண்டியல்/ கட்டளையொன்றாகக் குறிப்பிட்டு அடையாளங் காணப்பட முடியாதவிடத்து அதிகரித்த வட்டி வீதங்களைப் பிரயோகிக்கும் நோக்கத்துக்காக அத்தகைய கொடுகடன் வசதிகள் உரிய வாடிக்கையாளரின் ஏற்றுமதி உண்டியல்கள்/ கட்டளைகளுக்கிடையில் பகிர்ந்து கொள்ளப்படலாம்.

(iii) உள்நாட்டு வங்கித் தொழில் பிரிவுகளினாலும், வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகளினாலும் ரூபாக்களிலும், வெளிநாட்டு நாணயங்களிலும் வழங்கப்பட்ட ஏற்றுமதிக் கொடுகடன் வசதிகளுக்கு அதிகரிக்கப்பட்ட வட்டி வீதங்கள் பொருந்தும்.

(iv) 2001ஆம் ஆண்டு சனவரி 22க்கு முன்பாக கைமாற்றிக் கொள்ளப்பட்ட ஏற்றுமதி உண்டியல்களுக்கெதிராக வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கு உயர்த்தப்பட்ட வட்டி வீதங்கள் பொருந்தாது. எனினும், அத்தகைய கொடுகடன் வசதிகள், ஏற்றுமதி உண்டியல்/ கட்டளையின் உடன்பட்டுக் கொள்ளப்பட்ட கொடுப்பனவுக் காலப்பகுதிக்குள் ஏற்றுமதிப் பெறுகைகளிலிருந்து மீளப் பெறப்படாவிடின் அவற்றுக்கு உயர்த்தப்பட்ட வட்டி வீதங்கள் பொருந்தும்.

(v) ஏற்றுமதி உண்டியலுக்கெதிராக வழங்கப்படுபவையும், 2001ஆம் ஆண்டு சனவரி 22க்கு முன்பு திறக்கப்பட்ட நாணயக் கடிதத்தினால் ஆதரவளிக்கப்பட்டவையுமான கொடுகடன் வசதிக்களுக்கு வங்கிகள் உயர்த்தப்பட்ட வட்டி வீதங்களிலிருந்து விலக்களிப்பை அனுமதிக்கலாம். எனினும், அத்தகைய ஏற்றுமதிக் கொடுகடன்கள், ஏற்றுமதிப் பெறுகைகளினால் உடன்பட்டுக் கொள்ளப்பட்ட காலப்பகுதிக்குள் மீட்கப்படாவிட்டால் உயர்த்தப்பட்ட வட்டி வீதங்களே இவற்றுக்குப் பொருந்தும்.

4. இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளவாறு விபரங்களைக் கொடுக்கும் மாதிரியானது மாற்றியமைக்கப்பட்டுள்ளது. கடன் வசதிகள் மற்றும் உயர்த்தப்பட்ட வட்டி ஆகிய விபரங்களை வங்கி மேற்பார்வைத் திணைக்களத்துக்கு மாதாந்தம் அறிவிப்பதற்கு தயவு செய்து புதிய மாதிரியைப் பயன்படுத்தவும். குறிப்பாக, கொடுகடன் தீர்ப்பனவுக்கான 90 நாட்கள் கொண்ட சாதாரண காலப்பகுதி அல்லது அதிகரிக்கப்பட்ட 120 நாட்கள் கொண்ட காலப்பகுதி, இணைப்பின் 2ஆவது நிரலில் காட்டப்பட வேண்டும்.

பி. ரி. சிறிசேன

வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்

இணைப்பு

## ...........மாதத்திற்கான வரவேண்டிய ஏற்றுமதி வசதிகளின் மீது விதிக்கப்பட்ட வட்டி

வங்கியின் பெயர் :

(தொகை இலங்கை ரூபாவில்)

| வாடிக்கையாளரின் பெயர் | வழங்கப்பட்ட திகதி | வழங்கப்பட்ட தொகை | வட்டிவீதம் (%) | முதிர்ச்சி அல்லது முடிவுத் திகதி | வரவேண்டிய தொகை | வரவேண்டிய நாட்களின் எண்ணிக்கை | அதிகரிக்கப்பட்ட வட்டிவீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |

திகதி :..............................

.................................................................................

அங்கீகாரம் பெற்ற அலுவலரின் கையொப்பம்

வங்கியின் பெயரும் அடையாள முத்திரையும்

தொழிபாட்டு அறிவுறுத்தல் எண்: 02/04/004/0009/001

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்,
8ஆம் மாடி, ரேணுகா கட்டடம்
41 சனாதிபதி மாவத்தை
கொழும்பு.1
19 மார்ச்சு 2001

வெளிநாட்டுச் செலாவணியில் அங்கீகாரம் பெற்ற
வணிகர்களாக நியமிக்கப்பட்ட உரிமம் பெற்ற அனைத்து
வர்த்தக வங்கிகளுக்கான அறிவுறுத்தல்கள்

அன்புள்ள ஐயா

**வெளிநாட்டுச் செலாவணி முன்னோக்கிய விற்பனைகள் மற்றும் கொள்வனவுகள்**

2001.01.29ஆந் திகதியிடப்பட்ட எமது அறிவுறுத்தல்களுக்கும் , மேலே குறிப்பிடப்பட்டுள்ள விடயம் தொடர்பாக 2001.02.14 ஆந் திகதியிடப்பட்ட எமது தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் உள்ளடக்கப்பட்டுள்ள விளக்கங்களுக்கும் மேலதிகமாக.

29.01.2001ஆம் திகதியிடப்பட்டுள்ள மேலே கூறப்பட்ட அறிவுறுத்தல்களின் விடயம் 3இனது துணை விடயம் (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள 50 சதவீத வைப்பானது வெளிநாட்டுச் செலாவணி விற்பனைக்காக வாடிக்கையாளருடன் மேற்கொள்ளப்பட்ட முன்னோக்கிய ஒப்பந்தங்கள் தொடர்பில் இலங்கை ரூபாக்களிலான ஒப்பந்தத்தின் பெறுமதியில் 25 சதவீதத்துக்கு உடனடியாகக் குறைக்கப்பட்டது.

தங்கள் உண்மையுள்ள

செலாவணிக்கட்டுப்பாட்டாளர்

வங்கி மேற்பார்வை பணிப்பாளர்

தொழிபாட்டு அறிவுறுத்தல் எண்: 02/04/002/0105/001
02/04/002/0151/001

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்.
8ஆம் மாடி, ரேணுகா கட்டடம்
41 சனாதிபதி மாவத்தை
கொழும்பு.1
20 மார்ச்சு 2001

உரிமம் பெற்ற அனைத்து வர்த்தக வங்கிகளுக்கும்

அன்புள்ள ஐயா

## ஆண்டறிக்கையில் மூலதனப் போதுமை பற்றிய அறிக்கையை வெளியிடுதல்

வங்கிகளின் மூலதனப் போதுமை விகிதங்களைக் கணிப்பீடு செய்யும் நோக்கத்துக்காக் துணைக் கம்பனிகளின் ஒருங்கிணைப்பை இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டல்கள் அனுமதிக்கின்றன என்பது பற்றித் தாங்கள் அறிந்திருப்பீர்கள். எனினும் ஒருங்கிணைக்கப்பட்ட வேண்டிய துணைக் கம்பனிகளின் இயல்பு பற்றிக் குறித்துரைக்கப்படவில்லை. இலங்கை மத்திய வங்கியானது, தற்போது மூலதனப் போதுமை நோக்கங்களுக்காக துணைக் கம்பனிகளின் ஒருங்கிணைப்புப் பற்றிய கொள்கையை மீளாய்வு செய்கின்றது.

மூலதனப் போதுமை பற்றிய அறிக்கையை தமது ஆண்டறிக்கைகளில் வெளியிடுவதில் வங்கிகளுக்கிடையே ஒருமைப்பாடு காணப்படவில்லையென்பது அவதானிக்கப்பட்டுள்ளது. சில வங்கிகள் அறிக்கைகளை தனிப்பட்ட அடிப்படையில் வெளியிடும் அதேவேளையில், ஏனையவை ஒருங்கிணைக்கப்பட்ட அடிப்படையில் வெளியிட்டுள்ளன.

வாசிப்பவர்களுக்கு உண்மையான விளக்கத்தைக் கொடுக்கும் நோக்கத்துடன், மூலதனப் போதுமையைக் கணிப்பிடும் அடிப்படை மற்றும் மூலதனப் போதுமை விகிதத்தின் கணிப்பீட்டில் வங்கித் தொழில் அல்லாத மற்றும் நிதியியல் அல்லாத துணைக் கம்பனிகளை உள்ளடக்குதல் ஆகியவற்றை வங்கியின் ஆண்டறிக்கையில் வெளியிடுவதாயிருந்தால், மூலதனப் போதுமை அறிக்கைக்கான அடிக் குறிப்பொன்றாக அவை வெளிப்படுத்தப்படலாம்.

தங்கள் உண்மையுள்ள

பி. ரி. சிறிசேன

வங்கி மேற்பார்வை பதில் பணிப்பாளர்

தொழிபாட்டு அறிவுறுத்தல் எண்: 02/ 05/ 009/ 0100/ 001

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்,
8ஆம் மாடி. ரேணுகா கட்டடம்
41 சனாதிபதி மாவத்தை
கொழும்பு.1
30 மார்ச்சு 2001

உரிமம் பெற்ற அனைத்து வர்த்தக வங்கிகளுக்கும்

## ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களை மீளப் பெறல்

மேலே கூறப்பட்டுள்ள விடயம் தொடர்பாக 2001 சனவரி 22ஆம் நாளிடப்பட்டதும் எண் 01/01/ 002/0034/001 கொண்டதும் மற்றும் 2001 சனவரி 29ஆம் நாளிடப்பட்டதும், 2001 பெப்புருவரி 16ஆம் நாளிடப்பட்டதும் எண் 02/ 05/ 009/ 0100/001 கொண்டதுமாகிய எமது சுற்றறிக்கைகள் தொடர்பானவையாகும்.

உரிமம் பெற்ற சில வர்த்தக வங்கிகள் மேலே கூறப்பட்ட சுற்றறிக்கைகளின் உள்ளடக்கம் தொடர்பான மேலும் சில விளக்கங்களைக் கோரியிருந்தன. அதன்படி, பின்வரும் விளக்கங்களை நாம் வழங்குகின்றோம்.

1. கொடுப்பனவு நியதிகளைக் கணக்கிலெடுக்காது, பார்த்தவுடன் செலுத்தப்பட வேண்டியவை. நாணயக் கடிதங்களினால் ஆதரவளிக்கப்பட்டு பிற்போடப்பட்ட கொடுப்பனவு நியதிகளைக் கொண்டவை அல்லது சேகரிக்க வேண்டிய உண்டியல்கள் அல்லது ஒப்படைப்பு அடிப்படையிலுள்ளவை உட்பட ஏனைய நியதிகளைக் கொண்டவை ஆகிய அனைத்து வகை ஏற்றுமதிக் கட்டளைகளையும் நிதியிடுவதற்கு வழங்கப்பட்ட கொடுகடனுக்கு இச்சுற்றறிக்கைகள் பொருத்தமுடையனவாகும். அத்தகைய அனைத்து ஏற்றுமதிக் கொடுகடன்களும், ஏற்றுமதிப் பெறுகைகளிலிருந்து மட்டுமே மீட்கப்பட வேண்டியிருப்பதுடன் முன்னைய சுற்றறிக்கைகளில் குறிப்பிட்டுக் கூறப்பட்டுள்ள காலப்பகுதிக்கு அப்பால் கொடுகடனை மீளப் பெறுவதில் ஏதாவது காலதாமதம் காணப்படுமாயின் உயர்த்தப்பட்ட வட்டிவீதங்கள் அவற்றுக்குப் பொருத்தமுடையதாதல் வேண்டும்.

2. ஏற்றுமதிக் கொடுகடன் தேவைப்படுத்தப்பட்டவிடத்து, குறிப்பிட்டுக் கூறப்பட்ட கொடுப்பனவு நியதிகளுடன், குறிப்பிட்ட ஏற்றுமதிக் கட்டளையொன்றாகஅடையாளங்காணப்படாத சந்தர்ப்பங்களும் ஏற்படலாம். அத்துடன் சில வாடிக்கையாளர்கள் மூலப் பொருட்களின் இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதி வர்த்தகத்துடன் நேரடித் தொடர்புடைய ஏனைய தேவைகளை நிதியிடுவதற்கான கொடுகடனைப் பெற்றுக் கொள்ளுவதற்காக குறிப்பிட்டுக் கூறப்பட்ட ஏற்றுமதிக் கட்டளைகளுடனான அத்தகைய கொடுகடன்களை அடையாளங் காண்பது கஷ்டமாகக் காணப்பட்டபோதிலும் அதற்கான பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவர். அத்தகைய விடயங்களில், வங்கிகள் அத்தகைய கொடுகடனை ஏற்றுமதிக் கட்டளைகள் அல்லது குறிப்பிட்ட ஏற்றுமதியாளரின் கப்பலேற்றங்களுக்கிடையில் பகிர்ந்தளிக்குமாறு வேண்டப்பட்டதுடன் பகிரப்பட்ட கடன்களை மீளப்பெறுவதில் முன்னைய சுற்றறிக்கைகளில் குறிப்பிட்டுக் கூறப்பட்ட காலப்பகுதிக்கு அப்பால் தாமதம் எதுவும் ஏற்படுமாயின் உயர்த்தப்பட்ட வட்டிவீதங்கள் அவற்றுக்குப் பொருந்துவனவாக அமைய வேண்டும்.

3. சில வாடிக்கையாளர்கள், ஏற்றுமதி வருவாய்கள் கொண்டு வரப்பட்டு வங்கிகளுடனான தமது வெளிநாட்டு நாணயக் கணக்குகளில் வைக்கப்பட்டுள்ளன என்ற அடிப்படையில் தமது ஏற்றுமதிக் கொடுகடனை ரூபா நிதியங்களிலிருந்து செலுத்தும் சில சந்தாப்பங்களில் அறிவிக்கப்பட்டுள்ளன. எனினும், எமது சுற்றறிக்கைகளில் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளவாறு ஏற்றுமதிக் கொடுகடன் மீளப்பெறும் முறையோடு ஒத்ததாக இது காணப்படவில்லை. ஏற்றுமதிப் பெறுகைகளிலிருந்து மட்டுமே ஏற்றுமதிக் கொடுகடனை முற்றாகத் தீர்ப்பனவு செய்வதற்காக போதிய அளவில் வங்கிகளுக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தன.

இச் சுற்றறிக்கைகளின் உள்ளடக்கம் பற்றிய மேலும் விளக்கங்களுக்காக அவ்வாறான வினாக்கள் எதுவுமிருப்பின் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளரை அணுகுமாறு அனைத்து வங்கிகளும் வேண்டப்படுகின்றன.

ஜே. எம். ரி. பீ. ஜயசுந்தர

வங்கி மேற்பார்வை பதில் பணிப்பாளர்

தொழிபாட்டு அறிவுறுத்தல் எண்: 02/ 04/ 004/0009/001

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
8ஆம் மாடி, ரேணுகா கட்டிடம்
41. சனாதிபதி மாவத்தை
கொழும்பு 01
16 யூலை 2001

வெளிநாட்டுச் செலாவணியில் அங்கீகாரம் பெற்ற வணிகர்களான
நியமிக்கப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான
தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்

அன்புள்ள ஐயா,

## வெளிநாட்டுச் செலாவணியின் முன்னோக்கிய விற்பனைகள் மற்றும் கொள்வனவுகள்

29.01.2001ஆம் நாளிடப்பட்டதும் 19.03.2001ஆம் நாளிடப்பட்டதுமான எமது தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் மற்றும், மேலே கூறப்பட்ட விடயம் தொடர்பாக 14.02.2001ஆம் நாளிடப்பட்ட எமது தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் உள்ளடக்கிய விளக்கங்களுக்கு மேலதிகமாக,

வெளிநாட்டுச் செலாவணியின் விற்பனைக்கான முன்னோககிய ஒப்பந்தமொன்றில் ஈடுபடும்போது 25 சதவீதத்துக்குக் குறையாத எல்லையொன்று வாடிக்கையாளரிடமிருந்து பெறப்பட வேண்டுமென்ற தேவைப்பாடானது 16 யூலை 2001 இலிருந்து மீளப் பெறப்பட்டுள்ளது.

எனினும், முன்மதியுடைய காரணங்களுக்காக வங்கிகள் வாடிக்கையாளர் இடர் பற்றிய மதிப்பீட்டின் அடிப்படையில் தமது வாடிக்கையாளர்களிடமிருந்து வெளிநாட்டுச் செலாவணி முன்னோக்கிய விற்பனைகளுக்காக தொடர்ந்தும் வைப்புக்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

முன்னோக்கிய விற்பனைகள் அத்துடன்/அல்லது கொள்வனவுகளுக்கான ஒப்பந்தங்கள் ஆகக்கூடியது 180 நாட்களுக்குத் தொடர்ந்தும் காணப்படுவதுடன், பொருட்கள் மற்றும் பணிகளிலான வர்த்தகத்துக்கான வெளிநாட்டுச் செலாவணிக் கொடுப்பனவுகள் மற்றும் வரவுகள் ஆகிய நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்படும்.

தங்கள் விசுவாசமுள்ள

செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்

தொழிபாட்டு அறிவுறுத்தல் எண்: 02/04/004/0007/001

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்,
8ஆவது மாடி, ரேனுகா கட்டடம்
41, சனாதிபதி மாவத்தை,
கொழும்பு 1

15 ஓகத்து 2001

உரிமம் பெற்ற அனைத்து சிறப்பியல்பு வங்கிகளுக்கும்

அன்புள்ள ஐயா

**பத்திரிகைகளில் நிதியியல் கூற்றுக்களை வெளியிடுவதன் மூலமான பொது வெளிப்படுத்துகை**

இலங்கை மத்திய வங்கியானது பெருமளவிலான தெளிவுத்தன்மை மற்றும் சந்தை விதிமுறைக் கட்டுப்பாடு ஆகியன தொடர்பில் பன்னாட்டு வங்கித் தொழில் நியமங்களுடன் இணைந்து செல்லும் விதத்தில், குறிப்பிட்ட சில வெளிப்பாட்டுத் தேவைப்பாடுகளை அறிமுகம் செய்யத் தீர்மானித்துள்ளது. இவை, இலங்கையில் முழுமையானதும் பயனுடையதுமான வங்கித் தொழில் முறையொன்றை ஊக்குவிக்கும் நோக்கமாக நன்கு அறிவிக்கப்பட்ட தீர்மானங்களை மேற்கொள்ளும் பொருட்டு சந்தையின் இயலுமையை மேம்படுத்துவனவாக அமையும்.

இதன்படி உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களின் கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டவாறு பத்திரிகைகளில் வெளியிடுவதற்காகத் தயாரிக்கப்பட்ட மாதிரியினை இத்துடன் இணைத்துள்ளோம்.

2001ஆம் ஆண்டு யூன் 30ஆம் நாளிலிருந்து தொடங்கும் அரையாண்டுக் கணக்குகளுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரியின்படி ஆண்டு மற்றும் அரையாண்டு நிதியியல் கூற்றுக்கள் பத்திரிகைகளில் வெளியிடப்பட வேண்டுமென உரிமம் பெற்ற அனைத்து சிறப்பியல்வு வங்கிகளும் இத்தால் அறிவிக்கப்படுகின்றன. மார்ச்சு 31இல் நிதியியல் ஆண்டு முடிவடையும் வங்கிகள் 2001 செத்தெம்பர் 30இல் உள்ளவாறான அரையாண்டுக் கணக்குகளுடன் வெளியிடலை ஆரம்பிக்க வேண்டும். பத்திரிகைகளில் நிதியியல் கூற்றுக்களின் வெளியீடானது அரையாண்டு முடிவின் மூன்று மாதங்களுக்கு இடையிலும் நிதியாண்டு முடிவின் ஆறு மாதங்களுக்கு இடையிலும் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

மேலும், இணைக்கப்பட்டுள்ள மாதிரியானது வெளிப்படுத்த வேண்டிய ஆகக் குறைந்த தேவைப்பாடுகளை மட்டுமே குறித்துரைக்கின்றதுடன் வங்கிகளினால் தன்னிச்சையான மேலதிக வெளிப்படுத்தல்களை மத்திய வங்கி வரவேற்கும்.

வெளியீட்டுக்கான மொழி மூலத்தைப் பொறுத்தவரையில் ஆரம்பத்தில் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கிகள் நிதியியல் கூற்றுக்களை ஆங்கிலத் தினசரிகளில் வெளியிடலாம். ஏதேனும் சிறப்பியல்பு வங்கியொன்று சிங்களம் மற்றும் தமிழில் வெளியிடுவதற்கு விரும்பினால் வங்கியின் தேவைப்பாட்டுக்கு பொருத்தமான முறையில் அவ்வாறு செய்யலாம்.

தயவு செய்து இச்சுற்றறிக்கை கிடைத்தமைபற்றி அறிவிக்கவும்.

தங்களின் உண்மையுள்ள

வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்

வங்கியின் பெயர் :.................................

## ஐந்தொகையின் தொகுப்பு

(000 ரூபா)

| நாளில் உள்ளவாறு | வங்கி நடைமுறை .................... | வங்கி முன்னைய .................... | மாற்றம் % | குழு |
|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | |
| காசு மற்றும் குறுங்கால நிதியங்கள் | | | | |
| இலங்கை மத்திய வங்கியுடனான நிலுவை | | | | |
| மத்திய வங்கியுடன் மீள் கழிவுக்கு தகைமைபெற்ற திறைசேரி உண்டியல்களும் ஏனைய பிணையங்களும் | | | | |
| வர்த்தகத்துக்காக வைத்திருக்கப்படும் அரச மற்றும் பிணையங்கள் | | | | |
| முதலீடுகளும் ஏனைய வங்கிகளுக்கும் நிதியியல் நிறுவனங்களுக்குமான கடன்களும் | | | | |
| முதலீட்டுப் பிணைகள் | | | | |
| மீள் விற்பனை உடன்படிக்கைகளின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணைகள் | | | | |
| ஏனைய முதலீடுகள் | | | | |
| மாற்று உண்டியல்கள் ** | | | | |
| கடன்கள் மற்றும் முற்பணங்கள் ** | | | | |
| குத்தகை மீது பெறப்பட வேண்டியவை ** | | | | |
| **கழி:** ஏற்படக்கூடிய கொடுகடன் இழப்புகளுக்காக ஒதுக்கீடு தொங்கல் வட்டி | | | | |
| தேறிய மாற்று உண்டியல்கள், கடன்கள், முற்பணங்கள் மற்றும் கட்டணம் | | | | |
| பெறப்பட வேண்டிய குழு நிலுவைகள் | | | | |
| சொத்து பொறி மற்றும் கருவி | | | | |
| ஏனைய சொத்துக்கள் | | | | |
| **மொத்தச் சொத்துக்கள்** | | | | |
| **பொறுப்புக்கள்** | | | | |
| வைப்புக்கள் | | | | |
| மீள் நிதியிடல் கடன்பாடுகள் | | | | |
| ஏனைய கடன்பாடுகள் | | | | |
| மீள் கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணைகள் | | | | |
| செலுத்தப்படவுள்ள குழு நிலுவைகள் | | | | |
| பிற்போடப்பட்ட வரிவிதிப்பு | | | | |
| ஏனைய பொறுப்புக்கள் | | | | |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | | | |
| **பங்குதாரர்களின் நிதியங்கள்** | | | | |
| பங்கு மூலதனம் / வழங்கப்பட்ட மூலதனம் | | | | |
| நியதிச் சட்ட ஒதுக்கு நிதியம் | | | | |
| ஒதுக்குகள் | | | | |
| சிறுபான்மை நலவுரித்துக்கள் | | | | |
| **பயன்படுத்தப்பட்ட நிதியங்களின் மொத்தம்** | | | | |
| **மொத்தப் பொறுப்புக்கள் மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதியங்கள்** | | | | |
| **கடன்பாடுகளும் தற்செயல் நிகழ்வுகளும்** | | | | |

மேலேயுள்ள வங்கியின் .................... இல் உள்ளவாறான ஐந்தொகையானது, வங்கியின் கணக்காய்வு செய்யப்படாத கணக்குகளிலிருந்து வகுக்கப்பட்டதுடன் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இசைவாகவும் தயாரிக்கப்பட்டுள்ளது.

கையொப்பம் .................................
பொது முகாமையாளர்
முதன்மை நிறைவேற்று அலுவலர்

** காலங்கடந்ததும் பெறப்படவுள்ளதுமான வட்டிக் கணக்குகள் தொடர்பான நிலுவைகளும் இந்தத் தொகையில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

வங்கியின் பெயர் :..............................

## ஐந்தொகையின் தொகுப்பு

(000 ரூபா)

| முடிவடைந்த ஆறு மாதங்களுக்கு | வங்கி | | | குழு |
|---|---|---|---|---|
| | நடைமுறை ........ | முன்னைய ........ | மாற்றம் % | |
| **மொத்த வருமானம்** | | | | |
| வட்டி வருமானம் | | | | |
| வட்டிச் செலவுகள் | | | | |
| **தேறிய வட்டி வருமானம்** | | | | |
| ஏனைய வருமானம் | | | | |
| **தேறிய வருமானம்** | | | | |
| **தொழிற்பாட்டுச் செலவுகள்** | | | | |
| ஆளணிச் செலவுகள் | | | | |
| கொடுகடன் இழப்புகளுக்கான ஏற்பாடுகள் | | | | |
| ஏனைய தொழிற்பாட்டு இழப்புக்கள் | | | | |
| வாணிபம் மற்றும் முதலீட்டு பிணையங்களின் பெறுமான வீழ்ச்சிக்கான ஏற்பாடுகளின் முன்னர் தொழிற்பாட்டு இலாபம் / (நட்டம்) | | | | |
| வாணிபம் மற்றும் முதலீட்டுப் பிணையங்களின் பெறுமான வீழ்ச்சிக்கான ஏற்பாடு | | | | |
| இணை மற்றும் துணைக் கம்பனிகளின் பங்கு வரிக்கு முன்னரான இலாபம்/ (நட்டம்) | | | | |
| **வரிக்கான ஏற்பாடுகளின் முன்னர் இலாபம்/ (நட்டம்)** | | | | |
| வரிக்கான ஏற்பாடு | | | | |
| **வரிக்கான ஏற்பாடுகளின் பின்னர் இலாபம்/ (நட்டம்)** | | | | |
| சிறுபான்மை நலவுரித்து | | | | |
| அதிவிசேட விடயங்கள் (தயவு செய்து குறிப்பிடுக) | | | | |
| **அதிவிசேட விடயங்களின் பின்னர் இலாபம்/ (நட்டம்)** | | | | |
| முன் கொண்டுவரப்பட்ட தடுத்து வைக்கப்பட்ட அல்லது பகிர்ந்தளிக்கப்படாத இலாபங்கள் | | | | |
| **முன் கொண்டு செல்லப்பட்ட தடுத்து வைக்கப்பட்ட இலாபங்கள்** | | | | |

.............. முடிவடைந்த ஆறுமாதங்களுக்கான மேலே குறிப்பிடப்பட்ட இலாபநட்டக் கணக்கு வங்கியின் கணக்காய்வு செய்யப்படாத கணக்குகளிலிருந்து பெறப்பட்டதுடன் இலங்கையின் கணக்கீட்டுத் தரங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளது.

அலுவலர்/

............................................................

பொது முகாமையாளர்/ முதன்மை நிறைவேற்றுநர்
நாட்டு முகாமையாளர்

வங்கியின் பெயர் :................................

## ஐந்தொகையின் தொகுப்பு

(000 ரூபா)

| நாளில் உள்ளவாறு | வங்கி | | | குழு |
|---|---|---|---|---|
| | நடைமுறை ........ | முன்னைய ........ | மாற்றம் % | |
| **சொத்துக்கள்** | | | | |
| காசு மற்றும் குறுங்கால நிதியங்கள் | | | | |
| இலங்கை மத்திய வங்கியுடனான நிலுவை | | | | |
| மத்திய வங்கியுடன் மீள் கழிவுக்கு தகைமைபெற்ற திறைசேரி உண்டியல்களும் ஏனைய பிணையங்களும் | | | | |
| வர்த்தகத்துக்காக வைத்திருக்கப்படும் அரச மற்றும் பிணையங்கள் | | | | |
| முதலீடுகளும் ஏனைய வங்கிகளுக்கும் நிதியியல் நிறுவனங்களுக்குமான கடன்களும் | | | | |
| முதலீட்டுப் பிணைகள் | | | | |
| மீள் விற்பனை உடன்படிக்கைகளின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணைகள் | | | | |
| ஏனைய முதலீடுகள் | | | | |
| மாற்று உண்டியல்கள் ** | | | | |
| கடன்கள் மற்றும் முற்பணங்கள் ** | | | | |
| குத்தகை மீது பெறப்பட வேண்டியவை ** | | | | |
| கழி: ஏற்படக்கூடிய கொடுகடன் இழப்புகளுக்காக ஒதுக்கீடு தொங்கல் வட்டி | | | | |
| தேறிய மாற்று உண்டியல்கள், கடன்கள், முற்பணங்கள் மற்றும் கட்டணம் | | | | |
| பெறப்பட வேண்டிய குழு நிலுவைகள் | | | | |
| சொத்து பொறி மற்றும் கருவி | | | | |
| ஏனைய சொத்துக்கள் | | | | |
| **மொத்தச் சொத்துக்கள்** | | | | |
| **பொறுப்புக்கள்** | | | | |
| வைப்புக்கள் | | | | |
| மீள் நிதியிடல் கடன்பாடுகள் | | | | |
| ஏனைய கடன்பாடுகள் | | | | |
| மீள் கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணைகள் | | | | |
| செலுத்தப்படவுள்ள குழு நிலுவைகள் | | | | |
| பிற்போடப்பட்ட வரிவிதிப்பு | | | | |
| ஏனைய பொறுப்புக்கள் | | | | |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | | | |
| **பங்குதாரர்களின் நிதியங்கள்** | | | | |
| பங்கு மூலதனம் / வழங்கப்பட்ட மூலதனம் | | | | |
| நியதிச் சட்ட ஒதுக்கு நிதியம் | | | | |
| ஒதுக்குகள் | | | | |
| சிறுபான்மை நலவுரித்துக்கள் | | | | |
| **பயன்படுத்தப்பட்ட நிதியங்களின் மொத்தம்** | | | | |
| **மொத்தப் பொறுப்புக்கள் மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதியங்கள்** | | | | |
| **கடன்பாடுகளும் தற்செயல் நிகழ்வுகளும்** | | | | |

மேலேயுள்ள எண் தொகைகள் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளிலிருந்து பெறப்பட்டதுடன் கணக்காய்வு ................ இனால் மேற்கொள்ளப்பட்டது.

கையொப்பம் ................................

பொது முகாமையாளர்

முதன்மை நிறைவேற்று அலுவலர்

** காலங்கடந்ததும் பெறப்படவுள்ளதுமான வட்டிக் கணக்குகள் தொடர்பான நிலுவைகளும் இந்தத் தொகையில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

வங்கியின் பெயர் :...............................

## தொகுக்கப்பட்ட இலாப நட்டக் கணக்கு

(000 ரூபா)

| முடிவடைந்த ஆண்டுக்கான | வங்கி | | | குழு |
|---|---|---|---|---|
| | நடைமுறை ........... | முன்னைய ........... | மாற்றம் % | |
| **அ) வருமானக்கூற்று** | | | | |
| **மொத்த வருமானம்** | | | | |
| வட்டி வருமானம்<br>வட்டிச் செலவுகள் | | | | |
| **தேறிய வட்டி வருமானம்**<br>ஏனைய வருமானம்<br>**தேறிய வருமானம்** | | | | |
| **தொழிற்பாட்டுச் செலவுகள்**<br>ஆளணிச் செலவுகள்<br>கொடுகடன் இழப்புக்களுக்கான ஏற்பாடுகள்<br>ஏனைய தொழிற்பாட்டுச் செலவுகள் | | | | |
| வாணிப மற்றும் முதலீட்டுப் பிணையங்களின் பெறுமான வீழ்ச்சிக்கான ஏற்பாடுகளுக்கு முன்னரான தொழிற்பாட்டு இலாபம் / (நட்டம்) | | | | |
| வாணிப மற்றும் முதலீட்டுப் பிணையங்களின் பெறுமான வீழ்ச்சிக்கான ஏற்பாடுகள் இணை/ துணைக் கம்பனிகளின் பங்கு வரிக்கு முன்னான இலாபம்/ (நட்டம்) | | | | |
| **வரிக்கு முன்னான இலாபம்/ (நட்டம்)**<br>வரி விதிப்பு | | | | |
| **வரிக்குப் பின்னரான இலாபம்/ (நட்டம்)**<br>சிறுபான்மை நலவுரித்துக்கள்<br><br>அதிவிசேட விடயங்கள்(தயவுசெய்து குறிப்பிடுக) | | | | |
| **காலப்பகுதிக்கான தேறிய இலாபம்** | | | | |
| **ஆ) பங்குடைமை மாற்றங்களின் கூற்று (#)**<br><br>**இ) அடையாளம் காணப்பட்ட இலாபங்களினதும் நட்டங்களினதும் கூற்று (##)** | | | | |

(#)( இலங்கை கணக்கீட்டுத்தரம் 3இற்கு இணங்க ஒவ்வொரு பங்குடைமை மூலகத்தினதும் மாற்றங்களைக் குறித்துக்காட்டுகின்றது.

(##) ( இலங்கைக் கணக்கீட்டுத்தரம் 3இற்கு இணங்க அடையாளம் காணப்பட்ட இலாபங்களையும் நட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் பங்குடைமையின் மாற்றங்களைக் குறித்துக்காட்டுகின்றது.

.................இனால் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளிலிருந்து மேலேயுள்ள எண் தொகைகள் பெறப்பட்டுள்ளன.

.................................................

பொது முகாமையாளர்/ முதன்மை நிறைவேற்று அலுவலர்
நாட்டு முகாமையாளர்

தொழிற்பாட்டு அறிவுறுத்தல் எண்: 02/04/004/009/001

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்,
8ஆம் மாடி, ரேணுகா கட்டடம்
41 சனாதிபதி மாவத்தை
கொழும்பு.1
17 ஒகத்து 2001

அங்கீகாரம் பெற்ற வணிகர்களாகவுள்ள
அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்

அன்புள்ள ஐயா

**இறக்குமதி உண்டியல்களின் முற்கொடுப்பனவு**

மேலே குறிப்பிடப்பட்ட விடயம் தொடர்பாக 2001 சனவரி 29ஆம் நாளிடப்பட்ட எமது சுற்றறிக்கையின் மீது உங்களது கவனம் ஈர்க்கப்படுவதோடு அதன் நியதிகளின்படி அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களான உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் இறக்குமதி உண்டியல்களின் மீது முற்கொடுப்பனவுகளை மேற்கொள்ளலாகாது எனவும் இறக்குமதிக் கட்டளையை நிறுவிய வேளையில் வழங்குநருடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்துக்கு இணங்க அத்தகைய உண்டியல்கள் முதிர்ச்சி நாளில் செலுத்தப்பட வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தேவைப்பாடு 2001ஆம் ஆண்டு ஒகத்து 20 திங்கட்கிழமையிலிருந்து புறக்கீடு செய்யப்பட்டுள்ளது என அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களான வர்த்தக வங்கிகளுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது. எனினும், முன்மதியுடைய காரணங்களுக்காக வர்த்தக வங்கியொன்று/ அங்கீகரிக்கப்பட்ட வணிகர் ஒருவர் எமக்கு அறிவிக்காமலேயே இறக்குமதி உண்டியல் ஒன்றினை நிராகரிப்பதற்கான தன்மதிப் பிரேயாகத்தினை பயன்படுத்தலாம்.

தங்கள் உண்மையுள்ள

செலாவணிக்கட்டுப்பாட்டாளர்

வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்

தொழிபாட்டு அறிவுறுத்தல் எண்: 02/ 05/ 009/ 0100/ 001

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்

5 செத்தெம்பர் 2001

உரிமம்பெற்ற அனைத்து வர்த்தக வங்கிகளுக்கும்,

**ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களை மீளப்பெறுதல்**

மேலே கூறப்பட்டுள்ள விடயம் தொடர்பில் 2001 சனவரி 22ஆம் நாளிடப்பட்டதும், 2001 பெப்புருவரி 16ஆம் நாளிடப்பட்டதும் மற்றும் 2001 மாச்சு 30ஆம் நாளிடப்பட்டதுமான எமது சுற்றறிக்கைகள் தொடர்பானவையாகும்.

2001 ஒகத்து 23இல் நடைபெற்ற வங்கி முகாமையாளர்களின் கூட்டத்தில் உடன்பட்டுக் கொள்ளப்பட்டவாறு, யூலை மாதத்தில் விமானப் பறப்புக்களிலேற்பட்ட இடையீட்டின் காரணமாக ஆகக்கூடியது 7 நாட்களுக்கு தமது ஆவணங்களை அனுப்புதல் தாமதங்களை அனுபவித்த ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்பட்ட கொடுகடன் காலப்பகுதியை நீடிப்பதற்கு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் தமது தீர்மானத்தையும் தன்மதியினையும் பயன்படுத்தலாம்.

பி. ரி. சிறிசேன

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்

8ஆவது மா, ரேனுகா கட்டம்

41 சனாதிபதி மாவத்தை,

கொழும்பு.1

10 செத்தெம்பர் 2001

பீஎஸ்/ 62/ 97

உரிமம்பெற்ற அனைத்து வர்த்தக வங்கிகளுக்கும்

அன்புள்ள ஐயா,

**பத்திரிகைகளில் வங்கிக் கணக்குகளை வெளியிடுவதன் மூலமான பொது வெளிப்படுத்துகை**

மேலே கூறப்பட்ட விடயம் தொடர்பில் 1999.01.29ஆம் நாளிடப்பட்டதும் எண்.பீ.எஸ்/ 62/ 97 கொண்டதுமான எமது சுற்றறிக்கை தங்கள் கவனத்துக்குக் கொண்டு வரப்படுகிறது.

வங்கிகளின் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள், அவை எத்தகைய கணக்காய்வுத் தகைமைகளுக்கும் உட்படாமல் அத்தகைய கணக்காய்வுத் தகைமைகள் காணப்படுகின்றவிடத்தும் கணக்காய்வு செய்யப்பட்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டு பத்திரிகைகளில் வெளியிடப்படுமிடத்து பொதுமக்களை அது தவறாக வழிநடத்துவதாக அமையும். ஆகவே வங்கிகள், கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளை பத்திரிகைகளில் வெளியிடும்போது, எத்தகைய கணக்காய்வுத் தகைமைகள் பற்றியும் சுருக்கமானதொரு விளக்கத்தை உள்ளடக்க வேண்டும்.

மேலும், வங்கிகள் தமது கணக்காய்வு செய்யப்பட்ட ஆண்டுக் கணக்காய்வுகளை அவற்றின் நிதியாண்டின் இறுதியானது ஆறு மாதங்களுக்குள்ளும், அவற்றின் கணக்காய்வு செய்யப்படாத அரையாண்டுக் கணக்குகளை அரையாண்டின் இறுதியினது மூன்று மாதங்களுக்குள்ளும் பத்திரிகைகளில் வெளியிட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றன என்பதை நான் தங்களுக்கு அறிவிக்க விரும்புகிறேன்.

தங்கள் விசுவாசமுள்ள

வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்

இலங்கை மத்திய வங்கி

3 திசெம்பர் 2001

உரிமம்பெற்ற அனைத்து வர்த்தக வங்கிகளுக்கும்

உரிமம்பெற்ற அனைத்து சிறப்பியல்பு வங்கிகளுக்கும்

## வாடிக்கையாளரைப் பூரணமாகப் புரிந்துகொள்ளல் 'உங்கள் வாடிக்கையாளரைப் புரிந்துகொள்ளல்' நடைமுறைகள்

2001ஆம் ஆண்டு ஒத்தோபர் மற்றும் நவெம்பர் மாதங்களில் நடைபெற்ற வங்கி முகாமையாளர்களின் கூட்டத்தில் மேலே கூறப்பட்ட விடயம் சம்பந்தமாக இடம்பெற்ற கலந்துரையாடல் தங்களுடைய கவனத்துக்குக் கொண்டு வரப்படுகிறது. தயவுசெய்து இத்துடன் இணைக்கப்பட்டுள்ள வங்கிகளால் கைக்கொள்ளப்பட வேண்டிய ஆகக்குறைந்த விதிகளைத் தயாரித்துள்ள வாடிக்கையாளரைப் பூரணமாகப் புரிந்து கொள்ளல் -'உங்கள் வாடிக்கையாளரைப் புரிந்து கொள்ளல்' நடைமுறைகள் தொடர்பான வழிகாட்டலைப் பெற்றுக்கொள்ளவும்.

இவ் வழிகாட்டல்கள் உடனடியாக நடைமுறைக்கு வரும்.

தங்கள் விசுவாசமுள்ள

வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்

தொழிபாட்டு அறிவுறுத்தல் எண்: 02/04/004/0012/001

இலங்கை மத்திய வங்கி

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்

3 திசெம்பர் 2001.

உரிமம்பெற்ற அனைத்து வர்த்தக வங்கிகள் மற்றும்

உரிமம்பெற்ற சிறப்பியல்பு வங்கிகளுக்கும்

## வாடிக்கையாளரைப் பூரணமாகப் புரிந்து கொள்ளல் – உங்கள் வாடிக்கையாளரைப் புரிந்து கொள்ளல் நடைமுறைகள் மீதான வழிகாட்டல்கள்

பயங்கரவாதம் மற்றும் அழிவு நடவடிக்கைகளுடன் தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சட்டரீதியற்று உழைக்கப்பட்ட பணத்தைச் சட்டரீதியானதாக மாற்றுதல் ஆகியவற்றுக்காக நிதியியல் முறையினை பரிசீலனையற்ற முறையில் பயன்படுத்துவதைத் தடைசெய்வதற்காக வாடிக்கையாளராக வரக்கூடிய ஒருவருக்காக கணக்கொன்றை ஆரம்பிக்கும் நேரத்தில் வாடிக்கையாளரை அடையாளங்காணும் போது அல்லது வாடிக்கையாளராக வரக்கூடிய ஒருவருடன் வர்த்தக உறவு முறையொன்றை நிறுவிக் கொள்வதற்கு முன்பு அல்லது அதன்பின்பு கணக்கொன்று தொழிற்படுத்தப்படும் விதத்தில் முக்கியமான மாற்றமொன்று காணப்படுமிடத்து அனைத்து வங்கிகளும் இவ் வழிகாட்டல்களைப் பின்பற்ற வேண்டுமென விதந்துரைக்கப்பட்டுள்ளது. சட்ட ரீதியற்ற நடவடிக்கைகளுக்கு வங்கித்தொழில் முறையினைப் பயன்படுத்துவதால் ஏற்படும் இடர் நேர்வினைக் குறைப்பதற்காக இவ் வழிகாட்டல்கள் ஏற்றுக்கொள்ளுதலானது ஏற்படக்கூடிய மோசடிகளுக்கெதிராக பாதுகாப்பு வழங்குவதோடு சந்தேகத்துக்கிடமான கொடுக்கல் வாங்கல்களை உரிய நேரத்தில் அறிந்து கொள்ளுதலை இயலச்செய்து வங்கியை அதன் நன்மதிப்புப் பற்றியதும் சட்டரீதியானதும் நிதியியல் ரீதியானதுமான இடர்களிலிருந்து காப்பாற்றக் கூடியதாயுமிருக்கும்.

1. அனைத்து வங்கிகளும் வாடிக்கையாளரை ஏற்றுக்கொள்ளுதல், வாடிக்கையாளரை அடையாளங் காணுதல்/ இடர் முகாமை மற்றும் அதிஉயர் இடர் நேர்வுடனான கணக்குகளைக் கண்காணித்தல் ஆகியவை தொடர்பான அவற்றின் கொள்கைகளை ஆவணப்படுத்துமாறு தூண்டப்பட்டுள்ளன.

2. 'அவர்களின் வாடிக்கையாளர்களை அறிவதற்காக' வங்கிகள்

   (i) வாடிக்கையாளரின் அடையாளம் தொடர்பான போதிய விபரங்களைப் பெறுதல்

   (ii) வாடிக்கையாளராக வருபவர் யார் அவனா/ அவளா என்பது பற்றித் திருப்தியடைதல். வாடிக்கையாளரொருவர் மற்றொருவர் சார்பில் செயற்படுபவராயின் இரு திறத்தவர்களினதும் அடையாளம் பற்றி போதிய ஆதாரங்கள் பெறப்படுதல்.

   (iii) வாடிக்கையாளரொருவர் பற்றி சாதாரண அலுவல் நேரத்தில் பெறப்பட்ட தகவலானது, சட்டரீதியற்று உழைக்கப்பட்ட பணத்தைச் சட்டரீதியானதாக மாற்றுதல்/பயங்கரவாதத்துக்கான நிதிவழங்கல் ஆகியவற்றைத் தடை செய்வதற்காக பயனுறுதி வாய்ந்த முறையில் பயன்படுத்தல்.

   போன்றவற்றை மேற்கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றன.

3. வாடிக்கையாளரை அடையாளங் காணுதல்

   3.1 தனிப்பட்ட கணக்குகள்

   தனிப்பட்ட வாடிக்கையாளராக வரும் அனைவரிடமிருந்தும் பின்வரும் தகவல்கள் பெறப்பட வேண்டும்.

   - வாடிக்கையாளரின் பெயரானது, அவரின் படத்துடனான தேசிய அடையாள அட்டை, கடவுச்சீட்டு அல்லது ஓட்டுநர் உரிமப் பத்திரம் போன்ற அலுவல்சார் அதிகார

சபையொன்றினால் வழங்கப்பட்ட மூல ஆவணமொன்றிலிருந்து பெறப்படுவது விரும்பத்தக்கது. அத்தகைய ஆவணமொன்றின் தொடர்பு எண் வங்கியினால் பதிவு செய்யப்பட வேண்டும்.

- கடிதத் தொடர்பு மூலம் உறுதிபடுத்தப்பட வேண்டிய வாடிக்கையாளரின் நிரந்தர அஞ்சல் விலாசம் மற்றும் அதற்கு ஆதாரமான சான்று.
- அறிமுகப்படுத்துவரின் நம்பிக்கைத்தன்மை மற்றும் நேர்மை மற்றும் அவரது சொந்த அடையாளம் ஆகியன வங்கியைத் திருப்திப்படுத்தும் வகையில் நிறுவப்பட வேண்டும்.
- அறிமுகப்படுத்துபவரின் விலாசம் சுதந்திரமான முறையில் ஆய்வு செய்யப்பட்டு பணிப்புடன் கோவையிடப்பட வேண்டும்.

3.2 கூட்டு வாடிக்கையாளர்கள்

பின்வரும் ஆவணங்கள் பெறப்பட வேண்டும்.

- வாடிக்கையாளரின் சட்டரீதியான நிலையை நிறுவுவதற்கு கூட்டிணைவு சான்றிதழ் அகவிதி மற்றும் புறவிதி அல்லது பங்குடமை உடன்படிக்கை இவற்றில் பொருத்தமானது எதுவோ அது பெறப்பட வேண்டும்.
- பணிப்பாளர் சபையின் தீர்மானம்
- அங்கீகாரம் பெற்ற மாதிரிக் கையெழுத்துக்களுடன் உரியமுறையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் பத்திரம்
- ஒவ்வொரு பணிப்பாளரினதும் கணக்குகளைத் தொழிற்படுத்த அங்கீகாரமளிக்கப்பட்டவர்களினதும் ஆளடையாளம் நிறுவப்பட வேண்டும்.
- இலங்கைக்கு வெளியே பதிவு செய்யப்பட்ட கம்பனிகள், வர்த்தக அலுவல்கள் அல்லது பங்குடமைகள் ஆகியவற்றிடமிருந்து அந்தந்த நாட்டின் இலகுவான ஒழுங்குமுறைகளைக் கவனத்திலெடுத்து அதேமாதிரியான ஆவணங்கள் பெறப்பட வேண்டும்.

3.3 தொழிற்படுத்தப்படும் கணக்குகளைப் பொறுத்தவரையில்

- அற்றோனி தத்துவம்
- கூட்டுக் கணக்கு வைத்திருப்போர்
- பங்குடமைகள்
- நம்பிக்கைக் கணக்குகள்/ பொறுப்பாண்மைக் கணக்குகள்

கணக்கில் கையெழுத்திடும் ஒவ்வொருவரதும் ஆளடையாளம் நிறுவப்பட வேண்டும்.

3.4 பின்வரும் சூழ்நிலைகளில் மிகவும் கடுமையான முறையில் வாடிக்கையாளரின் ஆளடையாளக் கொள்கைகள் நிறுவப்பட வேண்டும்.

- அஞ்சல் மூலம் கணக்குகள் திறக்கப்படும் போது அல்லது வாடிக்கையாளருடன் நேருக்குநேர் தொடர்புகள் எதுவும் இல்லாத வேறு ஏதாவது சூழ்நிலைகளில்
- வங்கியில் கணக்கு வைத்திருக்காதவர்களினால் ஒருமுறை மட்டும் மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்களைப் பொறுத்தவரையில், குறிப்பாக, அத்தகைய கொடுக்கல் வாங்கல்கள் பெருந்தொகைப் பணத்தை உள்ளடக்கியிருக்குமிடத்து அல்லது வழமைக்கு மாறாக பெருந்தொகையான வெளிநாட்டுப் பணவரவுகளைக் கொண்டிருக்குமிடத்து வாடிக்கையாளர் தனது ஆளடையாளத்துக்கான ஆவணச் சான்றினைச் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுவதுடன் அத்தகைய ஆவணங்களின் பிரதிகளும் வங்கியில் வைத்திருக்கப்பட வேண்டும்.

- கணக்கு வைத்திருக்காதவர்களுக்கு பாதுகாப்பில் வைக்கும் வசதிகள் கிடைக்கச் செய்யப்படும்போது, மேலே கூறப்பட்டவாறு கணக்கு வைத்திருக்காதவர்களுக்கான ஆளடையாள நடைமுறை பின்பற்றப்பட வேண்டும்.
- மின்னியல் கொடுப்பனவு முறைகளைப் பயன்படுத்தி கணக்குகளுக்கிடையில் நிதியங்களை அனுப்புவதற்கான வேண்டுகோள்களை ஏற்றுக்கொள்ளுகையில், அத்தகைய கொடுக்கல் வாங்கல்கள் மிகப்பெரிய அளவில் காணப்படுமிடத்து வங்கியானது அனுப்புபவரின் ஆளடையாளத்தை நிறுவ வேண்டியிருப்பதுடன் பெற்றுக் கொள்பவரின் ஆளடையாளத்தையும் உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

4. வங்கியானது, வாடிக்கையாளரின் உண்மையான ஆளடையாளத்தை தனது திருப்திக்கேற்ற வகையில் நிறுவமுடியாத சந்தர்ப்பங்களில், அத்தகைய வாடிக்கையாளருடன் எந்தவித வர்த்தக உறவு முறையையும் தொடங்கக்கூடாது.

5. ஏனைய விதந்துரைப்புக்கள்

5.1 அனைத்து வகைக் கணக்குகள் தொடர்பிலும் திரும்பிய கடிதங்கள் மற்றும் கூற்றுக்கள் ஆகியன பற்றி கவனஞ் செலுத்தப்பட வேண்டும்.

5.2 கணக்கொன்று திறக்கப்பட்டதன் பின்பு கொடுக்கல் வாங்கல்களின் தன்மைகள் கணக்கு ஆரம்பிக்கப்பட்ட போது அறியப்பட்டதிலும் பார்க்க குற்றவியல் நடவடிக்கைக்கான சந்தேகமொன்றை ஏற்படுத்தக்கூடிய அளவுக்கு குறிப்பிடத்தக்களவில் மாற்றமடைந்திருப்பின் நிதியியல் நிலைமை மற்றும் நடவடிக்கைகளின் இயல்பு ஆகியவற்றிலேற்பட்ட மாற்றங்கள் குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு அவை பதிவு செய்யப்படவும் வேண்டும்.

5.3 பதிவுகளை வைத்திருத்தல்: மேலே குறிப்பிடப்பட்டவாறு ஆளடையாளத்துக்கான அனைத்துச் சான்றுகளும், கணக்கொன்று மூடப்பட்டதன் பின்பு கூட ஆகக் குறைந்தது ஐந்து ஆண்டுகாலப் பகுதிக்கு பேணப்பட வேண்டும்.

5.4 கணக்கு திறக்கப்படும் வேலைகளைக் கையாளும் அலுவலரொருவர் புதிய உறவு முறையானது வங்கியின் நற்பெயருக்கு குறிப்பிடத்தக்களவிலான இடரையேற்படுத்துமென நம்புவதற்கான காரணங்களைக் கொண்டிருக்குமிடத்து கணக்கைத் திறப்பதற்கு முன்னர் அத்தகைய வேண்டுகோளை உயர் அதிகாரங்கொண்ட அலுவலரொருவருக்கு அனுப்பலாம்.

5.5 உள்நாட்டுக் கட்டுப்பாட்டாளர்/கணக்காய்வாளர், வாடிக்கையாளரை ஏற்றுக்கொள்ளல் மற்றும் ஆளடையாளப்படுத்தல் ஆகியன தொடர்பிலான வங்கியின் கொள்கைகளுடன் இணங்கிச் செல்வதை உறுதிப்படுத்துமாறு வேண்டப்படலாம்.

பி.ரி.சிறிசேன

வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்

## 1995இன் 33ஆம் இலக்க வங்கித் தொழில் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988இன் 30ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டம்

*1995ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988இன் 30ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தின் பிரிவு 76(ஒ) (1) இன் கீழ் மூலதனப் போதுமை விகிதத்தினைப் பேணுவது தொடர்பாக இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் 1997.11.21ஆம் நாளிடப்பட்ட பணிப்புரை இத்தால் திருத்தப்பட்டு 2002ஆம் ஆண்டு சனவரி 01ஆம் நாளிலிருந்து செயற்படும்.*

ஏ.எஸ்.ஜயவர்த்தன

ஆளுநர்

கொழும்பு

27 திசெம்பர் 2001

**பணிப்புரை**

1. 1999ஆம் ஆண்டு திசெம்பர் 27ஆம் நாளிடப்பட்ட பணிப்புரையினாலும் 2000ஆம் ஆண்டு நவெம்பர் 29ஆம் நாளிடப்பட்ட பணிப்புரையினாலும் திருத்தப்பட்டவாறான மூலதனப் போதுமை விகிதத்தைப் பேணுவது தொடர்பான பணிப்புரையின் பந்தி 1இனை நீக்கி அதனிடத்து பின்வருவதை பந்தி 1என பதலீடு செய்வதன் மூலம்.

   " வங்கித்தொழில் சட்டத்தில் வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ளவாறான பங்குடைமை மூலதனத்தினைக் கொண்டுள்ள உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கியொன்று 2002ஆம் ஆண்டு சனவரி 1ஆம் நாளிலிருந்து செயற்படும் வகையில் 2002 திசெம்பர் 31 வரை 4 1/ 2 சதவீதத்துக்குக் குறையாத கரு மூலதனத்துடனான இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக அனைத்து வேளைகளிலும் 9 சதவீத ஆகக் குறைந்த மூலதனப் போதுமை விகிதத்தைப் பேணுதல் வேண்டும். அதன் பின்னர் அனைத்து வேளைகளிலும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையின் அறிவுறுத்தல்களின்படி கணிக்கப்பட்ட 5 சதவீதத்துக்குக் குறையாத கரு மூலதனத்துடனான இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக 10 சதவீத மூலதனப் போதுமை விகிதத்தைப் பேண வேண்டும் எனவும் உரிமம் பெறப்பட்ட சிறப்பியல்பு வங்கியொன்று தேவைப்படுத்தப்படுகின்றது.

2. 1997 நவெம்பர் 21ஆம் நாளிடப்பட்ட பணிப்புரையின் அட்டவணை 1இல் காணப்படும் ஆகக் குறைந்த மூலதனப் போதுமை விகிதம் 8 சதவீதம் எனவும் கரு மூலதன விகிதம் 4 சதவீதம் எனவும் குறிப்பிடப்பட்ட அனைத்து விடயங்களும்

   (அ) 2001ஆம் ஆண்டு சனவரி 1ஆம் நாள் தொடங்கி 2002ஆம் ஆண்டு திசெம்பர் 31ஆம் நாள் முடிவடையும் காலப்பகுதிக்கு முறையே 9 சதவீதம் எனவும் 4 1/2 சதவீதம் எனவும் வாசிக்கப்படும்படி திருத்தப்படல் வேண்டும்.

   (ஆ) 2003ஆம் ஆண்டு சனவரி 1ஆம் நாள் தொடக்கம் பின்னைய காலப்பகுதிக்கு முறையே 10 சதவீதம் மற்றும் 5 சதவீதம் என வாசிக்கப்படக் கூடியதாக திருத்தப்படல் வேண்டும்.

3. மூலதனப் போதுமை விகிதத்தினை பேணுவது தொடர்பாக உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கிகளுக்கு 2000ஆம் ஆண்டு நவெம்பர் 29ஆம் நாள் வழங்கப்பட்ட பணிப்புரை இத்தால் செயலறச் செய்யப்படுகின்றது.

## 1995இன் 33ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988இன் 30ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டம்

*கொழும்பு* — *ஏ.எஸ்.ஜயவர்த்தன*

*27 திசெம்பர் 2001* — *ஆளுநர்*

## அறிவித்தல்

*1995ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988இன் 30ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தின் பிரிவு 19(2) மற்றும் 19 (7) இன் கீழ் மூலதனப் போதுமை விகிதத்தினைப் பேணுவது தொடர்பாக இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் 1997.08.22ஆம் நாளிடப்பட்ட பணிப்புரை 2002ஆம் ஆண்டு சனவரி 01ஆம் நாளிலிருந்து இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.*

1. *மூலதனப் போதுமை விகிதத்தினை பேணுவது தொடர்பாக 1997 ஒகத்து 22ஆம் நாளிடப்பட்ட அறிவித்தலின் பந்தி 2இனை நீக்கி பின்வருவதை பந்தி 2 என பதிலீடு செய்வதன் மூலம்*

   *உரிமம் வழங்கப்பட்ட ஒவ்வொரு வர்த்தக வங்கியும் 2002ஆம் ஆண்டு சனவரி 1ஆம் நாளிலிருந்து செயற்படும் வகையில் 1995ஆம் ஆண்டின் 33ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 19 (7) இன் நியதிகளின் படி 2001ஆம் ஆண்டு சனவரி 1ஆம் நாள் தொடங்கி 2002 திசெம்பர் 31ஆம் நாள் முடிவடையும் காலப்பகுதிக்கு அனைத்து வேளைகளிலும் 4 1/2 சதவீதத்துக்குக் குறையாத கரு மூலதனத்துடனான இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக ஆகக் குறைந்த 9 சதவீத மூலதனப் போதுமை விகிதத்தைப் பேண வேண்டும் எனவும் அதன் பின்னர் அட்டவணை 1இல் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் படி கணிக்கப்பட்ட 5 சதவீதத்துக்குக் குறையாத கரு மூலதனத்துடன் அதனது இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக அனைத்து வேளைகளிலும் 10 சதவீத ஆகக்குறைந்த மூலதனப் போதுமை விகிதத்தினைப் பேணவேண்டும் எனவும் மத்திய வங்கியின் நாணயச்சபை தீர்மானித்துள்ளது.*

2. *1997 ஒகத்து 22ஆம் நாளிடப்பட்ட அறிவித்தலின் அட்டவணை 1இல் காணப்படும் ஆகக் குறைந்த மூலதனப் போதுமை விகிதம் 8 சதவீதம் எனவும் கரு மூலதன விகிதம் 4 சதவீதம் எனவும் குறிப்பிடப்பட்ட அனைத்து விடயங்களும்*

   *(அ) 2001ஆம் ஆண்டு சனவரி 1ஆம் நாளில் தொடங்கி 2002ஆம் ஆண்டு திசெம்பர் 31ஆம் திகதியில் முடிவடையும் காலப்பகுதிக்கு முறையே 9 சதவீதம் எனவும் 4 1/2 சதவீதம் எனவும் வாசிக்கப்படும் விதத்தில் திருத்தப்படல் வேண்டும்.*

   *(ஆ) 2003ஆம் ஆண்டு சனவரி 1ஆம் நாள் தொடங்கும் பின்னைய காலப்பகுதிக்கு முறையே 10 சதவீதம் எனவும் 5 சதவீதம் எனவும் வாசிக்கப்படும் விதத்தில் திருத்தப்படல் வேண்டும்.*

3. *மூலதனப் போதுமை விகிதத்தைப் பேணுவது தொடர்பாக 2000ஆம் ஆண்டு நவெம்பர் 29ஆம் நாள் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட அறிவித்தல் இத்தால் செயலறச் செய்யப்படுகின்றது.*

தொடர்பு இலக்கம் 06/07/01/2001

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி
அ.பெ. 883
கொழும்பு 1
23 சனவரி 2001

அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களுக்கான
தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்

**பொருட்களின் கப்பலேற்றல் மற்றும் உள்நாட்டு வான்வழிக் கட்டணம்/ உள்நாட்டு ஏற்று முறிகள்/ பொருட்களைக் கப்பலேற்றுபவர்களின் பற்றுச்சீட்டுக்களின் வழங்கல்**

மேலே குறிப்பிடப்பட்ட விடயம் தொடர்பாக 12.07.1991 நாளிடப்பட்டதும் எண் ஈசி48/ 91 (ஜீ) கொண்டதும் 4 மாச்சு 1997 நாளிடப்பட்டதும் எண் ஈ.சீ. 04/ 97 (ஜீ) கொண்டதுமான எனது தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு மேலதிகமாக, தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் கொடுக்கப்பட்டுள்ள சரக்கு அனுப்புவோரின் பட்டியலில் இலங்கை மத்திய வங்கியுடன் பதிவு செய்யப்பட்டுள்ள பின்வரும் சரக்கு அனுப்புவோரை உள்ளடக்கும்படியும் ஏற்றுமதிச் சரக்குகள் தொடர்பில் கொடுக்கல் வாங்கல்களுக்காக அவர்களினால் வழங்கப்பட்ட சரக்கு அனுப்புவோர் பற்றுச் சீட்டுக்களை ஏற்றுக் கொள்ளும்படியும் அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் இத்தால் வேண்டப்படுகின்றனர்.

| | சரக்கு அனுப்புவோரின் பெயர் | பதிவு எண் |
|---|---|---|
| 1. | லக்சிரி இன்டர்நசனல் பிரைட் போவடர்ஸ் (பிரைவேட்) லிமிற்றட் | 06/ 07/ 009/ 0094 |
| 2. | டவர் குறூப் ஏசியா லங்கா (பிரைவேட்) லிமிற்றட் | 06/ 07/ 009/ 0095 |
| 3. | எப்.எஸ்.எல். லங்கா (பிரைவேட்) லிமிற்றட் | 06/ 07/ 009/ 0096 |

உங்கள் உண்மையுள்ள
எச். ஏ. ஜீ. எட்டியாரச்சி
செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

தொடர்பு இலக்கம் 06/04/057/0001/003

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்,
ஈகுயிட்டி டு கட்டடம்
61 சனாதிபதி மாவத்தை
கொழும்பு 1
12 மாச்சு 2001

அனைத்து அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களுக்கான
தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்

அன்புள்ள ஐயா,

**சலுகை/ தீர்வையற்ற அடிப்படையில் வாகனங்களின் இறக்குமதி**

அத்தகைய இறக்குமதிகளுக்காக ஏற்கனவே நாணயக் கடிதங்கள் திறக்கப்பட்டுள்ள விடயங்கள் தவிர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், உள்ளூராட்சிச் சபைகளின் தலைவர்கள் அரச ஊழியர்கள் ஆகியோருக்கும் ஏனையோருக்கும் சலுகை அல்லது தீர்வையற்ற அடிப்படையில் வாகனங்களை இறக்குமதி செய்வதற்காக வழங்கப்பட்ட வசதிகள் உடனடியாக செயற்படும் வகையில் இடை நிறுத்தப்பட்டுள்ளது என 2001ஆம் ஆண்டு மாச்சு 8ஆம் நாள் வரவு செலவுத்திட்ட உரையில் அறிவிக்கப்பட்டது. எனவே வாகனங்களின் இறக்குமதிக்காக நாணயக் கடிதங்களை திறக்கும் வேலையில் இதனைக் கவனத்திற் கொள்ளும்படி அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.

வரவு செலவுத்திட்ட உரையின்போது இந்த இடைநிறுத்தம் அறிவிக்கப்பட்ட பின்னர் அதாவது பி.ப 5.30 மணியளவில் முன்னைய நாளொன்றினையும் நேரத்தினையும் குறிப்பிட்டு சில வங்கிகள் நாணயக் கடிதங்களைத் திறந்துள்ளன என எனக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. வரவு செலவுத் திட்ட உரையில் அறிவிக்கப்பட்ட இடை நிறுத்தத்தை மடக்குவதற்காக மேற் கொள்ளப்பட்ட முறையற்றதும் சூதுமுறையானதுமான செயலாக இது காணப்படுவதனால் இதிலிருந்து உருவாகும் அரசாங்க வருமானத்தின் ஏதேனும் இழப்புக்கு அங்கீகாரம் பெற்ற வணிகர்கள் பொறுப்புடையவர்கள் ஆவதோடு செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின்கீழ் தண்டனைகளுக்கும் பொறுப்புடையவராவர்.

இதனை உங்களது அலுவலர்களின் கவனத்துக்குக் கொண்டுவரவும்.

உங்கள் உண்மையுள்ள
எச். ஏ. ஜீ. எட்டியாரச்சி
செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

பிரதிகள்
1) திறைசேரிச் செயலாளர்
2) சுங்கத்திணைக்களப் பணிப்பாளர் நாயகம்
3) உண்ணாட்டரசிறை ஆணையாளர் நாயகம்

தொடர்பு இலக்கம் 06/02/02/2001

செலாவணி கட்டுப்பாட்டுத் திணைக்களம்,
ஈகுயிட்டி கட்டடம்
61 சனாதிப மாவத்தை
கொழும்பு 1
13 மார்ச் 2001

அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களுக்கான
தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்

அன்புள்ள ஐயா,

**<u>மீள் காப்புறுதி தொடர்பான பண அனுப்பல்களுக்கு அதிகாரம் வழங்குதல்</u>**

என் ஈசி/ 06/ 94 கொண்டதும் 18.3.94 நாளிடப்பட்டதுமான எனது தொழிற்பாட்டு அறிவுறுத்தலின்மீதும் அதனோடு இணைக்கப்பட்டிருந்த மற்றும் மூலதன கொடுக்கல் வாங்கல்கள் மீதான வரைவிலக்கணம் சம்பந்தமான விளக்கக் குறிப்பின் மீதும் அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

மேலே குறிப்பிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் நியதிகளின்படி நடைமுறைக் கொடுக்கல் வாங்கல்கள் என வரைவிலக்கணப்படுத்தப்பட்ட கப்பல் காப்புறுதி, மீள் காப்புறுதி மற்றும் ஏனைய காப்புறுதி போன்ற காப்புறுதிப்பணிகளுக்கான வெளிநாட்டுச் செலாவணியின் விடுவிப்பு காப்புறுதி தொடர்பான உள்ளூர் ஒழுங்குவிதிகளுக்கு உட்பட்டு உங்களின் ஊடாக அனுமதிக்கப்படுகின்றது.

2000ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க காப்புறுதிக் கைத்தொழில் ஒழுங்குவிதிகள் சட்டத்தின் நியதிகளுக்கிணங்க 2001.03.01ஆம் நாளிலிருந்து செயற்படும் வகையில் இலங்கையின் காப்புறுதிக் கைத்தொழிலின் ஒழுங்கு முறைப்படுத்தும் அதிகார சபையாகிய இலங்கைக் காப்புறுதிச்சபை பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பிப்பதன் மூலம் வெளிநாட்டு காப்புறுதியாளர்களுக்கு அவர்களது மீள் காப்புறுதிக் கட்டணத்தைச் செலுத்துவதற்கு இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள காப்புறுதியாளர்களினால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களுக்கு நீங்கள் அனுமதி வழங்கலாம் என இப்பொழுது அறிவித்துள்ளது.

1. மீள் காப்புறுதியாளர்களுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்று அல்லது மீள் காப்புறுதியாளரினால் வழங்கப்பட்ட பற்று/ வரவு குறிப்புகள்
2. வெளிநாட்டிலுள்ள மீள் காப்புறுதியாளர்களுக்கு செலுத்தப்படவுள்ளது என கோரப்படும் மீள் காப்புறுதிக் கட்டணமானது தேவையான இடர் நேர்வுகளை உள்ளடக்கும் நோக்கத்துக்காக மீள் காப்புறுதியாளருடன் செய்து கொள்ளப்பட்ட செல்லுபடியாகும் ஒப்பந்தம்/ பத்திரம் என்பனவற்றுக்கு இசைவானதாகும் என உள்ளூர் காப்புறுதியாளரின் பணிப்பாளர் ஒருவர் அல்லது உதவிப் பொது முகாமையாளர் தரத்திற்குக் குறையாத அலுவலர் ஒருவரினால் ஆன உறுதிப்படுத்தல் ஒன்று.

உங்கள் உண்மையுள்ள
எச். ஏ. ஜீ. எட்டியாராச்சி
செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

பிரதிகள்
ஆளுநர்
துணை ஆளுநர் (டபிள்யூ)
துணை ஆளுநர் (டீ)
வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளர்
பொருளாதார ஆராய்ச்சிப் பணிப்பாளர்

தொடர்பு இலக்கம்: 06/04/04/2001

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்.
இலங்கை மத்திய வங்கி
அ.பெ. 883
61 சனாதிபதி மாவத்தை
கொழும்பு 1
20 ஏப்பிறல் 2001

அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களுக்கான
தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்

அன்புள்ள ஐயா.

## வதிவற்ற ரூபாக் கணக்குகளுக்காக வட்டிக் கொடுப்பனவுகள்

கடந்த காலங்களில், உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் வட்டி செலுத்தப்பட்ட இயலாத ரூபாக் கணக்குகளை தொழிற்படுத்துவதற்கு வதிவற்ற சில வகையினருக்கு அனுமதி வழங்கப்படவில்லை. குறிப்பாக கேள்வியின் போது பணம் செலுத்தப்பட வேண்டிய நடைமுறைக் கணக்குகள் தவிர்ந்த பின்வரும் வகையிலான கணக்குகளுக்கு வட்டி செலுத்தப்படலாம் என இப்பொழுது உங்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.

(1) **29.12.1993 நாளிடப்பட்டதும் எண் ஈசீ/ 79/ 93 (ட) கொண்டதுமான எமது தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் நியதிகளின்படி (பிரதி இணைக்கப்பட்டுள்ளது) அங்கீகாரம் வழங்கப்பட்ட பின்வருவன சார்பான வதிவற்றோர் ரூபாக் கணக்குகள்.**

அ) இலங்கைக்கு வெளியே வதியும் வெளிநாட்டவர்கள்

ஆ) இலங்கைக்கு வெளியே பதிவு செய்யப்பட்ட கம்பனிகள்

இ) இலங்கைக்கு வெளியே வதியும் இலங்கையர்கள்

(2) **15.09.64 நாளிடப்பட்டதும் எண் ஈட/ 35/ 64 (ஈ) கொண்டதுமான எமது தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் நியதிகளின்படி அங்கீகாரமளிக்கப்பட்ட பின்வருவன சார்பாக ரூபாவில் உள்ள வெளிநாட்டு, உள்நாட்டு மற்றும் தனிப்பட்ட கணக்குகள்**

அ) இலங்கையில் உள்ள தூதரங்கள்

ஆ) இலங்கையில் உள்ள ஏனைய வெளிநாட்டு அமைப்புக்கள் (ஐக்கிய நாடுகள் சபை மற்றும் ஏனைய முகவராண்மைகளின் சிறப்பு முகவராண்மைகள்)

இ) இலங்கையில் உள்ள தூதரக மற்றும் ஏனைய வெளிநாட்டு அமைப்புக்களின் இலங்கையர் அல்லாத அலுவலர்கள்

உங்கள் உண்மையுள்ள
எச். ஏ. ஜீ. எட்டியாரச்சி
செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

பிரதிகள்
ஆளுநர்
துணை ஆளுநர் (என்)
துணை ஆளுநர் (டபிள்யூ)
உதவி ஆளுநர் (ட)
பொருளாதார ஆராய்ச்சிப் பணிப்பாளர்
வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளர்
முதன்மைக் கணக்காளர்
மதியுரையாளர்/ வங்கித்தொழில் நிதியியல் பணிகள்

தொடர்பு இலக்கம்: 06/07/03/2001

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்.
இலங்கை மத்திய வங்கி
அ.பெ. 883
61 சனாதிபதி மாவத்தை
கொழும்பு 1
04 மே 2001

அனைத்து அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களுக்கான
தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்

அன்புள்ள ஐயா,

**பொருட்களின் கப்பலேற்றல் மற்றும் உள்நாட்டு வான் வழிப்பட்டியல்/ உள்நாட்டு ஏற்று முறிகள்/ கப்பலேற்றுவோரின் சரக்குப் பற்றுச் சீட்டுக்கள் என்பனவற்றின் வழங்கல்**

மேலே குறிப்பிடப்பட்ட விடயம் தொடர்பாக எண் ஈசி/ 49/ 94 (ஜீ) கொண்ட 1991.07.12 நாளிடப்பட்டதும் எண் ஈசீ/ 04/ 97 ஜீ கொண்ட 1997 மாச்சு 04ஆம் நாளிடப்பட்டதுமான எனது தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு மேலதிகமாக தற்போது இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்து கொண்டுள்ள பின்வரும் கப்பலேற்றுவோரை தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் தரப்பட்டுள்ள கப்பலேற்றுவோர் பட்டியலில் உள்ளடக்குமாறும் ஏற்றுமதிச் சரக்குகள் தொடர்பான கொடுக்கல் வாங்கல்களுக்காக அவர்களால் வழங்கப்படும் உள்நாட்டு வான்வழிப் பட்டியல்கள்/ உள்நாட்டு ஏற்றுமுறிகள், கப்பலேற்றுவோரின் சரக்குப் பற்றுச்சீட்டுக்கள் ஆகியவற்றை ஏற்றுக்கொள்ளுமாறும் அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

| கப்பலேற்றுவோரின் பெயர் | பதிவு எண் |
|---|---|
| 1. சீலின்க் சிப்பிங் (பிரைவேட்) லிமிற்றட் | 06/ 07/ 009/ 0097 |
| 2. மாஸ் லொஜிஸ்டிக்ஸ் அன்ட சிப்பிங் (பிரைவேட்) லிமிற்றட் | 06/ 07/ 009/ 0098 |
| 3. ஏடீஈ லங்கா (பிரைவேட்) லிமிற்றட் | 06/ 07/ 009/ 0099 |
| 4. ட்ரான்ஸ் குலோபல் பிரேட்டர்ஸ் கொழும்பு (பிரைவேட்) லிமிற்றட் | 06/ 07/ 009/ 0100 |
| 5. யூனியன் கார்கோ (பிரைவேட்) லிமிற்றட் | 06/ 07/ 009/ 0101 |

உங்கள் உண்மையுள்ள
எச். ஏ. ஜீ. எட்டியாரச்சி
செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

தொடர்பு இலக்கம்: 06/04/05/2001

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி
அ.பெ. 883
61 சனாதிபதி மாவத்தை
கொழும்பு 1
28 மே 2001

அனைத்து அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களுக்கான
தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்

அன்புள்ள ஐயா,

## வதிவற்ற இலங்கை முதலீட்டுக்கான ரூபாக் கணக்குகள் திட்டம் (ரன்சி)

இலங்கைக்கு வெளியே வதியும் இலங்கைப் பிரசைகள் அவர்களது வெளிநாட்டுச் செலாவணிச் சம்பாத்தியத்தினை இலங்கையில் முதலீடு செய்வதற்கான பண அனுப்பலை ஊக்குவிப்பதற்கான கௌரவ நிதி திட்டமிடல் அமைச்சரின் வரவு செலவுத்திட்ட முன்மொழிவினை நடைமுறைப்படுத்துவதற்காக மேலே குறிப்பிடப்பட்ட திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

**2. ரன்சி திட்டத்திற்கு தகைமை பெறுவதற்கான அடிப்படைகள்**

இத்திட்டத்தின் நியதிகளின்படி இலங்கைப் பிரசைகளின் பின்வரும் வகையினர் தொடர்பாக வதிவற்ற இலங்கை முதலீடு (ரன்சி) என அழைப்படும் விசேட ரூபாக் கணக்குகள் திட்டத்தை ஆரம்பித்து தொழிற்படுத்துவதற்கு அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களுக்கு அனுமதி வழங்கப்படுகின்றது.

(i) இலங்கைக்கு வெளியே தமது நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட இலங்கைப்பிரசைகள்

(ii) தொழில் ஒன்றை மேற்கொள்வதற்கு அல்லது வாணிபம் ஒன்றை அல்லது தொழிற்துறையொன்றினை நிறுவுவதற்காக இலங்கையிலிருந்து வெளிச்சென்று வெளிநாட்டில் தொடர்ந்து வதியும் இலங்கைப் பிரசைகள்

**3. கணக்குகளை ஆரம்பித்தல்**

கணக்கினை ஆரம்பிப்பதற்கு நோக்கம் கொண்டுள்ள ஆளுக்கு வரவு வைப்பதற்காக அங்கீகரிக்கப்பட்ட வணிகர் ஒருவராக நியமிக்கப்பட்டுள்ள உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றின் ஊடாகப் பெறப்பட்ட வெளிநாட்டுச் செலாவணிப் பெறுதிகளினால் மட்டுமே ரன்சி கணக்கு ஆரம்பிக்கப்படல் வேண்டும். அத்தகைய கணக்குகள் அத்தகைய வங்கியின் உள்நாட்டுப் பிரிவில் ஆரம்பிக்கப்பட வேண்டியதுடன் இலங்கை ரூபாவில் பேணப்படல் வேண்டும்.

**4. ரன்சி கணக்குக்கான வரவுகள்**

(i) கணக்கு வைத்திருப்பவரினால் வங்கிகளின் ஊடாக மேற் கொள்ளப்பட்ட உள்நோக்கிய பண அனுப்பல்களின் பெறுதிகள்

(ii) அந்தக் கணக்கில் உள்ள நிதியங்களிலிருந்து பெறப்பட்ட வட்டி

(iii) கணக்கில் உள்ள நிதியங்களினால் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட வருவாய்

(iv) கணக்கிலிருந்து நிதியத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளின் விற்பனை/ தீர்த்துக்கட்டல்

என்பனவற்றிலிருந்தான பெறுதிகள் (வைப்புக்களின் வைப்பாளர் சான்றிதழ்களின் பெறுதிகள் நீங்கலாக)

**5. ரன்சி கணக்குக்கான பற்றுக்கள்**

(i) பங்குகள், அரச பிணையங்கள், முறிகள் மற்றும் கூறு நம்பிக்கைகளின் கூறுகள் மற்றும் ஏனைய நிதியியல் சொத்துக்கள் மற்றும் காணி, கட்டடங்களை உள்ளடக்கிய உண்மைச் சொத்துக்கள் என்பனவற்றில் முதலீடுகளை மேற் கொள்ளுவதற்காக தேவைப்படும் மூலதன நிதியங்களுக்காக

(ii) கணக்கில் உள்ள நிதியங்களின் வெளிநோக்கிய பண அனுப்பல்களுக்காக

(iii) வேறு ஏதேனும் உள்நாட்டு பகிர்ந்தளிப்புக்கள்

6. இத்திட்டத்தின் கீழ் பந்தி 4 மற்றும் 5இல் குறிப்பிடப்பட்ட வரவுகள் பற்றுக்கள் என்பனவற்றுக்காக செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் நியதிகளின்படி இத்தால் பொது அனுமதி வழங்கப்படுகின்றது.

7. கணக்கில் உள்ள நிதியங்களிலிருந்தான முதலீடுகளுக்கான கொடுப்பனவுகள் அத்தகைய கொடுப்பனவுகளைப் பெறவுள்ள ஆள் அல்லது ஆயம் அல்லது ஆட்களின் சார்பாக கணக்கில் உள்ள நிதியத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட வங்கி வரைவுகளின் மூலமாக மேற்கொள்ளப்படல் வேண்டும். அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் கணக்கில் உள்ள நிதியங்களிலிருந்தான அத்தகைய கொடுப்பனவுகளின் பதிவேடு ஒன்றினையும் பேணல் வேண்டும்.

8. கூட்டுக் கணக்கினை வைத்திருப்பவர்கள் மேலே விடயம் (2) இல் குறிப்பிடப்பட்ட வகையினரின் கீழ் குறிப்பிடப்பட்ட வதிவற்றோராகக் காணப்படாவிடில் ரன்சி கணக்குகளை கூட்டுக் கணக்காக பேண இயலாது.

**9. அறிக்கையிடல்**

ரன்சி கணக்குகளுக்கான வரவுகளை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் சருவதேச நிதிப்பிரிவுக்கு அனுப்பப்படும் கொள்வனவு அட்டவணையில் அறிவிக்குமாறும் அத்தகைய கணக்குகளின் பற்றுக்கள் வரவுகள் தொடர்பாக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரியின்படி ஒவ்வொரு ஆண்டும் யூலை 15ஆம் நாள் அல்லது அதற்கு முன்பதாக சனவரி 15ஆம் நாள் அல்லது அதற்கு முன்பதாக செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் பிரிவுக்கு அரையாண்டுக் கூற்றுக்களை சமர்ப்பிக்குமாறும் அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் தேவைப்படுத்தப்பட்டுள்ளனர்.

உங்கள் உண்மையுள்ள
எச். ஏ. ஜீ. எட்டியாரச்சி
செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

பிரதிகள் ஆளுநர்
துணை ஆளுநர் (என்)
துணை ஆளுநர் (டபிள்யூ)
உதவி ஆளுநர் (டீ)
பொருளாதார் ஆராய்ச்சிப் பணிப்பாளர்
வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளர்
முதன்மைக் கணக்காளர்
ஆலோசகர் வங்கித் தொழில் மற்றும் நிதியியல் பணிகள்

## முடிவடைந்த அரையாண்டுக்கான ரன்சி கூற்றுக்கள்

அங்கீகரிக்கப்பட்ட வணிகரின் பெயர் :

கிளை :

கிளையின் குறியீடு :

| (1) கணக்கு வைத்திருப்பவரின் பெயர் | (2) கணக்கு இலக்கம் (நடைமுறை, சேமிப்பு, அல்லது வைப்பு என்பதைக் குறிப்பிடவும் | (3) ஆரம்ப நிலுவை (ஆறு மாத கால தொடக்கத்தில்) (ரூபா) | ஆறுமாத காலப்பகுதியில் | | | | | | இறுதி நிலுவை (ரூ) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | வரவுகள் | | | பற்றுக்கள் | | | |
| | | | உள் நோக்கிய பண அனுப்பல்கள் | வட்டியையும் உள்ளடக்கி முதலீடுகளிலிருந்தான வருவாய் | முதலீடுகளின் விற்பனை தீர்த்துக் கட்டல் பெறுதிகள் | முதலீடு | ஏனைய உள்நாட்டு பகிர்ந்தளிப்புக்கள் | வெளி நோக்கிய பண அனுப்பல்கள் | |
| | | | | | | | | | |
| முழு மொத்தம் | | | | | | | | | |

இந்தக் கூற்றில்தரப்பட்டுள்ள தகவல் உண்மையானதும் சரியானதும் என உறுதிப்படுத்துகின்றேறன்.

திகதி

அங்கீகரிக்கப்பட்ட வணிகரின்

கையொப்பமும் முத்திரையும்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

1186/ 18ஆம் இலக்கம் – 2001ஆம் ஆண்டு மே மாதம் 30ஆந் திகதி புதன்கிழமை

## பகுதி 1 : தொகுதி (1) – பொது

## இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

## செலாவணிக் கட்டுப்பாட்டு அறிவித்தல்

### செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம்

*செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவுகள் 5, 21 மற்றும் 22 என்பனவற்றின் நியதிகளில் தேவைப்படுத்தப்பட்ட அனுமதி.*

(1) கீழே பந்தி (4) இற்கு உட்பட்டு சட்டத்தின் பிரிவு 3 மற்றும் பிரிவு 48உடன் வாசிக்கப்படும் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவுகள் 5, 21 மற்றும் 22 என்பனவற்றினால் உரித்தாக்கப்பட்ட அதிகாரங்களின் பிரயோகத்தின் மூலம் செலாவணிக் கட்டுப்பாட்டாளர் பின்வருவனவற்றிற்கு இத்தால் பொது அனுமதி வழங்குகின்றார்.

(i) இலங்கையில் தங்கத்தினைக் கொள்வனவு செய்தல்

(ii) இலங்கையில் வதியும் எவரேனும் ஆள் ஒருவர் இலங்கையில் தங்கத்தினை விற்பனை செய்தல்

(iii) கீழே பந்தி (2) மற்றும் (3.இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஏதேனும் ஆள் ஒருவரினால் இலங்கைக்குள் தங்கத்தின் இறக்குமதியும் இலங்கையிலிருந்து தங்கத்தின் ஏற்றுமதியும்.

(2) பந்தி (1) (iii) இன் கீழ் தங்கத்தினை இறக்குமதி செய்யும் ஒவ்வொரு இறக்குமதியாளரும் இலங்கைச் சுங்கத்திலிருந்து தங்கத்தினை வெளிக் கொண்டு செல்லுமுன்னரும் பந்தி (iii) இன் கீழ் தங்கத்தினை ஏற்றுமதி செய்யும் ஒவ்வொரு ஏற்றமதியாளரும் இலங்கையிலிருந்து தங்கத்தினை ஏற்றுமதி செய்யும்போது அல்லது அதற்கு முன்பாக சுங்கப்பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்படக்கூடிய அத்தகைய படிவம் ஒன்றில் தங்கத்தின் அளவு மற்றும் பெறுமதி தங்கம் இறக்குமதி செய்யப்படுவதற்கு அல்லது ஏற்றுமதி செய்யப்படுவதற்கான நோக்கம் என்பனவற்றை சுங்கப் பணிப்பாளர் நாயகத்துக்கு வெளிப்படுத்த வேண்டும்.

(3) இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் பொருட்களின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி என்பனவற்றிற்காக அவற்றில் குறித்துரைக்கப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கும் பந்தி (1) (iii) இன் கீழ் தங்கத்தினை ஒவ்வொரு இறக்குமதி/ ஏற்றுமதியாளரும் இசைவாக நடந்து கொள்ள வேண்டும்.

(4) செலாவணிக் கட்டுப்பாட்டாளரால் காலத்துக்குக் காலம் விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றினால் மட்டுமே சரக்குக் கணக்கு அடிப்படையில் இலங்கைக்குள் தங்கத்தினை இறக்குமதி செய்யலாம்.

(5) 1994 மே 26ஆந் திகதிய 820/5ஆம் இலக்க, 1998 செத்தெம்பர் 30ஆந் திகதிய 1047/12ஆம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தகமானியில் (அதிவிசேட) வெளியிடப்பட்ட அறிவித்தல்கள் இத்தால் கைமீட்புச் செய்யப்படுகின்றன.

எச். ஏ. ஜீ. எட்டியாராச்சி

செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

2001 மே 30

தொடர்பு இலக்கம்: 06/05/06/2001

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்.
இலங்கை மத்திய வங்கி
அ.பெ. 883
61 சனாதிபதி மாவத்தை
கொழும்பு 1
30 யூலை 2001

அனைத்து அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களுக்கான
தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்

அன்புள்ள ஐயா.

## பண்டகசாலை களஞ்சிய வர்த்தகம்

எண் ஈசி/ 26/ 93 (எச்) கொண்டதும் 1993 பெப்புருவரி 25ஆம் நாளிடப்பட்டதுமான எனது தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின்மீது அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் அனைவரினதும் கவனம் ஈர்க்கப்படுவதோடு (பிரதி இணைக்கப்பட்டுள்ளது) பின்வரும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு பண்டகசாலை களஞ்சிய வர்த்தகத்தின் கீழ் மீள் ஏற்றுமதிக்காக கராம்பின் இறக்குமதி மீது விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடு இப்பொழுது உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக வாணிபம் மற்றும் கப்பற்படுத்தல் அபிவிருத்தி மற்றும் முஸ்லிம் அலுவல்கள் அமைச்சினால் அகற்றப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றனர்.

(1) பொது முன்னுரிமை கொடை வழங்கும் நாடுகள், பாங்கொக் ஒப்பந்த நாடுகள், வர்த்தக முன்னுரிமை உலகளாவிய முறை, சார்க் வர்த்தக முன்னுரிமை ஒப்பந்த நாடுகள் இந்தியாவுடனான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் போன்ற இலங்கை முன்னுரிமை ஒப்பந்தங்களைக் கொண்டுள்ள உறுப்பு நாடுகளுக்கு மீள் ஏற்றுமதிக்காக கராம்பு இறக்குமதி செய்யப்படலாகாது. இலங்கையிலிருந்தான கராம்பு ஏற்றுமதிக்கு முன்னுரிமைத் தீர்வைகளை வழங்கும் நாடுகளின் பட்டியல் ஒன்று கீழே தரப்பட்டுள்ளது.

| முன்னுரிமை ஒப்பந்தம் | நாடு |
|---|---|
| பொது முன்னுரிமை முறை (ஜீஎஸ்பி) | அவுத்திரேலியா, பல்கேரியா, கனடா, செக்கோஸ்சுலோவாக்கியா, ஐரோப்பிய ஒன்றியம் (அவுத்திரியா, பெல்ஜியம், டென்மார்க், கிரீசு, சேர்மனி, பின்லாந்து, பிரான்சு, அயர்லாந்து, இத்தாலி, லக்சம்பர்க், நெதர்லாந்து, ஐக்கிய இராச்சியம், இசுப்பெயின், போர்த்துக்கல் மற்றும் சுவீடன்) ஹங்கேரி, யப்பான், போலந்து, ரஷ்ய சமஷ்டி |
| பாங்கொக் ஒப்பந்தம் | இந்தியா |
| வர்த்தக முன்னுரிமை உலகளாவியமுறை | கியூபா, ரோமானியா |
| சார்க் முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தம்(சப்தா) | பங்காளதேசம், இந்தியா, நேபாளம், பாக்கித்தான் |
| இந்தியாவுடனான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் | இந்தியா |

(2) பண்டகசாலை களஞ்சிய வர்த்தகத்தின் கீழ் மீள் ஏற்றுமதிக்காக கராம்பினை இறக்குமதி செய்யும்போது ஏற்கனவேயுள்ள நோய்த்தடுப்பு ஒழுங்குவிதிகள் பின்பற்றப்படல் வேண்டும்.

(3) பண்டகசாலை களஞ்சிய வர்த்தகத்தின் கீழ் ஏற்றுமதிக்காக இறக்குமதி செய்யப்பட்ட கராம்பானது கராம்பு இறக்குமதி செய்யப்பட்ட நாட்டிலிருந்தானதாகக் கருதப்படுவதோடு அவை இலங்கையின் உற்பத்திப் பொருட்களாக கருதப்படமாட்டாது.

உங்கள் உண்மையுள்ள

செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

பிரதிகள் ஆளுநர்
துணை ஆளுநர் (என்)
துணை ஆளுநர் (டபிள்யு)
உதவி ஆளுநர் (சி)
பொருளாதார ஆராய்ச்சிப் பணிப்பாளர்
வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளர்
முதன்மைக் கணக்காளர்

தொடர்பு இலக்கம்: ஈசீ/ 26/ 93/ (எச்)

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி
அ.பெ. 883
கொழும்பு 1
25.02.1993

அனைத்து அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களுக்கான
தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்

அன்புள்ள ஐயா,

## பண்டகசாலை களஞ்சிய வர்த்தகம்

பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு நாணயக் கடிதங்களை நிறுவாமலேயே கொடுப்பனவுக்கு எதிராக ஆவணங்கள் மற்றும் ஏற்றுக்கொள்ளலுக்கு எதிராக ஆவணங்கள் ஆகிய நியதிகளில் பண்டகசாலை களஞ்சிய வர்த்தகத்துக்காக பொருட்களின் இறக்குமதிக்கான விண்ணப்பங்களுக்கு தாம் ஒப்புதல் வழங்கலாம் என அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகின்றனர்.

1.1 மூன்றாவது நாடொன்றுக்கு அவை ஏற்றுமதி செய்யப்படும்வரை இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் சுங்கப் பிணைய களஞ்சிய சாலையில் களஞ்சியப்படுத்தப்படல் வேண்டும்.

1.2 மூன்றாவது நாடொன்றுக்கு ஏற்றுமதி செய்யப்படும்வரை இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் மீள் பொதியிடல்/ சுட்டுத்துண்டு ஒட்டுதல்/ மற்றும் இலகு செயல்முறை என்பன சுங்கப்பிணைய களஞ்சிய சாலையில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.3 வர்த்தகரின் நாட்டினுள் பொருட்கள் கொண்டுவரப்படாமலேயே இரண்டாவது நாடொன்றிலிருந்து மூன்றாவது நாடொன்றுக்கு பொருட்களின் நேரடியான ஏற்றுமதி

1.4 பிணைய களஞ்சிய சாலையொன்றுக்கு சரக்குகள் கொண்டு செல்லப்படாமலேயே துறைமுகத்தினுள்ளேயே ஒரு கப்பலிலிருந்து/ விமானத்திலிருந்து இன்னொன்றுக்கு மாற்றல் செய்தல்

2. பண்டகசாலை களஞ்சிய வர்த்தகத்தின் கீழ் மீள் ஏற்றுமதிக்காக பின்வரும் பொருட்களின் இறக்குமதி கடுமையாகத் தடைப்படுத்தப்பட்டுள்ளது.

அ) பேப்ரிக் துணி

ஆ) ஆடைகள்

இ) கராம்பு

ஈ) போதைப் பொருட்கள்

உ) படைக் கலன்களும் ரவைகளும்

3. நாணயக் கடிதங்கள் நிறுவாமலேயே கொடுப்பனவுக்கு எதிராக ஆவணங்கள் மற்றும் ஏற்றுக்கொள்ளலுக்கு எதிராக ஆவணங்கள் ஆகிய நியதிகளில் பண்டகசாலை களஞ்சிய வர்த்தக கொடுக்கல் வாங்கல்கள் அனுமதிக்கப்படலாம். எனினும் பண்டகசாலை களஞ்சிய வர்த்தக கொடுக்கல் வாங்கல்களின் கீழ் மீள் ஏற்றுமதிகள் நாணயக்கடிதம் அல்லது கொடுப்பனவின்மீது ஆவணங்கள் அல்லது முற்பணக் கொடுப்பனவு நியதிகளில் மேற்கொள்ளப்படல் வேண்டும். ஏற்றுக்கொள்ளலுக்கு எதிராக ஆவணங்கள் என்ற நியதிகளில் மீள் ஏற்றுமதி அனுமதிக்கப்படலாகாது.

3(அ) மீள் ஏற்றுமதிகள் தொடர்பாக கொள்வனவாளரிடமிருந்து பெறப்பட்ட அனைத்துக் கொடுப்பனவுகளும் மாற்றத்தக்க நாணயங்களில் (குறித்துரைக்கப்பட்ட நாணயங்கள்) மட்டுமே இருத்தல் வேண்டும்.

4. இறக்குமதிகளுக்கான கொடுப்பனவின் பண அனுப்பலானது கொள்வனவாளருக்கு அனுப்பப்பட்ட பொருட்களுக்கு நாணயக்கடிதம் ஒன்றின்மீது அல்லது கொடுப்பனவுக்கு எதிராக ஆவணங்கள் ஆகிய நியதிகளில் பெறப்படவுள்ள நேரிணையான கொடுப்பனவினைவிட குறைவானதொரு தொகையாக இருத்தல் வேண்டும் அவ்வாறு செய்யுமிடத்து கூட்டிய பெறுமதிச் செலவு மற்றும் வங்கிக் கட்டணங்கள் வர்த்தக இலாபம் ஆகியவற்றை உள்ளடக்கிய ஏனைய உள்நாட்டுக் கட்டணங்களையும் உள்ளக்கக்கூடிய விளிம்பு ஒன்று காணப்படும்.

5. பொருட்களின் ஒவ்வொரு தொகுதியும் இலங்கையிலிருந்தான ஏற்றுமதிகளுக்கான பொதுவான நடவடிக்கை முறையின் கீழ் படிவம் ஈசீ/ ஈஎக்ஸ்பி - 1 இன் மீது அனுமதிக்கப்படல் வேண்டும் ஆனால் படிவம் ஈசீ/ ஈஎக்ஸ்பி -1 இல் அனுமதிப்பத்திர இலக்கம் மற்றும் பொருட்கள் எத்தகைய கொடுப்பனவு நியதிகளில் இறக்குமதி செய்யப்பட்டன என்பன குறிப்பிடப்படல் வேண்டும்.

6. ஏற்றுமதிக்கு முன்பதாக பொருட் தொகுதியொன்று சுங்கத்திலிருந்து அகற்றப்படாமல் ஏற்றுமதியானது கப்பலிலிருந்தோ அல்லது களஞ்சியத்திலிருந்தோ மேற்கொள்ளப்பட்டால் சம்பந்தப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுப் படிவமான ஈஎன்சி அல்லது ஈ3 என்சீ படிவத்தில் ஈசி/ ஈஎக்ஸ்பி - 1 படிவத்தின் தேவையான விபரங்கள் குறிப்பிடப்படல் வேண்டும்.

7. பின்வருவன சமர்ப்பிக்கப்படுமானால் மாற்றுக் கப்பலேற்றல் சரக்குத் தொகுதி (தொடக்கத்தில் வேறு ஒரு நாட்டுக்கு அனுப்பப்பட வேண்டியிருந்த ஆனால் பின்னர் மூன்றாவது நாடொன்றுக்கு கொழும்பின் ஊடாக வழிப்படுத்தப்பட்டவை இத் திணைக்களத்துக்கு அறிவிக்கப்படாமலேயே சுங்கத்தினால் அனுமதிக்கப்படல் வேண்டும்.

அ) மாற்றுக்கப்பலேற்றலின்போது உள்ளூரில் ஏற்பட்ட செலவுகளை உள்ளடக்குவதற்கு வழங்குநரிடமிருந்தான உள்நோக்கிய பண அனுப்பல் ஒன்றுக்கான பற்றுச்சீட்டினை வங்கியாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட உறுதிப்படுத்தலுடன் சுங்கத்துக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

ஆ) ஏற்றுமுறியில் கப்பலேற்றுபவராக இலங்கை ஏற்றுமதியாளரின் பெயர் குறிப்பிடல் வேண்டும்.

8. பண்டகசாலை களஞ்சிய வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களுக்காக ஏற்றுமதியாளர் ஒருவர் தனியான கணக்கு ஒன்றினை பேண வேண்டிய தேவையில்லை. எனினும் பண்டகசாலை களஞ்சிய வர்த்தக கொடுக்கல் வாங்கல்களை இனம் காணுவதற்கு ஏதுவாகும் வகையில் உங்களால் பதிவுகள் பேணப்பட வேண்டியதோடு வங்கியானது அத்தகைய அனைத்து கொடுக்கல் வாங்கல்களையும் சம்பந்தப்பட்ட படிவத்தில் (மாதிரி இணைக்கப்பட்டுள்ளது) காலாண்டு அடிப்படையில் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தில் உள்ள ஏற்றுமதி கண்காணிப்புப் பிரிவுக்கு அறிவித்தல் வேண்டும்.

9. எண் ஈசீ/ 30/ 80/ (எச்) கொண்ட 1980.08.01 நாளிடப்பட்டதும் எண் ஈசீ/ 03/ 92/ (எச்) கொண்ட 1992.01.08 நாளிடப்பட்டதுமான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இத்தால் புறக்கீடு செய்யப்படுகின்றன.

உங்கள் உண்மையுள்ள

எம். ஆர். பர்னாந்து

செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

தொடர்பு இலக்கம் 06/04/07/2001

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி
அ.பெ. 883
கொழும்பு 1
01 ஓகத்து 2001

வெளிநாட்டு நாணய அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களுக்கான
தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்

அன்புள்ள ஐயா,

**வதிவற்ற இலங்கையர் முதலீட்டுக்கான ரூபா கணக்குகள் திட்டம் (ரன்சி)**

மேலே குறிப்பிட்ட விடயம் சம்பந்தமாக எண் 06/04/05/2001 கொண்டதும் 2001 மே 28 நாளிடப்பட்டதுமான எனது தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் பந்தி 4 தொடர்பானது.

வெளிநாட்டில் வதியும் இலங்கைப் பி... சயானவர் ஒரே ஆளாக இருக்கும் பட்சத்தில் வெளிநாட்டிலிருந்து பெறப்பட்ட உள்நோக்கிய பண அனுப்பல்கள... பெறுதிகள் மூலமாக ரன்சி கணக்கு ஆரம்பிக்கப்பட்டதும் அவரினால் பேணப்படும் ரன்சி கணக்கு மற்றும் வதிவற்றோர் வெளிநாட்டு நாணய கணக்கு ஆகியவற்றுக்கு இடையில் கட்டுப்பாடற்ற நிதிய மாற்றல் அனுமதிக்கப்படும்.

அத்தகைய கணக்கு வைத்திருப்பவர் இலங்கையில் வதிவுடையவராக மாறும் பட்சத்தில் அல்லது அவரின் இலங்கைப் பிரசா உரிமை முடிவடையும் பட்சத்தில் அவர்/அவள் அவரது/அவளது வதிவற்ற வெளிநாட்டு நாணய கணக்கிலிருந்து அவரது/அவளது ரன்சி கணக்கிற்கு அல்லது அவரது/அவளது ரன்சி கணக்கிலிருந்து அவரது/அவளது வதிவற்ற வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு நிதியங்களை மாற்றுவதற்கு தகைமையற்றவராவர்.

உங்கள் உண்மையுள்ள
எச். ஏ. ஜீ. எட்டியாரச்சி
செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

பிரதிகள்
ஆளுநர்
துணை ஆளுநர் (என்)
துணை ஆளுநர் (டபிள்யூ)
ஆளுநரின் உதவியாளர் (சீ)
பொருளாதார ஆராய்ச்சிப் பணிப்பாளர்
வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளர்
முதன்மைக் கணக்காளர்
ஆலோசகர் வங்கித் தொழில் மற்றும் நிதியியல் பணிகள்

தொடர்பு இலக்கம் 06/07/08/2001

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி
அ.பெ. 883
கொழும்பு 1
10 ஒகத்து 2001

அனைத்து அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களுக்கான
தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்

அன்புள்ள ஐயா.

**பொருட்களின் கப்பலேற்றலும் உள்நாட்டு வான்வழிப்பட்டியல்கள்/ உள்நாட்டு ஏற்று முறிகள்/ கப்பலேற்றுவோரின் சரக்குப் பற்றுச் சீட்டுக்களின் வழங்கலும்**

மேலே குறிப்பிடப்பட்ட விடயம் சம்பந்தமாக எண் ஈசீ/ 48/ 9/ (ஜீ) கொண்ட 1991.07.12 நாளிடப்பட்டதும் எண் ஈச/ 04/ 97 (ஜீ) கொண்ட 1997 மாச்சு 04 நாளிடப்பட்டதுமான எனது தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு மேலதிகமாக, தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் தரப்பட்டுள்ள கப்பலேற்றுவோர் பட்டியலில் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்டுள்ள பின்வரும் கப்பலேற்றுவோரையும் உள்ளடக்கும் படியும் ஏற்றுமதி சரக்குத் தொகுதிகள் தொடர்பான கொடுக்கல் வாங்கல்களுக்காக அவர்களினால் வழங்கப்படும் உள்நாட்டு வான்வழிப் பட்டியல்கள்/ உள்நாட்டு ஏற்றுமுறிகள் / கப்பலேற்றுவோரின் சரக்குப் பற்றுச்சீட்டுக்கள் ஆகியவற்றை ஏற்றுக்கொள்ளும்படியும் அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

| பொருட்கள் கப்பலேற்றுவோரின் பெயர் | பதிவு எண் |
|---|---|
| 1. பேமஸ் பெசிபிக் சிப்பிங் லங்கா(பிரைவேட்)லிமிற்றட் | 07/ 07/ 009/ 0102 |
| 2. அரமெக்ஸ் எயார்போன் பிரேட் கோபரேசன் லங்கா (பிரைவேட்) லிமிற்றட் | 06/ 07/ 009/ 0103 |
| 3. வேர்லட் வைட் லொஜிஸ்டிக் (பிறைவேட்) லிமிற்றட் | 06/ 07/ 009/ 0104 |
| 4. சவுத் ஏசியா லொஜிஸ்டிக் லிமிற்றட் | 06/ 07/ 009/ 0105 |
| 5. சீ எயார் வேர்ல்வைட் (பிரைவேட்) லிமிற்றட் | 06/ 07/ 009/ 0106 |

உங்கள் உண்மையுள்ள
எச். ஏ. ஜீ. எட்டியாரச்சி
செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

தொடர்பு இலக்கம் 06/07/10/2001

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி
அ.பெ. 883
கொழும்பு 1
19 ஒத்தோபர் 2001

அனைத்து அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களுக்கான
தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்

அன்புள்ள ஐயா,

**பொருட்களின் கப்பேலற்றலும் உள்நாட்டு வான்வழிப் பட்டியல்கள்/ உள்நாட்டு ஏற்று முறிகள்/ கப்பலேற்றுவோரின் சரக்குப் பற்றுச் சீட்டுக்களின் வழங்கலும்**

மேலே குறிப்பிடப்பட்ட விடயம் சம்பந்தமாக எண் ஈசீ/ 48/ 9/ (ஜீ) கொண்ட 1991.07.12 நாளிடப்பட்டதும் எண் ஈச/ 04/ 97 (ஜீ) கொண்ட 1997 மாச்சு 04 நாளிடப்பட்டதுமான எனது தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு மேலதிகமாக, தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் தரப்பட்டுள்ள கப்பலேற்றுவோர் பட்டியலில் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்டுள்ள பின்வரும் கப்பலேற்றுவோரையும் உள்ளடக்கும் படியும் ஏற்றுமதி சரக்குத் தொகுதிகள் தொடர்பான கொடுக்கல் வாங்கல்களுக்காக அவர்களினால் வழங்கப்படும் உள்நாட்டு வான்வழிப் பட்டியல்கள்/ உள்நாட்டு ஏற்றுமுறிகள் / கப்பலேற்றுவோரின் சரக்குப் பற்றுச்சீட்டுக்கள் ஆகியவற்றை ஏற்றுக்கொள்ளும்படியும் அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

| கப்பலேற்றுவோரின் பெயர் | பதிவு எண் |
| --- | --- |
| 1. மெரிடைம் லொஜிஸ்டிக்ஸ் இன்டர் நெசனல் கொழும்பு (பிரைவேட்)லிமிற்றட் | 06/ 07/ 009/ 0107 |
| 2. ஏ.ஈ. லொஜிஸ்டிக்ஸ் (பிரைவேட்)லிமிற்றட் | 06/ 07/ 009/ 0108 |
| 3. மெக்கலம் கார்கோ (பிறைவேட்) லிமிற்றட் | 06/ 07/ 009/ 0109 |

உங்கள் உண்மையுள்ள
எச். ஏ. ஜீ. எட்டியாரச்சி
செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

தொடர்பு இலக்கம்: 06/04/11/2001

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி
அ.பெ. 883
கொழும்பு 1
30 ஒத்தோபர் 2001

இலங்கை அபிவிருத்தி முறிகளின் குறித்துரைக்கப்பட்ட
முகவர்களாக நியமிக்கப்பட்ட முதனிலை வணிகர்களுக்கும்
அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி வணிகர்களுக்கும்

அன்புள்ள ஐயா,

## இலங்கை அபிவிருத்தி முறிகள்

இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட இலங்கை அபிவிருத்தி முறிகளின் கொள்வனவு மற்றும் சந்தைப்படுத்தல் நோக்கங்களுக்காக இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் கண்காணிப்பாளரினால் குறித்துரைக்கப்பட்ட முகவர்களாக நியமிக்கப்பட்டுள்ள முதனிலை வணிகர்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி வணிகர்களுக்கும் ஐ.அ.டொலரில் மூலதனம் மற்றும் வட்டி செலுத்தப்படவுள்ள இலங்கை அபிவிருத்தி முறிகளைக் கைக்கொள்ளுவதற்கும் அவற்றினை உடைமையாகக் கொண்டிருப்பதற்கும் மாற்றல் செய்வதற்கும் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 17 இன்படி இத்தால் அனுமதி வழங்கப்படுகின்றது.

2. அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி வணிகராக நியமிக்கப்பட்டுள்ள வர்த்தக வங்கியொன்றுடன், இந்த நோக்கத்துக்காக ஐ.அ.டொலரில் பின்வரும் இரண்டு சிறப்புக் கணக்குகளைப் பேணுவதற்கு அத்தகைய குறித்துரைக்கப்பட்ட முகவர்களுக்கு இத்தால் அனுமதி வழங்கப்படுகின்றது.

(i) அரசாங்கத்திடமிருந்து நேரடியாக இலங்கை அரசாங்க அபிவிருத்தி முறிகளைக் கொள்வனவு செய்யும் பந்தி 3இல் குறித்துரைக்கப்பட்ட வகையினரான முதலீட்டாளர்களிடமிருந்து பெறப்பட்டு அரசாங்கத்துக்குச் செலுத்தப்பட வேண்டிய நிதியங்களை வரவு வைப்பதற்காக அரசாங்கத்தின் சார்பில் பேணப்படும் இலங்கை அரசாங்க அபிவிருத்தி முறி முதலீட்டுக் கணக்கு என்ற பெயரிலான ஐ.அ.டொலர் வட்டி உழைக்கும் கணக்கு ஒன்று.

(ii) அரசாங்கத்திடமிருந்து இலங்கை அரசாங்க அபிவிருத்தி முறிகளைக் கொள்வனவு செய்யும் நோக்கத்துக்காகவும் பந்தி 3இல் குறித்துரைக்கப்பட்ட முதலீட்டாளர்களுடன் இலங்கை அரசாங்க அபிவிருத்தி முறிகளின் வாணிபத்தில் ஈடுபடுவதற்காகவும் வட்டி உழைக்கும் அடிப்படையில் முறிகளின் முதலீட்டுக்கான டொலர் கணக்கு என்ற பெயரில் ஐ.அ.டொலர் கணக்கு ஒன்றினைப் பேணுதல் (அத்தகைய குறித்துரைக்கப்பட்ட முகவரானவர் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி வணிகராகக் காணப்படும் பட்சத்தில் அத்தகைய கணக்கின் பேணலுக்கான பணிப்பு தேவைப்பட மாட்டாது.)

3. முதலீட்டாளர் வகைகள்

(i) இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே வதிவுடைய வெளிநாடுகளின் பிரசைகள்

(ii) இலங்கைக்கு வெளியே தமது நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட இலங்கைப் பிரசைகள்

(iii) தொழில் ஒன்றை மேற்கொள்ளுவதற்கு அல்லது வாணிபம் ஒன்றை அல்லது தொழிற்துறை ஒன்றை நிறுவுவதற்காக இலங்கையிலிருந்து வெளிச்சென்று வெளிநாட்டில் வதியும் இலங்கைப் பிரசைகள்.

(iv) இலங்கை தவிர்ந்த நாடொன்றின் சட்டங்களின் நிறுவப்பட்ட கூட்டு அல்லது கூட்டு அல்லா ஆயங்கள்

4. இலங்கை அபிவிருத்தி முறிகளின் முதலீட்டுக் கணக்கு

இக் கணக்குக்கான வரவுகளும் பற்றுக்களும் பின்வருவனவற்றுக்கு மட்டுப்படுத்தப்படல் வேண்டும்.

(i) வரவுகள்

(அ) அரசாங்கத்திடமிருந்து இலங்கை அரசாங்க அபிவிருத்தி முறிகளை கொள்வனவு செய்வதற்காக மேலே பந்தி 3இல் குறிப்பிடப்பட்ட முதலீட்டாளர்களிடமிருந்து ஐ.அ.டொலரில் பெறப்பட்ட பண அனுப்பல்கள்.

(ii) பற்றுக்கள்

(அ) மேலே பந்தி 3இல் குறிப்பிடப்படட முதலீட்டாளர்களினால் இலங்கை அரசாங்க அபிவிருத்தி முறிகளைக் கொள்வனவு செய்வதற்காக அரசாங்கத்துக்கு கொடுப்பனவுகளை மேற் கொள்ளுவதற்கு (பொதுப்படுகடன் கண்காணிப்பாளரினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு இசைவாக இந்தக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டியதோடு இலங்கை மத்திய வங்கியில் பொதுப்படுகடன் பணிப்பாளரினால் பேணப்படும் பொதுப்படுகடன் உதவுதொகை ஐ.அ.டொலர் கணக்கிற்கு செலுத்தப்படல் வேண்டும்)

(ஆ) பொதுப்படுகடன் கண்காணிப்பாளரின் அறிவுறுத்தல்களின்படி மேலே பந்தி 3இல் குறித்துரைக்கப்பட்ட முதலீட்டாளர்களுக்கு மீளளிப்பு என்ற வகையில் பண அனுப்பல்களை மேற்கொள்ளுவதற்கு

(இ) பொதுப்படுகடன் கண்காணிப்பாளரின் அறிவுறுத்தல்களின்படி வேறு ஏதேனும் நோக்கத்துக்காக

குறிப்பு: இந்தக் கணக்கிற்குப் பெறப்பட்ட காசு பொதுப்படுகடன் பணிப்பாளரினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு கடுமையான இசைந்து செல்லும் வகையில் அரசாங்கத்துக்கு மாற்றல் செய்யப்படல் வேண்டும்.

5. முறிகளின் முதலீட்டுக்கான டொலர் கணக்கு

இக்கணக்குக்கான வரவுகளும் பற்றுக்களும் பின்வருவனவற்றுக்கு மட்டுப்படுத்தப்படல் வேண்டும்.

வரவுகள்

(அ) இலங்கை அரசாங்க அபிவிருத்தி முறிகளின் கொள்வனவுக்காக பெறப்பட்ட அல்லது சாட்டப்பட்ட ஐ.அ.டொலர்கள்

(ஆ) அவர்களுக்கான இலங்கை அபிவிருத்தி முறிகளின் விற்பனையின்மீது மேலே பந்தி 3இல் குறிப்பிடப்பட்ட முதலீட்டாளர்களிடமிருந்து பெறப்பட்ட விற்பனைப் பெறுதிகள்.

(இ) முதன்மைத் தொகை மீள் கொடுப்பனவாக பெறப்பட்ட தொகைகளும் கணக்கு வைத்திருப்பவர்களின் உடைமையான இலங்கை அபிவிருத்தி முறிகளின் மீதான வட்டிக் கொடுப்பனவுகளும்.

பற்றுக்கள்

(அ) இலங்கை அரசாங்க அபிவிருத்தி முறிகளைக் கைக்கொள்ளுவதற்காக அரசாங்கத்துக்கான கொடுப்பனவுகளுக்காக அத்தகைய கொடுப்பனவுகள் மேலே குறிப்பிடப்பட்ட பொதுப்படுகடன் உதவுதொகை ஐ.அ.டொலர் கணக்கிற்கு மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(ஆ) கணக்கு வைத்திருப்பவரினால் இரண்டாம் நிலைச் சந்தையில் இலங்கை அபிவிருத்தி முறிகள் கொள்வனவு செய்யப்பட்டு அதனை விற்பனை செய்தவர்களுக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்ளுவதற்காக

(இ) முறிகளை துணைப் பிரிவுகளாக மாற்றுவதற்கு அல்லது அவற்றினை ஒன்று சேர்ப்பதற்கு பொதுப்படுகடன் கண்காணிப்பாளருக்கு செலுத்த வேண்டிய கட்டணம் போன்ற பொதுப்படுகடன் கண்காணிப்பாளருக்குச் செலுத்தப்பட வேண்டிய ஏதேனும் தொகைகள்

(ஈ) கணக்கு வைத்திருப்பவர் இலங்கை அபிவிருத்தி முறிகளைக் கொள்வனவு செய்வதற்குத் தேவையான வெளிநாட்டுச் செலாவணியை விட மேலதிகமாக வைத்திருக்கும் வெளிநாட்டுச் செலாவணியை அங்கீகரிக்கப்பட்ட வணிகர் ஒருவருக்கு விற்பனை செய்வதற்காக

6. மேலே குறிப்பிட்ட கணக்குகளைப் பேணும் அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் பற்றுக்கள் மற்றும் வரவுகளின் விபரங்களைக் குறிப்பிட்டு ஒவ்வொரு மாதத்துக்குமான கூற்றுக்களை தொடரும் மாதத்தின் 15ஆம் நாள் அல்லது அதற்கு முன்பாக செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்திற்கு (டீபிரிவு) சமர்ப்பித்தல் வேண்டும்.

7. அரசாங்கத்திடமிருந்து இலங்கை அபிவிருத்தி முறிகளைக் கொள்வனவு செய்வதற்கு அல்லது இலங்கை அபிவிருத்தி முறிகளை வைத்திருப்பவர்களிடமிருந்து அவற்றினைக் கொள்வனவு செய்வதற்குத் தேவையான அளவுக்கு மட்டுமே அத்தகைய கொள்வனவுகள் மட்டுப்படுத்தப்படும் என்ற நிபந்தனைக்கு உட்பட்டு அங்கீகரிக்கப்பட்ட வணிகர் ஒருவரிடமிருந்து ஐ.அ.டொலர்களைக் கொள்வனவு செய்வதற்கும் முதனிலை வணிகர்களான குறித்துரைக்கப்பட்ட முகவர்களுக்கு செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 5இன் நியதிகளின்படி இத்தால் அனுமதி வழங்கப்படுகின்றது.

8. மேலே குறிப்பிடப்பட்ட அனுமதி 2001ஆம் ஆண்டு நவெம்பர் 1ஆம் நாளிலிருந்து செயற்படும் என்பதை தயவுசெய்து கவனிக்கவும்.

உங்கள் உண்மையுள்ள

எச். ஏ. ஜீ. எட்டியாரச்சி

செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

பிரதிகள் ஆளுநர்

துணை ஆளுநர் (என்)

துணை ஆளுநர் (டபிள்யூ)

உதவி ஆளுநர் (ஆர்ஜே)

உதவி ஆளுநர் (சீ)

பொருளாதார ஆராய்ச்சிப் பணிப்பாளர்

வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளர்

முதன்மைக் கணக்காளர்

பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்

ஆலோசகர் வங்கித் தொழில் மற்றும் நிதியியல் பணிகள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

1208/ 14ஆம் இலக்கம் – 2001ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 01ஆந் திகதி வியாழக்கிழமை

## பகுதி 1 : தொகுதி (1) – பொது

## இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

## செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழான அறிவித்தல்

(இலங்கைச் சட்டவாக்கங்களின் அத்தியாயம் 423)

செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவுகள் 5, 7, 8, 11, மற்றும் 22இன் உபபிரிவு (1) இன் கீழான அனுமதி.

அனுமதி – செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (இசவா அத்தியாயம் 423) பிரிவுகள் 5, 7, 8, 11 மற்றும் பிரிவு 22 இன் உபபிரிவு (1) என்பனவற்றின் நியதிகளின்படி, பிரயோகிக்கப்படும் வகையில் கீழக்காணும் வகையினரான ஆட்களுக்கு இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படும் இலங்கை அபிவிருத்தி முறிகளின் கொள்வனவுக்காகவும் மாற்றலுக்காகவும் கொடுக்கல் வாங்கல் சம்பந்தப்பட்ட கொடுப்பனவுகளை மேற்கொள்ளுவதற்காகவும் அத்தகைய வகையினரான ஆட்களுக்கும் அத்தகைய வகையினரான ஆட்களினால் அல்லது ஆட்களுக்கு முறிகளின் ஏற்றுமதிக்காகவும் இத்தால் அனுமதி வழங்கப்படுகின்றது.

(i) இலங்கையில் ஆயினும் இலங்கைக்கு வெளியேயாயினும் வதிவுடைய வெளிநாட்டுப் பிரசைகள்

(ii) இலங்கைக்கு வெளியே நிரந்தர வதிவுடைய இலங்கைப் பிரசைகள்

(iii) தொழில் ஒன்றை மேற்கொள்ளுவதற்காக அல்லது வாணிபம் ஒன்றினை அல்லது தொழிற்றுறை ஒன்றினை நிறுவுவதற்காக இலங்கையிலிருந்து வெளிச்சென்றவர்கள்.

(iv) இலங்கை தவிர்ந்த நாடொன்றின் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத ஆயங்கள்

எச். ஏ. ஜீ. எட்டியாராச்சி

செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

தொடர்பு இலக்கம் 06/02/12/2001

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி
அ.பெ. 883
கொழும்பு 1
06 நவெம்பர் 2001

அனைத்து அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களுக்கான
தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்

அன்புள்ள ஐயா.

## பங்கு முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கு

மேலே குறிப்பிடப்பட்ட விடயம் தொடர்பான எண் ஈசீ/ 74/ 92 (சீஅன்ட்எப்) கொண்டதும் 1992.07.28 நாளிடப்பட்டதுமான எனது தொழிற்பாட்டு அறிவுறுத்தல் சம்பந்தமானது.

கொழும்பு பங்குப் பரிவர்த்தனையினால் தற்பொழுது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பிணையங்களின் கடன் பெறுகைகள் மற்றும் வழங்கல்கள் தொடர்பாக வதிவற்றவர்களினாலான கொடுப்பனவுகளுக்கும் பெறுகைகளுக்கும் பங்கு முதலீட்டு வெளிநாட்டுக் கணக்குத் திட்டம் (சியரா) இப்பொழுது பிரயோகிக்கப்படும் என்பதை அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது. இதன்படி சியரா கணக்குகளின் ஊடாக பின்வரும் வரவுகளுக்கும் பற்றுக்களுக்கும் இத்தால் அனுமதி வழங்கப்படுகின்றது.

1. வரவுகள்

   i. அவர்களது பங்கேற்பாளர்களினூடாக பிணையங்களைக் கடன்கொடுத்தோர் மற்றும் கடனாகப் பெற்றோர் ஆகியோருக்கிடையிலான பிணையங்களின் கடன்பெறல் மற்றும் கடன்வழங்கல் ஒப்பந்தத்தின் நியதிகளின்படி கடன் பெறுநரின் பங்கேற்பாளரினால் (வங்கி/ பங்குத்தரகர்) அத்தாட்சிப்படுத்தப்பட்டவாறு கடன்பாட்டாளர் ஒருவருக்கு பங்குகளின் வதிவற்ற கடன் வழங்குநரினால் கடனாக வழங்கப்பட்ட பங்குகளின்மீது பெறப்பட்ட கட்டணங்களும் கூட்டு நன்மைகளும்

   ii. கடன் வழங்குநரின் பங்கேற்பாளரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டவாறு பங்குக் கடன்பெறல் கடன் வழங்கல் ஒப்பந்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் வதிவற்ற கடன் பெறுநர் ஒருவரின் சியரா கணக்கிலிருந்து செலுத்தப்பட்ட காசுப் பிணை வதிவற்ற அதே கடன் பெறுநருக்கு மீளச் செலுத்தப்பட்ட தொகை

   iii. கடன் வழங்குநருடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் நியதிகளுக்கிணங்க கடன் பெறுநரின் பங்கேற்பாளரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டவாறு ஏதேனும் இடைநிறுத்தலின் காரணமாக பங்குகளின் மாற்றல் இடம்பெறாதவிடத்து கடன் வழங்குநருக்கு வரவு வைக்கப்பட வேண்டிய காசு.

   வதிவற்ற கடன்பாட்டாளர் ஒருவரைப் பொறுத்தவரை காசுக் கொடுப்பனவானது அவரது சியரா கணக்கிலிருந்து பற்று வைக்கப்பட்ட நிதியங்களில் இருந்தானதாக இருத்தல் வேண்டும்.

2. பற்றுக்கள்

   i. கடன் வழங்குநர் மற்றும் கடன் பெறுநருக்கிடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் நியதிகளுக்கிணங்க கடன் வழங்குநரின் பங்கேற்பாளரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டவாறு வதிவற்ற

கடன்பெறுநர் ஒருவரினால் கடனாகப் பெறப்பட்ட பங்குகளின் மீதான பிணையொன்றுக்கான கூட்டு நன்மைகளை செலுத்துவதற்குத் தேவைப்படும் கட்டணங்களும் நிதியங்களும்.

ii. கடன்பெறுநருக்கும் கடன் வழங்குநருக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட பிணையங்களின் கடன் பெறுகை மற்றும் கடன் வழங்கல் ஒப்பந்தத்தின் நியதிகளுக்கிணங்க கடன்வழங்குநரின் பங்கேற்பாளரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டவாறு வதிவற்ற கடன்பெறுநரினால் வழங்கப்படவுள்ள ஏதேனும் காசுப் பிணை

உங்கள் உண்மையுள்ள
எச். ஏ. ஜீ. எட்டியாரச்சி
செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

பிரதிகள்
ஆளுநர்
துணை ஆளுநர் (என்)
துணை ஆளுநர் (டபிள்யூ)
ஆளுநரின் உதவியாளர் (சீ)
ஆளுநரின் உதவியாளர் (ஆர்ஜே)
பொருளாதார ஆராய்ச்சிப் பணிப்பாளர்
வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளர்
முதன்மைக் கணக்காளர்

**1991ஆம் ஆண்டின் 23ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க, நிதிக்கம்பனிகள் சட்டம்.**

*1991ஆம் ஆண்டின் 23ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க, நிதிக்கம்பனிகள் சட்டத்தின் 9ஆம் பிரிவின்கீழ் இலங்கை மத்திய வங்கியின் பணச்சபையினால் விடுக்கப்படுவதும் பொதுமக்கள் தகவலுக்காக வெளியிடப்படுவதுமான பணிப்பு.*

ஒப்பம்

ஏ.எஸ் ஜயவர்த்தன

தவிசாளர்

இலங்கை மத்திய வங்கியின் பணச்சபை

கொழும்பு 1

*2001ஆம் ஆண்டு மாச்சு மாதம் 7ஆம் நாளாகிய இன்று.*

**பணிப்பு**

1. இப்பணிப்பு 2001ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, நிதிக்கம்பனிகள் (வைப்புக்கள்) (திருத்தப்) பணிப்பு என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், 1991ஆம் ஆண்டின் 23ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க, நிதிக்கம்பனிகள் சட்டத்தில் வரைவிலக்கணங் கூறப்பட்டவாறாக ஒவ்வொரு நிதிக்கம்பனிகளும் ஏற்புடையதாதலும் உடனடியாக நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றோராம் ஆண்டின் 6ஆம் இலக்க, நிதிக்கம்பனிகள் (வைப்புப்) பணிப்பின் 2ஆம் பந்தி இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தி இடப்படுகின்றது.-

   "2. நிதிக்கம்பனியொன்று", கோரப்படுவதன்மீது மீளச் செலுத்தப்படற்பாலதான அல்லது ஏதேனும் வைப்புப் பெறப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குக் குறைவானதும் அத்தகைய வைப்புப் பெறப்பட்ட தேதியிலிருந்து அறுபது மாதங்களுக்கு (60) மேற்படுவதுமான ஒரு காலப்பகுதிக்குப் பின்னர் மீளச்செலுத்தப்படற்பாலதான அத்தகைய வைப்பை ஏற்றுக்கொள்ளுதலாகாது அல்லது அவ்வாறு புதுப்பிக்கப்படும் அத்தகைய வைப்பு, அத்தகைய புதுப்பித்தல் தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்கு முந்தாமலும் 60 மாதங்களுக்குப் பிந்தாமலும் மீளச் செலுத்தப்படற்பாலதாகவிருந்தாலொழிய அதனாற் பெறப்பட்ட ஏதேனும் வைப்பைப் புதுப்பித்தலாகாது."

# 1991ஆம் ஆண்டின் 23ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க, நிதிக்கம்பனிகள் சட்டம்.

*1991ஆம் ஆண்டின் 23ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க, நிதிக்கம்பனிகள் சட்டத்தின் 9ஆம் பிரிவின்கீழ் இலங்கை மத்திய வங்கியின் பணச்சபையினால் விடுக்கப்படுவதும் பொதுமக்கள் தகவலுக்காக வெளியிடப்படுவதுமான பணிப்பு.*

ஒப்பம்

ஏ.எஸ்.ஜயவர்த்தன

தவிசாளர்

இலங்கை மத்திய வங்கியின் பணச்சபை

கொழும்பு 1

*2001ஆம் ஆண்டு மாச்சு மாதம் 7ஆம் நாளாகிய இன்று.*

**பணிப்பு**

1. இப்பணிப்பு, 2001ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க, நிதிக்கம்பனிகள் (கடன் வழங்கல்) (திருத்தப்) பணிப்பு என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், 1991ஆம் ஆண்டின் 23ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க, நிதிக்கம்பனிகள் சட்டத்தின் 2ஆம் பிரிவின் நியதிகளின்படி பதிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு நிதிக்கம்பனிக்கும் ஏற்புடையதாதலும், உடனடியாக நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றோராம் ஆண்டின் 8ஆம் இலக்க, நிதிக்கம்பனிகள் (கடன்வழங்கல்) பணிப்பின் 3(1)ஆம் பந்தி இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்தி இடப்படுகின்றது.

"3 (1) நிதிக்கம்பனியொன்று, வாடகை கொள்வனவு நிதியளிப்பு, குத்தகைக்கு அல்லது கம்பனிகளுக்கிடையேயான கொடுகடன் என்பன உட்பட ஏதேனும் கடனை, முற்பணத்தை அல்லது எத்தன்மையானதுமான வேறு நிதி வசதியை அதன் பணிப்பாளர்களுள் எவருக்கும் அல்லது அதன் கொளிக் கம்பனிக்கு வழங்குதலாகாது; ஆனால் அதன் கடைசியாகக் கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகையிற் காட்டப்பட்டவாறான அதன் மூலதன நிதிகளின் 15 சதவீதத்தைத் தனிப்பட்ட முறையிலோ அல்லது கூட்டுமொத்தமாகவோ விஞ்சாத அத்தகைய கடன் வசதியை அதன் துணைநிலைக் கம்பனிகளுள் அல்லது இணைக்கம்பனிகளுள் ஒன்றுக்கோ அல்லது பலவற்றுக்கோ நிதிக்கம்பனிகள் வேறெவரேனும் கடன் பெறுநருக்கு ஏற்புடையப்படற்பாலவான அத்தகைய நியதிகளின்மேல் வழங்கலாம். கடன்பெறுநரின் பெயர், கடன் வசதி அளிக்கப்பட்ட தேதி, அளிக்கப்பட்ட தொகை மீளச் செலுத்தல் நிகழ்ச்சித்திட்டம், பிணைப்பொறுப்பும் வட்டிவீதமும் என்பன உட்பட அதன் விபரங்கள், அத்தகைய வழங்குகை செய்யப்பட்டதிலிருந்து 7 நாட்களினுள் பணிப்பாளருக்கு அறிக்கையிடப்படுதல் வேண்டும்."

# 1991ஆம் ஆண்டின் 23ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க, நிதிக்கம்பனிகள் சட்டம்.

*1991ஆம் ஆண்டின் 23ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க, நிதிக்கம்பனிகள் சட்டத்தின் 9ஆம் பிரிவின்கீழ் இலங்கை மத்திய வங்கியின் பணச்சபையினால் விடுக்கப்படுவதும் பொதுமக்கள் தகவலுக்காக வெளியிடப்படுவதுமான பணிப்பு.*

*ஒப்பம்*

*ஏ.எஸ்.ஜயவர்த்தன*

*தவிசாளர்*

*இலங்கை மத்திய வங்கியின் பணச்சபை*

*கொழும்பு 1*

*2001ஆம் ஆண்டு மாச்சு மாதம் 7ஆம் நாளாகிய இன்று.*

**பணிப்பு**

1. *இப்பணிப்பு, 2001ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க, நிதிக்கம்பனிகள் (முதலீடுகள்) (திருத்தப்) பணிப்பு என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், 1991ஆம் ஆண்டின் 23ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க, நிதிக்கம்பனிகள் சட்டத்தின் 2ஆம் பிரிவின் நியதிகளின்படி பதிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு நிதிக்கம்பனிக்கும் ஏற்புடையதாதலும், உடனடியாக நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.*

2. *ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றோராம் ஆண்டின் 12ஆம் இலக்க, நிதிக்கம்பனிகள் (முதலீடுகள்) பணிப்பின் 2ஆம் பந்தி இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்தி இடப்படுகின்றது.*

   *"2 நிதிக்கம்பனியொன்று, அதன் கடைசியாகக் கணக்காய்வு செய்யப்பட்ட வருடாந்த ஐந்தொகையில் காட்டப்பட்டவாறு அதன் மூலதன நியதிகளின் 5 சதவீத்துக்கு விஞ்சுவதாக ஏதேனும் கம்பனியின் பங்குகளில் முதலீடு செய்தலாகாது. ஆயின், அத்தகயை முதலீடு செய்யப்படும் கம்பனியின் வழங்கப்பட்டதும் செலுத்தப்பட்டதுமான மூலதனத்தின் 40 சதவீதத்தை விஞ்சுதலாகாதென்பதுடன், கம்பனிகள் பங்குகளில் அவ்வாறு முதலீடு செய்யப்பட்ட கூட்டுமொத்தத் தொகை, நிதிக்கம்பனியின் கடைசியாகக் கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகையிற் காட்டப்பட்டவாறு அதன் மூலதன நிதிகளின் 25 சதவீதத்தை விஞ்சுதலுமாகாது. இப்பந்தி தொடங்குவதற்கு முன்னர் கொள்ளப்பட்ட பங்குகளில் நிதிக்கம்பனியொன்றின் மூதலீடுகளை அது குறைப்பதனை அத்தகைய தேவைப்பாடு அவசியமாக்குமிடத்து, பணச்சபை, அத்தகைய தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகுவதற்கான இப்பந்தி தொடங்குவதிலிருந்து நாலாண்டுக் காலப்பகுதியொன்றை நிதிக்கம்பனிக்கு அளிக்கலாம்."*

## 1991ஆம் ஆண்டின் 23ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க, நிதிக்கம்பனிகள் சட்டம்.

*1991ஆம் ஆண்டின் 23ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க, நிதிக்கம்பனிகள் சட்டத்தின் 9ஆம் பிரிவின்கீழ் இலங்கை மத்திய வங்கியின் பணச்சபையினால் விடுக்கப்படுவதும் பொதுமக்கள் தகவலுக்காக வெளியிடப்படுவதுமான பணிப்பு.*

*ஒப்பம்*

*ஏ.எஸ்.ஜயவர்த்தன*

*தவிசாளர்*

*இலங்கை மத்திய வங்கியின் பணச்சபை*

*கொழும்பு 1*

*2001ஆம் ஆண்டு மாச்சு மாதம் 7ஆம் நாளாகிய இன்று.*

**பணிப்பு**

1. இப்பணிப்பு, 2001ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, நிதிக்கம்பனிகள் (திரவச்சொத்துக்கள்) (திருத்தப்) பணிப்பு என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், 1991ஆம் ஆண்டின் 23ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க, நிதிக்கம்பனிகள் சட்டத்தின் நியதிகளின்படி பதிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு நிதிக்கம்பனிக்கும் ஏற்புடையதாதலும், உடனடியாக நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றோராம் ஆண்டின் 7ஆம் இலக்க, நிதிக்கம்பனிகள் (திரவச்சொத்துக்கள்) பணிப்பு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(அ) 2(V) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலமும்:-

2(V)உட்பந்தி (iii) இன் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுக ஒரு நிதிக்கம்பனியாற் கொள்ளப்பட்ட இலங்கை அரசாங்கத் திறைசேரி உண்டியல்களும், இலங்கை அரசாங்கப் பிணைப்பொறுப்புக்களும் இலங்கை மத்திய வங்கிப் பிணைப்பொறுப்புக்களும் அல்லது (iii)ஆம் உட்பந்திக்கு இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்தும் வகையில் அத்தகைய உண்டியல்களின் அல்லது பிணைப்பொறுப்புக்களின் விற்பனையின்மேல் அல்லது மீட்பின்மேல் கொள்ளப்பட்ட அத்தகைய உண்டியல்களும் அல்லது பிணைப்பொறுப்புக்களும், உரிமம்பெற்ற ஒன்றோ, பலவோவாய வர்த்தக வங்கிகளின் கட்டுக்கோப்பில் வைத்திருக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், நிதிக்கம்பனி, (iii)ஆம் உட்பந்திக்கு இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்தும் வகையில், பணிப்பாளரினால் வழங்கப்படவேண்டிய ஒரு படிவத்தில் அத்தகைய உண்டியல்கள் பற்றிய விபரங்களைக் கொடுக்கின்றதும், அத்தகைய வங்கியிடமிருந்து அல்லது வங்கிகளிடமிருந்து பெறப்பட்டதுமான வாராந்தக் கூற்றொன்றைப் பணிப்பாளருக்குச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(ஆ) 3ஆம் பந்தியின் முடிவிற் பின்வரும் சொற்களைச் சேர்ப்பதன்மூலம்:-

"அத்துடன் 'உரிமப்பெற்ற வர்த்தக வங்கிகள்' என்பது, 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்."

## 1991ஆம் ஆண்டின் 23ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டம்

*1991ஆம் ஆண்டின் 23ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க, நிதிக்கம்பனிகள் சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் பணச்சபையினால் விடுக்கப்பட்ட பணிப்பு.*

ஒப்பம்

ஏ.எஸ்.ஜயவர்த்தன

தவிசாளர்

இலங்கை மத்திய வங்கியின் பணச்சபை

கொழும்பு 1

2001ஆம் ஆண்டு மே மாதம் 25ஆம் நாளாகிய இன்று.

**பணிப்பு**

1. இப்பணிப்பு, 2001ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க, நிதிக்கம்பனிகள் (வைப்புக்கள் ஊக்குவிப்புத் திட்டங்கள்) பணிப்பு என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், 1991ஆம் ஆண்டின் 23ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க, நிதிக்கம்பனிகள் சட்டத்தின் 2ஆம் பிரிவின் நியதிகளின்படி பதிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு நிதிக்கம்பனிக்கும் ஏற்புடையதாதலும் வேண்டும். அத்துடன் கசெற்றில் வெளியிடப்பட்ட நாளில் இது உடனடியாக நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. நிதிக்கம்பனியொன்று, பணிப்பாளரின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெறாமல் வைப்புக்களைப் பரிந்துகேட்பதற்கான ஏதேனும் ஊக்குவிப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தலாகாது.

3. பொதுமக்களிடமிருந்து வைப்புக்களைப் பரிந்துகேட்பதற்கான ஏதேனும் ஊக்குவிப்புத் திட்டம்–

   (i) நிதிநிறுவனங்களின் ஏற்றுக்கொள்ளப்பட்ட செயல்முறைகளினுள் இருத்தல் வேண்டும்;

   (ii) வைப்பாளர்களுக்கு கற்பிதமானதாகவிராத உண்மையான நன்மையொன்றை அளித்தல் வேண்டும்;

   (iii) ஏனைய நிதிநிறுவனங்களிடையே நியாயமற்ற, விரோதஞ்சாதிக்கும் போட்டாபோட்டிக்கு இட்டுச்செல்லுதலாகாது.

   (iv) புத்திசாலித்தனமான தேவைப்பாடுகளைப் பலவீனப்படுத்தலாகாது;

   (v) கம்பனியினால் நேரடியாகத் தொழிற்படுத்தப்படுதல் வேண்டும் அல்லது இன்னொரு கம்பனியுடன் இணைந்து அது பொறுப்பேற்கப்படுமிடத்து, நன்மையளிக்கும் கம்பனி, சம்பந்தப்பட்ட நிதிக்கம்பனியின் இணைநிலைக் கம்பனியாக அல்லது துணைநிலைக் கம்பனியாக அல்லது நிதிக்கம்பனி எந்தத் தொகுதியைச் சேர்ந்துள்ளதோ அந்தத் தொகுதியின் ஒரு திறத்தவராக இருத்தலாகாது; அத்துடன்

4. இப்பணிப்பில்–

   (அ) "ஊக்குவிப்புத் திட்டம் " என்பது, வட்டி என்ற வகையாகவல்லது வைப்பாளர்கள் மீது பணவகையான அல்லது பொருள்வகையான நன்மையை அளிப்பதற்கான ஓர் ஒழுங்கு என்று பொருளாகும்.

   (ஆ) "பணிப்பாளர் " என்பது திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் 46ஆம் பிரிவிலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

## 1991ஆம் ஆண்டின் 23ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டம்

*1991ஆம் ஆண்டின் 23ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க, நிதிக்கம்பனிகள் சட்டத்தின் 33(2) (இ) என்னும் பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் பணச்சபையினால் விடுக்கப்பட்ட பணிப்பு.*

*ஒப்பம்*

*ஏ.எஸ்.ஜயவர்த்தன*

*தவிசாளர்*

*இலங்கை மத்திய வங்கியின் பணச்சபை*

*2001ஆம் ஆண்டு மே மாதம் 25ஆம் நாளாகிய இன்று.*

*2001ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க. நிதிக் கம்பனிகள் (விளம்பரப்படுத்தல்) விதி*

1. (அ) இவ்விதி, 2001ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, நிதிக் கம்பனிகள் (விளம்பரப்படுத்தல்) விதி என எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன், 1991ஆம் ஆண்டின் 23ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க, நிதிக் கம்பனிகள் சட்டத்தின் நியதிகளின்படி பதிவு செய்யப்பட்ட ஏதேனும் நிதிக் கம்பனிக்கு ஏற்புடையதாதலும் வேண்டும்.

   (ஆ) கசெற்றில் வெளியிடப்படும் தேதியன்று இவ்விதி நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

2. பொதுமக்களிடமிருந்து நேரடியாகவோ மறைமுகமாகவோ வைப்புக்களைப் பரிந்து கேட்டு வெகுசனத் தொடர்புச் சாதனம் மூலம் நிதிக் கம்பனியொன்றினால் வழங்கப்படும் ஒவ்வொரு விளம்பரமும். அத்தகைய பரிந்துகேட்டலுடன் சேர்த்து மேலதிகமாகப் பின்வரும் தகவல்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

   (அ) நிதிக் கம்பனியின் பெயரும், அதன் பிரதான தொழிலிடத்தின் முகவரியும்:

   (ஆ) அதன் கூட்டிணைப்புத் திகதி ;

   (இ) அதன் பணிப்பாளர்களின் பெயர்கள்:

   (ஈ) அத்தகைய கம்பனியினால் கொண்டு நடாத்தப்படும் பிரதான தொழில்முறைகள்

   (உ) மூலதன வைப்புக்களினதும் கடன் பெறுகைகளினதும் தொகையை ஆண்டுதோறும் காட்டி, கடைசியாகக் கணக்காய்வு செய்யப்பட்ட மூன்று ஐந்தொகைகளிலும் (எவையேனுமிருப்பின்) தோன்றுகின்ற கம்பனி தொடர்பான விபரங்கள், அல்லது கம்பனியானது மூன்றாண்டுகளுக்கு உளதாயிருக்குமிடத்து, உளதாயிருந்த நேர்முற்போந்த காலப்பகுதிக்கான கம்பனி தொடர்பான விபரங்கள்:

   (ஊ) நேர்முற்போந்த மூன்று நிதியாண்டுகளுக்காக வரி செலுத்தப்படுவதற்கு முன்னரும் பின்னரும் கம்பனியின் இலாபங்கள் பற்றிய விபரங்கள், அல்லது கம்பனியானது மூன்றாண்டுகளுக்கு உளதாயிருக்குமிடத்து, உளதாயிருந்த நேர்முற்போந்த காலப்பகுதிக்கான இலாபங்கள் பற்றிய விபரங்கள்:

   (எ) நேர்முற்போந்த மூன்று நிதியாண்டுகளுக்காகக் கம்பனியினால் வெளிப்படுத்தப்பட்ட பங்கிலாபங்கள் எவையேனுமிருப்பின் அவை தொடர்பான விபரங்கள் அல்லது கம்பனியானது மூன்றாண்டுகளுக்கு உளதாயிருக்குமிடத்து, உளதாயிருந்த நேர்முற்போந்த காலப்பகுதிக்கான பங்கிலாபங்கள் தொடர்பான விபரங்கள்:

   (ஏ) அத்தகைய கம்பனியினால் எந்த நிபந்தனைக்கமைய வைப்புக்கள் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமோ அந்த நிபந்தனைகள் ; அத்துடன்

   (ஐ) பயனுள்ள ஆண்டு வட்டிவீதம்.

3.(அ) இரண்டாம் பந்தியின் கீழ் வழங்கப்படுவதும் தொலைக்காட்சி அல்லது இயக்கப் படங்களின் மூலம் கடத்தப்படுவதுமான ஒவ்வொரு விளம்பரமும், பார்வையாளர்கள் அத்தகைய விளம்பரத்தின் விபரங்களை முழுமையாக விளங்கிக் கொள்வதனை இயலச் செய்வதற்குத் தெளிவான செவிப்புல, கட்புல வெளிப்படுத்துகையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஆ) இரண்டாம் பந்தியின் கீழ் வழங்கப்படுவதும் வானொலியின் மூலம் ஒலிபரப்பப்படுவதுமான ஒவ்வொரு விளம்பரமும், கேட்போர் அத்தகைய விளம்பரத்தின் விபரங்களை முழுமையாக விளங்கிக் கொள்வதனை இயலச் செய்வதற்குத் தெளிவான செவிப்புல வெளிப்படுத்துகையைக் கொண்டிருந்தல் வேண்டும்.

4.(அ) ஒவ்வொரு நிதிக் கம்பனியும், 2ஆம் பந்தியின் கீழ் ஒரு விளம்பரத்தை, வழங்கு முன்னர், அத்தகைய விளம்பரத்தின் பிரதியொன்றைப் பணிப்பாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஆ) இரண்டாம் பந்தியின் கீழ் வழங்கப்படும் ஏதேனும் விளம்பரம் அப்பந்தியுடன் இணங்கியொழுகவில்லையென அல்லது பொதுமக்களைப் பிழைவழி உய்க்கும் சாத்தியம் கொண்ட தகவலைக் கொண்டுள்ளதெனப் பணிப்பாளர் அபிப்பிராயப்படுமிடத்து, பணிப்பாளர், அவரினாற் குறித்துரைக்கப்படும் முறையில் அத்தகைய விளம்பரத்தின் மீளாயப்பட்ட விளம்பரத்தை வெளியிடுமாறு நிதிக் கம்பனியைப பணிக்கலாமென்பதுடன் நிதிக் கம்பனி அத்தகைய பணிப்புக்கு இணங்கியொழுகுதலும் வேண்டும்.

5. இவ்விதியில் -

(அ) "விளம்பரம் என்பது" வெகுசனத் தொடர்புச் சாதனம் மூலம் நிதிக் கம்பனியொன்றினால் அல்லது அதன் சார்பில் வெளியிடப்பட்ட ஏதேனும் விடயம் என்று பொருளாகும்;

(ஆ) "பயனுள்ள ஆண்டு வீதம் " என்பது வைப்புக் கணக்கொன்று குறிப்பிடப்பட்ட வட்டி வீதத்தில் ஓராண்டில் உழைக்கும், நூற்றுவீத விகிதத்தில் கூறப்பட்ட வட்டித் தொகை என்று பொருளாகும்;

(இ) "மூலதனம்" மற்றும் "பணிப்பாளர்" என்பது திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க, நிதிக் கம்பனிகள் சட்டத்தின் 46ஆம் பிரிவிலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

(ஈ) "வெகுசனத் தொடர்புச் சாதனம்" என்பது, தொலைக்காட்சி, வானொலி இயக்கப்படம், செய்தித்தாள், சஞ்சிகை, புத்தகம், விளம்பரப் பலகை, சுவரொட்டி அல்லது வேறேதேனும் எழுத்திலான அல்லது அச்சிடப்பட்ட விடயம் போன்றவையும், அதன் மூலம் விளம்பரமொன்று பொது மக்களுக்குக் கடத்தப்படுவதுமான எல்லாக் கட்புல அத்துடன் / அல்லது செவிப்புல தொடர்பு வழிவகைகளை உள்ளடக்கும்.

6. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றோராம் ஆண்டின் 1ஆம் இலக்க, நிதிக் கம்பனிகள் (விளம்பரப்படுத்தல்) விதி இத்தால் இல்லாதொழிக்கப்படுகின்றது.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

1196/ 27ஆம் இலக்கம் – 2001ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 10ஆந் திகதி வெள்ளிக்கிழமை

## 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க, நிதி குத்தகைக்கு விடுதல் சட்டம்

*2001ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, நிதி குத்தகைக்கு விடுதல் (கட்டண) ஒழுங்கு விதிகள் 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க, நிதி குத்தகைக்கு விடுதல் சட்டத்தின் பிரிவுகள் 3(இ), 4(1) (உ), 5(4) மற்றும் 6 என்பனவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் 35ஆம் பிரிவின்கீழ் சனாதிபதியும், நிதி திட்டமிடல் என்ற விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சருமானவரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

*சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க*

*சனாதிபதியும் மற்றும் நிதி, திட்டமிடல் அமைச்சர்.*

கொழும்பு

*2001 ஒகத்து 01*

### ஒழுங்கு விதிகள்

1. இந்த ஒழுங்கு விதிகள், 2001ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, நிதி குத்தகைக்கு விடுதல் (கட்டண) ஒழுங்கு விதிகள் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், 2001ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 01ஆம் திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. இச்சட்டத்தின் 3(இ) என்னும் பிரிவின் நோக்கத்திற்கென, பகிரங்கக் கம்பனி ஒன்றின் ஆகக்குறைந்த வழங்கப்பட்டதும் செலுத்தப்பட்டதுமான மூலதனம் 75 மில்லியன் ரூபாவாக இருத்தல் வேண்டும்.

3. இச்சட்டத்தின் 4(1) (உ) என்னும் பிரிவின் நோக்கத்திற்கென –

(அ) ஓர் உரிமம் பெற்ற வர்த்தக வங்கி அல்லது ஓர் உரிமம் பெற்ற விசேட வங்கி அல்லது ஒரு நிதிக் கம்பனி தொடர்பில் பதிவுக்கான விண்ணப்பக் கட்டணம் 1,000 ரூபாவாகவிருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) வேறேதேனும் பகிரங்கக் கம்பனி தொடர்பில் பதிவுக்கான விண்ணப்பக் கட்டணம் 5,000 ரூபாவாகவிருத்தல் வேண்டும்.

4. இச் சட்டத்தின் 6ஆம் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள தாபனம் ஒன்றால் செலுத்தப்படத்தக்க ஆண்டுப் பதிவுக் கட்டம்.

(அ) ஓர் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியின் அல்லது ஓர் உரிமம் பெற்ற விசேட வங்கியின் அல்லது ஒரு நிதிக் கம்பனியின் விடயத்தில் 5,000 ரூபாவாகவிருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) வேறேதேனும் பகிரங்கக் கம்பனி விடயத்தில் 25,000 ரூபாவாகவிருத்தல் வேண்டும்.

5. சட்டத்தின் 5 (4) ஆம் பிரிவின் கீழ் வைத்துப் பேணப்படும் பதிவு செய்யப்பட்ட தாபனங்கள் பற்றிய இடாப்பு இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்தில் இருத்தல் வேண்டும்.

**அட்டவணை**

**2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க, நிதிக் குத்தகைச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள நிதிக் குத்தகைத் தாபனங்களின் இடாப்பு**

| தொடர் இல | நிறுவனத்தின் பெயர் | பதிவு செய்யப் பட்ட முகவரி | பதிவுத் திகதி | பதிவு இலக்கம் | பதிவு செய்யும் உத்தியோகத்தரின் முதலெழுத்துக்கள் | குறிப்புகள் |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

**2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க, நிதி குத்தகைக்கு விடுதல் சட்டம்**

**1ஆம் பிரிவின் கீழான கட்டளை**

*2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க, நிதி குத்தகைக்குவிடுதல் சட்டத்தின் 1ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, சனாதிபதியும், நிதி திட்டமிடல் என்ற விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சருமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆகிய நான், இக்கட்டளை மூலம், சொல்லப்பட்ட சட்டம் நடைமுறைக்கு வரவேண்டிய தேதியாக 2001 ஒகத்து 1ஆந் திகதியை நியமிக்கின்றேன்.*

*சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க*

*சனாதிபதி மற்றும் நிதி, திட்டமிடல் அமைச்சர்.*

கொழும்பு

*2001.08.01*

**1991ஆம் ஆண்டின் 23ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டம்**

*1991ஆம் ஆண்டின் 23ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் விடுக்கப்பட்ட பணிப்பு.*

(ஒப்) ஏ.எஸ். ஜயவர்த்தன

தலைவர்

நாணயச்சபை

இலங்கை மத்திய வங்கி

2001ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 30ஆம் நாளன்று, கொழும்பு.

1. இப்பணிப்பு, 2001ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (வட்டி) பணிப்பு என எடுத்துக் காட்டப்படலாமென்பதுடன், 1991ஆம் ஆண்டின் 23ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டத்தின் 2ஆம் பிரிவின் நியதிகளின்படி பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு நிதிக் கம்பனிக்கும் ஏற்புடையதாதலுடன் உடனடியாக நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. (அ) ஏதேனும் நிதிக் கம்பனியொன்றினால் ஏதேனும் காலாண்டுப் பகுதியொன்றினுள் ஏற்றுக் கொள்ளப்பட்ட அல்லது புதுப்பிக்கப்பட்ட வைப்பொன்றின் மீது செலுத்தப்படக்கூடிய ஆகக் கூடிய வட்டி -

(i) அத்தகைய வைப்பு 12மாதகால அல்லது அதற்குக் குறைவான முதிர்ச்சியினைக் கொண்டிருந்தால் சம்பந்தப்பட்ட காலாண்டுக்கு உடனடியாக முற்போந்த காலாண்டுப் பகுதியில் 364 நாட்களுக்கு வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களுக்குப் பிரயோகிக்கப்படும் நிறையேற்றப்பட்ட சராசரி வருவாய்க்கு 3 சதவீதப் புள்ளிகளின் அதிகரிப்பினையும்

(ii) அத்தகைய வைப்பு 12 மாதங்களுக்கு மேற்பட்ட முதிர்ச்சிக் காலத்தினைக் கொண்டிருந்தால் சம்பந்தப்பட்ட காலாண்டுக்கு உடனடியாக முற்போந்த காலாண்டுப் பகுதியில் 364 நாட்களுக்கு வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களுக்குப் பிரயோகிக்கப்படும் நிறையேற்றப்பட்ட சராசரி வருவாய்க்கு 6 சதவீதப் புள்ளிகளின் அதிகரிப்பினையும்

விஞ்சக்கூடாது.

(ஆ) முதிர்ச்சியின் போதான மீட்புப் பெறுமதியினைவிடக் குறைவான விலைகளில் ஏதேனும் காலாண்டுப் பகுதியொன்றினுள் முறியொன்றின் அல்லது வேறு ஏதேனும் உபகரணத்தின் விற்பனையின் மீது நிதிக் கம்பனியொன்றினால் அனுமதிக்கப்படக்கூடிய ஆகக் கூடிய கழிவு வீதமானது உந்த உபகரணத்தின் மீதான ஆகக்கூடிய வருவாய் -

(i) அத்தகைய முறி அல்லது உபகரணம் 12 மாத அல்லது அதற்குக் குறைவான முதிர்ச்சிக் காலத்தினைக் கொண்டிருந்தால் சம்பந்தப்பட்ட காலாண்டுக்கு உடனடியாக முற்போந்த காலாண்டுப் பகுதியில் 364 நாட்களுக்கு வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களுக்கு பிரயோகிக்கப்படும் நிறையேற்றப்பட்ட சராசரி வருவாய்க்கு 3 சதவீதப் புள்ளிகளின் அதிகரிப்பினையும்

(ii) அத்தகைய முறி அல்லது உபகரணம் 12 மாதங்களுக்கு மேற்பட்ட முதிர்ச்சிக் காலத்தினைக் கொண்டிருந்தால் சம்பந்தப்பட்ட காலாண்டுக்கு உடனடியாக முற்போந்த காலாண்டுப் பகுதியில் 364 நாட்களுக்கு வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களுக்கு பிரயோகிக்கப்படும் நிறையேற்றப்பட்ட சராசரி வருவாய்க்கு 6 சதவீதப் புள்ளிகளின் அதிகரிப்பினையும்

விஞ்சக்கூடாததானதாகும்.

3. இப்பணிப்புரை வெளியிடப்பட்ட நாளன்று அல்லது அதற்குப் பின்னர் ஏற்றுக் கொள்ளப்பட்ட அல்லது புதுப்பிக்கப்பட்ட வைப்புக்களுக்கும் விற்பனை செய்யப்பட்ட முறிகள் மற்றும் ஏனைய உபகரணங்களுக்கும் மட்டுமே இப்பணிப்புரை பிரயோகிக்கப்படும்.

4. 1991இன் 13ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (வட்டி) பணிப்பு இத்தால் கைமீட்புச் செய்யப்படுகின்றது.